மனசு : ஸ்டாப் திஸ் நான்ஸென்ஸ்! இந்தப் பத்திரிகை இதழைப் பத்திப் பேசச் சொன்னேன் சுசி.



சுசி : ஸாரி, நான் புதுசுதானே, அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க! முதல்ல நான் வழங்கற நாவல்: பதில் தா பரத்! இந்தக் கேஸ்ல குற்றவாளியை நாங்க நெருங்குற மாதிரி இருக்கும். விலகிடுவோம். மறுபடி நெருங்குவோம். புதுசா லவ் பண்ற ஜோடி முதல் முத்தம் வரைக்கும் இருப்பாங்களே ஒரு 'விலகி நெருங்கி நிலை' அந்த நிலை! கடைசில பரத் பதில் தந்தாரா? படிங்க, தெரியும்.

மனசு : சபாஷ் சுசி! இப்பதான் உருப்படியா, ஒரு நல்ல உதாரணம் சொல்லிருக்கே. வார்ம்-அப் ஆயிட்டேன்னு நினைக்கிறேன்.



சுசி : இதைப் படிக்கிற எல்லாருக்கும் ஒரு விண்ணப்பம். தயவுசெஞ்சி இந்தப் புத்தகத்தை ஓசியில் படிக்காதிங்க. என் மேல அபிபானம் உள்ள ஒவ்வொருத்தரும் விலைக்கு வாங்குங்க. தொடர்ந்து வாங்குங்க. எப்படி மனசு?

மனசு : எல்லாம் சரி. அதென்ன குளிர்பானம் மாதிரி அபிபானம்னுட்டே? அது அபிபானம் இல்லை, அபிமானம்!

சுசி : மீண்டும் அடுத்த இதழில் இதேப் பகுதியில் உங்களை சந்திக்கும் வரை 'ஹாய்' சொல்லி விடை பெறுவது: உங்கள் 'டேக் இட் ஈஸி' சுசி!



# பதில் தா பரத்

பட்டுக்கோட்டை பிரபாகர்

# பதில் தா பரத்

## பட்டுக்கோட்டை பிரபாகர்



**1**

மலைகளில் ராணி ஊட்டியின் மகள் மலைகளில் இளவரசியான, மேற்குத் தொடர்ச்சி மலைகளின் தவப்புத்ரியான, கடல் மட்டத்திலிருந்து இரண்டாயிரத்துச் சொச்ச மீட்டர்கள் உயரத்தில் உள்ள, நகரும் மலைப்பாம்பின் நெளிவுகளாய் நாற்பத்தெட்டு கிலோ மீட்டர்



களுக்கு மலைப்பாதை கொண்ட, உள்ளங்கையும், விரல்களும் போன்ற அமைப்பில் அமையப் பெற்ற ஏரியும், அதில் மிதக்கும் படகுகளும் (டு சீட்டர் பெடல் போட் 30 நிமிடங்களுக்கு ரூபாய் 10. பெடானிட் ரூபாய் 10) கொண்ட, இத்தனை வரிப் புதிர்களில் அநேகமாய் நீங்கள் கண்டுபிடித்துவிட்ட, இன்னும் கண்டுபிடிக்காதவர்களுக்கு கடைசி க்ளுவானது: நமது சென்னை தொலைக் காட்சியின் பவர்ஃபுல் ஒளிபரப்பு கோபுரம் நிறுவப்பட்டுள்ள... யெஸ் கொடைக்கானலேதான்.

மதியம் மூன்று மணி வரை நன்றாய் இருந்த மேகங்களுக்கு மூன்று மணி ஒரு நிமிடத்திற்கு ஜலதோஷம் பிடித்து முகம் கறுக்கத் தொடங்கின. வருக வருகவென்று மழைக்கான வரவேற்பு. பச்சைக் கொடியசைப்பாய் மரங்களின் தலையசைப்பு. தூரத்தில் புறப்பட்டது ஊரையே கவ்வும் பனிப்பிசாசு.

க்ரீன் வேலி வ்யூ காட்டும் மரணப் பள்ளத்தாக்கு அருகே பஜ்ஜி போடுவதை நிறுத்தினார்கள். சோளம் வறுப்பதை ஒத்தி வைத்தார்கள். பையன் குளிர்பான பாட்டில்களைத் தூக்கி தற்காலிகக் கடைக்குள்ளே வைத்தான். போலீஸ் விசில் ஊதி டூரிஸ்ட்களை விலகச் சொன்னது. தத்தமது கேமிராக்களை லெதர் கவர் போட்டு மூடி, மனைவியின் தோள்களை இறுக்கிக் கொண்டு பயணிகள் தங்கள் வாகனங்களுக்கு விரைந்தார்கள்.

சாலைக்கு அந்தப் பக்கம் பராமரிக்கப்பட்ட கோல்ஃப் கிளப்பின் பச்சைப் புல்வெளிச் சறுக்கலில் ஸ்வெட்டர் அணிந்த பெரிய கைகள் விளையாட்டை முடித்துக் கொள்ளத் தீர்மானித்தார்கள்.

விபுநாத் கடைசி கடைசியாய் அந்தப் பந்தை ஸ்டிக்கால் நிதானம் பார்த்தார். இரண்டு செல்ல ஓங்கல்களுக்குப் பிறகு அதைக் கொடுக்க வேண்டிய அழுத்தத்துடன் மண்டையில் தட்ட அது எகிறிப் பறந்து விழுந்து, உருண்டு, ஹோல் அருகில் தவழ்ந்து விளிம்பில் தயங்கிவிட்டு லொடக் என்று உள்ளே விழுந்ததும்... சகலரும் கைதட்டினர்.

"ஃபண்டாஸ்டிக் விபுஜி!"

விபுநாத் ஸ்டிக்கைப் பையன் முதுகில் சுமந்த ஸ்டிக் பேகில் நுழைத்துவிட்டு டவல் எடுத்து கழுத்தில் இல்லாத வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

"நான் புறப்படறேன்" ரிஸ்ட் பாண்டையும், பீக் தொப்பியையும் கழற்றிப் பையன் மேல் எறிந்துவிட்டு ஸ்வெட்டர் உள் பாக்கெட்டில் இருந்து சிகரெட் கேஸ் எடுத்து, பற்றவைத்து, அது முடிய இருந்த போது தன் கான்டெஸா அருகில் இருந்தார்.

டிரைவர் பின் கதவை மகா மரியாதையாகத் திறந்து வைத்துக் கொண்டு காத்திருந்தான்.

விபுராத் எதிலும் காதலியைப் போலக் கதவைக் கையாண்டு மூடிவிட்டுத் தன் வீட்டில் அமர்ந்து புறப்பட்டான்.

மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்ட விபுராத்திற்கு போன் விழா வைத்து நெருங்குகிறது என்பதை பார்ட்டிக்கேட்டைப் பார்த்த பிறகுதான் நம்ப முடியும். தலையில் ஒரே ஒரு கற்றை தலைமயிர் சாமர்த்தியமாக டை பூசி, புருவங்களுக்கு லேசாக மை போட்டு, மீசையில் செம்பட்டை முடிகளை பார்த்துப் பார்த்துப் பிடுங்கி, தினம் ஷேவ் செய்து தன்னை முப்பதுகளைத் தாண்டி யாரையும் மதிக்க விடுவதில்லை.

கொடைக்கானலில் அதிகமான ஏக்கர் பரப்பில் தோட்டம் யார் வைத்திருக்கிறார்கள்? விபுராத்!

கொடைக்கானலில் உள்ள ஹோட்டல் காண்டினெண்டல் (பார் அட்டாச்டு) யாருடையது? விபுராத்துடையது.

கொடைக்கானல் ரோட்டரி கிளப் பிரசிடெண்ட் யார்? விபுராத்!

கொடைக்கானலில் நான்கு கார்கள் யார் வைத்திருக்கிறார்? விபுராத்!

கொடைக்கானலில் பாட்டில் ஜூஸ் மற்றும் பாக்கெட் ஜூஸ் தொழிற்சாலையின் அதிபர் யார்? விபுராத்!

கொடைக்கானலில் ஒன்றரை லட்சம் விலை கொடுத்து ரேஸ் குதிரை வாங்கி வைத்திருப்பவர் யார்? விபுராத்!

கொடைக்கானலில்... போதும் எனக்கே போர் அடிக்கிறது.

இத்தனை சொத்துகளில் பாதிக்கு மேல் விபுராத்தின் தந்தை சேகரித்து வைத்துச் சென்றது. மீதி இவர் பெருக்கியது. அதுவும் கடந்த நான்கு வருடங்களில். அதிவேக முன்னேற்றம்.

காரணம் : ஜெரேனியம்!

அணு ஆராய்ச்சிக்கு யுரேனியம் எவ்வளவு முக்கியமோ அப்படி சில மருந்துகளின் தயாரிப்பில் மற்றும் செண்ட் தயாரிப்பில் முக்கிய மூலப் பொருட்களில் ஒன்று இந்த ஜெரேனியம் ஆயில்!

ஜெரேனியம் செடி வளர்த்து, பராமரித்து, இலை பறித்து அதன் பிறகு கிட்டத்தட்ட சாராயம் காய்ச்சுவது போல ஒரு ப்ராஸஸில் சொட்டுச் சொட்டாகக் கிடைக்கும் ஜெரேனியம் ஆயில் ஒரு கோல்டன் ப்ராஜெக்ட்!

முறையான லைசென்ஸ் பெறாமல், எக்ஸைஸ் வரிகள் கட்டாமல் இதைச் செய்தால்.... டயமண்ட் ப்ராஜெக்ட்!

விபுராத் இப்போது பிரதான தொழிலாக இந்த நிழல் காரியத்தைத்தான் செய்து வருகிறார். டிபார்ட்மெண்டில் சில சில்லறை தேவதைகள் முறுமுறுக்கும் போதெல்லாம் அவர்



களின் வாயில் நூறு ரூபாய் சலவை நோட்டுகளாக உண்டியல் போட்டு விடுவதில் கில்லாடி.

விபுராத்தின் குணநலனை ஒரே வரியில் சுருக்கி வரைய என உத்தரவிட்டால் இந்த பூமி உருண்டையே தனது கால் கட்டைவிரலுக்குக் கீழேதான் சுழல்கிறது என்று நினைப்பவர்.

குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குப் போகும் வழியில் இருந்த அவரது பங்களாவின் போர்ட்டிகோவில் கார் நின்ற போது லேசித் தூறலாய் மழை தொடங்கியிருந்தது.

நான்கு கிரவுண்ட் விஸ்தீரணத்தில் கட்டப்பட்டிருந்த நவீன பங்களா. மார்பிள், மொசைக், டைல்ஸ், அலுமினிய பிரேம்கள், குளிர் கண்ணாடிகள், சாண்டிலியர்கள், அலங்கார கட்அவுட்கள், விலை உயர்ந்த ஃபர்னிச்சர்கள் என்று இலக்கணம் மீறாமல் இருந்தது.

உள்ளே வந்த போது, கணப்பு அருகில் ஆடும் நாற்காலியில் அமர்ந்து வீடியோவில் ஆங்கிலப் படம் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜெயராணி. மனைவி. சுரிதார், கத்தரிக்கப்பட்ட கூந்தல், மழித்து விட்டு வரையப்பட்ட புருவங்கள், இமைகளில் மஸ்காரா, கன்னங்களில் ரூஜ், உதடுகளில் லிப்ஸ்டிக் கோட்டிங்குடன் வீடியோ ஒளியில் அணியாத சுரிதாரின் டாப் பீஸ் இறக்கமாக வெட்டப்பட்ட கழுத்து. அதன் திறப்பில் லேசாகத் தெரியும் கறுப்பு உள்ளாடை. திருமண வயதில் ஒரு மகனும், ஒரு மகளும் உள்ள ஓர் அம்மா என்கிற கசப்பான உண்மையை இத்தனை செயற்கைக் காரியங்களில் மழுப்பிவிட முனைந்திருந்தாள்.

"ஹாய் டார்லிங்" என்றாள் ஜெயராணி.

விபுராத் அவளை அணுகி, கை எடுத்து புறங்கையில் முத்தமிட்டு, "நாளைக்கு திருச்சூர் வரைக்கும் போகணும் ஜெயா! எதுவும் போன் வந்ததா?" என்றார். அருகே நாற்காலி இழுத்து அமர்ந்தார்.

"இல்லைங்க"

"கதிர் மஞ்சக்கு வந்தானா?"

"வரலை. பாக்டரிக்கு அனுப்பச் சொல்லி போன் செஞ்சான் அனுப்பி வச்சேன்."

"நல்ல ஜும் கொடைக் ஹோப்பி வித் நம்ம காலேஜ் முடிச்சுட்டு வந்ததும் எதிலும் ஒட்டாமத் தடுமாறிட்டிருந்தான். இப்பதான் ஒரு மாசமா ஃபாக்டரி நிர்வாகத்தில் ஆர்வம் காமிக்கிறான்."

"பிஸினஸ் புலிக்குப் பிறந்தது இன்னொரு பிஸினஸ் புலியாகத்தானே ஆகும்?"

"ஆகுமான்னு நான் பட்ட கவலை எனக்குத் தானே தெரியும்? நம்ம தோட்டம் எல்லாம் சுத்திப் பாருடான்னா, முதல்ல

முருகனோட, எல்லாத் திருத்தலங்களுக்கும் யாத்திரை போய்ட்டு வர்றேன்னாரே... எனக்கு பக்குன்னு ஆய்டுச்சு. விட்டிருந்தா காவி கட்டியிருப்பார். நல்லவேளை, மாத்தி நம்ம வழிக்குக் கொண்டாந்துட்டேன். எங்கே ஆர்த்தி?''

''மாடில பில்லியர்ட்ஸ் ரூம்ல விளையாடிக்கிட்டிருக்கா. சிரிப்பு சத்தம் கேட்கலை?'' கவனித்துக் கேட்டது. கூடவே ஓர் ஆணின் சிரிப்பும்.

''கூட யாரு மனோகரா?''

''போன வாரத்தோட அவனைக் கழட்டி விட்டுட்டாளாம். இவன் புது ஃப்ரெண்டு. பப்லுன்னு பேராம். ஆர்த்திக்கு ட்ரெண்ட் லேட்டஸ்ட் மாடல். ஃப்ரெண்ட்ஸ்ல எல்லாத்தையும் மாத்திக்கிட்டே இருக்கணும். நீங்க கண்டிச்சாத்தானே?''

''ஸில்லி! எதைக் கண்டிக்கிறது? இதிலே கண்டிக்கிறதுக்கு என்ன இருக்கு? அப்பா ரத்தம்தானே பொண்ணுக்கும் ஓடும்? இன்னைக்கு எர்லி தர்ட்டீஸ், உன்கிட்டே எத்தனவே சொல்லியிருக்கேனில்லே. ஒரு பந்தயம் மாதிரி வச்சுக்கிட்டு ஒரு நாள் - நாலு பேர் நம்ம ஹோட்டல்லதான் மணிப்பூர் ஷில்லாங்லேர்ந்தெல்லாம் பொண்ணை வரவழைச்சு...''

மென்மையாகச் சிணுங்கினாள் ஜெயராணி. ''கஷ்டம்! கஷ்டம்! உங்க ப்ளேபாய் சாதனைகளை என்கிட்டே சொன்னதோட விடுங்க. ஆர்த்திகிட்டே சொல்லிடாதீங்க.''

''தப்பு பண்றே! அடுத்த தலைமுறை நம்மைவிட சூப்பர் ஃபாஸ்ட்! எது தெரியாது அவங்களுக்கு? ஆர்த்தி அன்னைக்கு அவ ஃப்ரெண்டு யார் கூடவோ போன்ல பேசறதைக் கேட்டேன், வாட்டர்ல பிரசவம், கருத்தடை மாத்திரை, ப்ரெஸ்ட் கான்சர் தரும்னு பத்து வயசு அதிகமான பேச்சு பேசிக்கிட்டிருக்கா. யூ சீ ஜெயா! தனி மனித சுதந்திரம் ஈஸ் சம் திங் கிரேட். அதிலே யாரும் தலையிடக் கூடாது. அவளுக்கு கெட்டது, நல்லது ரெண்டும் தெரியும். நீயோ, நானோ பாடம் நடத்த வேண்டியதில்லை. சந்தோஷமா இருக்காளான்னு பாரு. அதான் முக்கியம். ப்ளஸனா தலையிடவே இடாதே. வாடிப் போய்டுவா''.

அருகே பித்தளை ஸ்டாண்டில் போன் ஒலித்தது.

விஜூராத் எழுந்து எடுத்த போது, மாடியிலிருந்து சிரிப்புச் சத்தம் வெள்ளமாக வழிய, ''ஆர்த்தி கண்ணா! கொஞ்சம் மெதுவா... டாடி போன் பேசணும்'' என்று கத்தி விட்டு, ''ஹலோ'' என்றார்.

எதிர்முனை பேசப்பேச... இவர் முகம் மாறிக் கொண்டே வந்தது மோசமாக.



# 2



பப்லு தலையை ஏறக்குறைய மொட்டையடித்திருந்தான். காந்தி கண்ணாடி கூலிங்கிளாஸ் அணிந்திருந்தான். மீசையை மழித்திருந்தான். கழுத்தில் மெல்லிய சங்கிலியில் டாலராகத் தங்கத் துப்பாக்கி, காதுகளில் ஷியரில் போன் மாட்டி, இடுப்பில் பெல்ட்டில் செருகின வாக்மேனில் இருந்து இசை குடித்துக் கொண்டிருந்தான். புஸ் புஸ் என்று சிலிர்த்துக் கொண்டதைப் போன்ற ஒரு ஓவர் கோட் அணிந்திருந்தான்.

விஜூராத் வீட்டின் பில்லியர்ட்ஸ் ரூம் ஜன்னல் கண்ணாடி வழியாக, சீராகப் பெய்யும் மழையை ரசித்தான்.

பில்லியர்ட்ஸ் மேஜையில் கவிட்டி நடுவில் ஸ்டிக் வைத்துக் குனிந்து பந்தையும், பந்தையும், தனெட் செய்து கோணம் பார்த்துக் கொண்டிருந்தாள் ஆர்த்தி. ஸ்டோன் வாஷ் பேண்ட். அதிலேயே காலர் வைத்த ஆம்பளைச் சட்டையை இடுப்பில் முடிச்சிட்டிருந்தாள். முகத்தில் சரியும் வெல்வெட் கூந்தலை, கழுத்தை வெட்டி, வெட்டிப் பின்னால் தள்ளினாள்.

''பப்லு! என்ன பார்க்கறே அங்கே?

பப்லு திரும்பி, குன்றத் நிலையில் இருந்த அவளைப் பார்த்துக் கண்ணடித்து, ''வாவ்! என்கிட்டே ஒரு கேமிரா இல்லையே இப்போ'' என்றான்.

''எதுக்கு?''

''இரு. இரு. நிமிராமப் பேசு.''

குனிந்து தன் சட்டையின் மேல் பித்தான் கழன்றிருப்பதைப் பார்த்துக் கொண்டு ஒரு பந்தை எடுத்து அவன் மேல் எறிந்தாள். ''நாட்டி. எல்லாப் பசங்களுக்குமே மனசு டர்ட்டிதான்.''

அதைக் கேட்ச் பிடித்து, ''டர்ட்டியா இது, ப்யூட்டிக்னமெட். பாரு எவ்வளோ ஜிகிர்னு இருக்கு. ஒரு ஸ்டஃப்ட் சிகரெட் அடிச்சுட்டு இந்த மழையில நனைஞ்சிக்கிட்டு குதிரைல போற மாதிரி கற்பனை செஞ்சு பாரு!''

''எதுக்கு கற்பனை செய்யணும் பப்லு? உன்கிட்ட சிகரெட் இருக்கு. என்கிட்டே குதிரை இருக்கு. மழையும் இருக்கு. கமான்யா, போகலாம்.''

''ஷ்யூர்?''

''ஷ்யூர். எனக்கு இந்த வீட்ல கேள்விகளே இல்லை பப்லு!''

''முதல் தடவையா உன் வீட்டுக்கு வர்றதாலே எனக்குச் சில கேள்விகள் இருக்கு ஆர்த்தி! இதெல்லாம் என்ன?

பங்களாவின் வலது பகுதியில் சின்ன சின்னதாய் இருந்த வீடுகளைக் காட்டிக் கேட்டாள்.

''முன்னாடி இருக்கிற பெரிய வீடு எங்க தோட்ட ஆபீஸ். அக்ரிகல்ச்சரல் ப்ராடக்ட்ஸுக்கு மட்டும். மத்ததெல்லாம் ஸ்டாஃப் குவார்ட்டர்ஸ். இந்த வீட்ல வேலை பார்க்கிற ஏழு பேருக்கும் தனித்தனியா கொடுத்தாச்சு. பின்பக்கம் குதிரை லாயம் இருக்கு. ஆறு குதிரைகள் காபிக்கிறேன். ரைட் சைடுல கார் ஷெட். வேற என்ன தெரியணும்?''

''உன் லைஸ - பிரசன்ட் பண்றதுக்காக!''

''டோன்ட் பி ஸில்லி. வா''

ஆர்த்தி ஸ்டாண்டில் மாட்டின தன் ஸ்வெட்டரை எடுத்து அணிந்து கொண்டாள். கூந்தலைச் சேகரித்து கலர் நாடாவால் கட்டிக் கொண்டாள்.

அதற்குள் பப்லு இரண்டு சிகரெட்களை உதட்டில் வைத்து ஒருசேரப் பற்ற வைத்து, ஒன்றை நீட்ட, வாங்கிப் புகைத்தாள். கிராமின் முதல் மயக்க, மிதப்பு எல்லாம் ஆரம்பித்த இரண்டு வருடங்களுக்கு முன்புதான். இப்போதெல்லாம் ஒரு முழு சிகரெட் முடிந்தால்தான் லேசான மிதப்பு வருகிறது அவளுக்கு.

இரண்டு பேரும் சிகரெட் முடித்து, பெப்பர்மின்ட் சுவைத்துக் கொண்டு கைகோர்த்து படிகளில் இறங்கினார்கள். விராடிகளில் அந்த வெள்ளை, பிரௌன் குதிரைகளில் நனைந்து கொண்டே புறப்பட்டார்கள்.

## 3



பங்களாவின் அருகிலேயே இருந்த அந்த தோட்ட அலுவலகத்தின் தனியறையில் ஏர்கண்டிஷனர் வெப்பம் நிறைத்துக் கொண்டிருக்க, சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்தார் விபுநாத். எதிரே சோமன்.

சோமன்-மேனேஜர். டை கட்டி, கோட் அணிந்தவன். முப்பத்தி இரண்டு வயசு; முப்பத்தி இரண்டு பற்கள். லிப்ஸ்டிக் தீற்றினது போன்ற உதடுகள். மேலுதட்டிற்குக் குடை பிடிக்கும் மீசை. செவேல் சிவப்பு, தாய் மாநிலம் கேரளம். அதனால் மலையாளம் தூவின தமிழ். விபுநாத்தின் கறுப்புக் காரியங்கள் யாவும் அறிந்த நம்பிக்கையான ஆசாமி. சோமனுக்கு சம்பளம் என்பது பெயரளவுக்குத் தான். குடும்ப உறுப்பினர் போல பங்களாவில் இருந்து அவன் குவார்ட்டர்சுக்கு சாப்பாடு போகும். எந்த நேரமும் கார் சாவி வாங்கிப் புறப்படுவான். அவனுக்கென ஒரு பெஸ்டி



தோட்டத்திற்கு மட்டுமல்ல; அந்த வீட்டிற்கும் அவனே ஜெனரல் மேனேஜர். எதுவாயினும் ஜெயராணி, சதிர், ஆர்த்தி இண்டர்காமில் இவனிடம் சொல்வார்கள்.

''சோமன்! வீடியோ கேஸட்ஸ் மாத்திட்டு வாயேன்.''

''சோமன்! சி.எல்.எஸ்.ல. அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாறு புத்தகம் இருந்தா வாங்கித் தாயேன்.''

''சோமன்! டாடி, மம்மிக்குத் தெரியாம ஒரு பாக்கெட் சான்ஸலர் சிகரெட் வாங்கிட்டு வந்து தா.''

சோமன் கைகளைக் கட்டி நின்றிருந்தான். கவலை தடவின முகத்துடன் விபுநாத்.

''தகவல் சரியானதுதானா சார்?''

''ரொம்ப சரியானது சோமன்.''

''ரெய்ட் என்னைக்காம்? கேட்டீச்சே சார்?''

''நாளன்னைக்குக் காலையில. முப்பது ஆபீஸர்ஸ் வர்றாங்களாம். ஒரே நேரம் நம்ம ஃபாக்டரி, தோட்டம், வீடு, ஹோட்டல், குடோன் எல்லா இடத்திலேயும் சோதனை போடப் போறாங்களாம். பணத்தால சமாளிக்கிறது கஷ்டமாம். ஏன்னா எழுத்துப் பூர்வமா ரொம்ப சரியான தகவல்கள் போயிருக்குதாம். ஜெரேனியம் பயிர் செஞ்சிருக்கிற நிலத்தை மேப்பாவே வரைஞ்சி அனுப்பியிருக்காங்களாம்.''

''அவ்வளவு தூரத்துக்கு உங்களுக்கு எதிரா யாரு... ஈஜோலி செய்யும்?''

''பண்ணைக்காடு மேகநாதன். அதையும் சொல்லிட்டாரு அந்த அதிகாரி. இப்படி ஆதாரத்தோட காப்பி டு சீஃப் மினிஸ்டர்னு போட்ட புகார் அனுப்பி வச்சிருக்கிறதாலே ஆக்ஷன் எடுக்காம தவிர்க்க முடியாதுன்னார்.''

''ஆயாளுக்கு என் இந்தத் தொழுப்பு வேலை?''

''ஒரு பர்சனல் மேட்டர் சோமன்! ஒரு மாசம் முன்னாடி அவன் நம்ம ஆர்த்தியை தன் பையனுக்கு பொண்ணு கேட்டு முன்னறிவிப்பு இல்லாம வந்துட்டான், ரொம்ப நம்பிக்கையா. நம்ம ஸ்டேட்டஸுக்கு கால்வாசி உயரம்கூட வரமாட்டான். அவனுக்கு அப்படி ஓர் ஆசை. நான் நாசுக்கா மறுத்தேன். மிரட்டற மாதிரி தொனியில பேசினான். கோபமாய்டுச்சு. எழுந்திரிச்சுப் போயான்னு சத்தம் போட்டுட்டேன். இன்னையோட உனக்கு நான்தான் எதிரின்னு சவால் மாதிரி பேசிட்டுப் போனான். இப்போ முதல் கட்டமா தன் வேலையை ஆரம்பிச்சிருக்கான். அவனை...''

''சாரே அது அப்புறம். இப்போ நாம் என்ன செய்யப் போறோம்?''

''யெஸ். இப்போ அதுதான் முக்கியம். நடுவிலே ஒரே நாள்தான் இருக்கு சோமன்! ஆனா ஒரு நாள்ல எதுவும்

"செய்யலாம். வர்ற எலெக்‌ஷன்ல சீட் கேட்டிருக்கேன். அதுக்கு நடுவிலே போலீஸ் கேஸ் எதுவும் கூடாது. தவிர்த்தே ஆகணும். கொஞ்சம் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. எத்தனை கேன் கைவசம் ஸ்டாக் இருக்கு சோமன்?''

''அம்பது லிட்டர் கேன்ல இருபத்தி ஏழு கேன் இருக்கு சார். மார்க்கெட் வேல்யுல அரை கோடி தாண்டும். எனக்கு ஏதும் புரியலை.''

''அதை கைப்பற்றாம விடமுடியுமா சோமன்? காசாக்கி யாகணும் அர்ஜெண்டா.''

''ஒரேநாள்ல அவ்வளவும் விக்கிறதுன்னா... வலிய சிரமமாகும் சாரே!''

''முடியும். நான் வித்துக் காமிக்கிறேன்.''

விபுநாத் போன் எடுத்தார். எஸ்.டி.டி. கோட் எண்களை சுழற்றி, பிறகு ஓர் எண்ணையும் சுழற்றி, ''ஹலோ விபுநாத் பேசறேன். ஜீவா! எப்படி இருக்கீங்க?''

''ஃபைன் சார்!''

''சிக்மகளூர் காப்பி எஸ்டேட் ஒண்ணு பேசிகிட்டிருக்கேன். பெரிய தொகையா தேவைப்படுது அர்ஜெண்டா. ஆசிட் வேணுமா? லாட்டா தர்றேன். லிட்டருக்கு இருநூறு ரூபா வெளிவிலையைவிடக் குறைச்சுத் தர்றேன்.''

''எவ்வளவு இருக்கு?''

''இருபத்தி ஏழு கேன்''

''அம்மாடி! அவ்வளவுக்கு உடனே புரட்ட முடியாதே. செக் வாங்க மாட்டிங்களே. கேஷா கேப்பிங்களே...''

''லைசன்ஸ் எடுத்து முறையான வியாபாரம்னா செக் வாங்கலாம். நம்பிக்கைக்காக இல்லை. இதிலே சிக்கல் வரும். ஜீவா உங்களால முடியாததா? ரெண்டே நாள்ல கைமாத்தி விட்டுட மாட்டிங்களா நீங்க?''

''ரைட். சமாளிக்கிறேன். இருநூறு சொன்னிங்க. இருபத்தி ஐம்பதாக் குறைங்க. ஒரு லிட்டருக்கு. ப்யூரா இருக்குமில்லே?''

''என்ன ஜீவா! நம்மகிட்டே இதான் முதல் டீலிங்கா? ஓர் அவசரத் தேவைக்காக விக்கறேன். அடுத்த மாசம் இருநூறு ரூபா ஏறும்னு எனக்குத் தெரியும்.''

''எப்போ அனுப்பறீங்க?''

''இன்னிக்கு ராத்திரி வேன் புறப்படும். நாளைக்குக் காலைல உங்ககிட்டே இருக்கும்.''

''யாரை அனுப்பறீங்க? சோமனை?''

''இல்லை, நானே வர்றேன்.''



விபுநாத் போனை வைத்து விட்டுச் சிரித்தார். ''சோமன்! சித்தாசகா! நானே வர்றதா சொல்லிருக்கேன். நான் போய்ட்டு வர்றதுக்குள்ளே நீ என்ன செய்யறே. மூணு ஏக்கர் ஜெரேனியத் தையும் ராத்திரியோட பெட்ரோல் ஊத்திக் கொளுத்திடு. உழுது ரெடிடு வர்றப்போ உருளைக் கிழங்கு போட உழுது வச்சிருக் கோம்னு சொல்லலாம். என்ன?'' விபுநாத் மீண்டும் சிரித்தார். சோமனும் சரி என்றான்.

# 4



பாதர் ரொஸாரியோ, சர்ச்சில் மாலை நேரப் பிரார்த் தனைகளை முடித்துக் கொடுத்துவிட்டு தனது தங்குமிடம் வந்து முகம் கழுவி வேறு வெள்ளை அங்கியணிந்து இடுப்பில் பட்டை கட்டி, மேலே ஸ்வெட்டர் அணிந்து கொண்டார்.

பிறகு, கண்ணாடியைப் பார்க்காமலேயே தன் தலையை வாரிக் கொண்டார். பைபிள் எடுத்து ஒரே ஒரு பக்கம் படித்துவிட்டு மூடி வைத்துவிட்டு இரவு சாப்பாட்டிற்கு என்ன தயாரிக்க வேண்டும் என்று பணியாளரிடம் சொல்லிவிட்டு தனது லேடீஸ் மாடல் பார் வளைந்த சைக்கிளில் ஏறி அமர்ந்தார்.

அவர் இடத்திலிருந்து முக்கிய சாலைக்கு ஒரே இறக்கம். அதனால் பெடல் செய்ய அவசியமின்றி வேகமாய் இறங்கியது வண்டி.

செவன் ரோடு வந்து பாதை மாறினார்.

விபுநாத்தின் பங்களாவின் வாசலில் சைக்கிளை நிறுத்தினார். வெளிப்பட்ட வேலைக்காரனை. ''கதிர் இருக்காரா?'' என்றார்.

''இருக்கார் அய்யா! வாங்க.''

ரொஸாரியோ உள்ளே வந்தபோது எதிர்ப்பட்டாள் ஜெயராணி.

''குட் ஈவினிங் ஃபாதர்! கதிர் உங்களை எதிர்பார்த்து மாடில வெய்ட் பண்றான். வழக்கம் போல ஏலக்காய் போட்ட ஸ்பெஷல் டீ அனுப்பி வைக்கிறேன்.''

''தாங்க் யூ'' என்று புன்னகைத்தது வெண் தாடிக்குள் காணாமல் போனது. ''விபுநாத் ஊர்லதானேம்மா?''

''ஆமாம். இன்னைக்கு ராத்திரி மைசூர் போறதா சொன்னார்.''

ரொஸாரியோ சிந்தனையாக, ''என்கிட்டே இன்னும் சொல்லலை. சொல்வார். வந்தா நான் மேலே இருக்கிறதாச் சொல்லுங்க.''

மாடிப்படிகள் ஏறி மேலே வந்து கதிரின் அறைக்கதவில் தட்டினார். உள்ளிருந்து சந்தன ஊதுவத்தியின் மணம் பிதந்து வந்தது. புல்புல்தாராவில் 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' வாசித்துக் கொண்டிருந்த கதிர் அதை நிறுத்திவிட்டு அவசரமாக எழுந்து, "வாங்க ஃபாதர்!" என்றான்.

"தொந்தரவு செஞ்சிட்டேனா கதிர்??"

"அப்போ! நீங்க வர்ற வரைக்கும் வாசிக்கலாம்னு எடுத்தேன் பாருங்க. தயாரா உங்களுக்காகக் காத்திருக்கேன்" கதிர் காட்டிய இடத்தில் தனி மேஜை மேல் விரிப்பு போட்டு அதன் மேல் செஸ் போர்டு. வெள்ளை, கறுப்பு காய்கள் முறைப்படி அடுக்கப்பட்டு இரண்டு புறங்களிலும் வேலைப்பாடுகள் கொண்ட இரண்டு மர நாற்காலிகள்.

ரொஸாரியோ வேறு நாற்காலியில் அமர்ந்து, "டீ சாப்பிட்டுட்டு ஆரம்பிக்கலாமே கதிர்! உன்னோட விளையாட வாரத்தில ஒரு நாள்தான் என்னால ஒதுக்க முடியுது. மத்த வேலைகள் நிறைய இருக்கு. இந்த கோட்டைக்காவல்ல இந்த அறிவு விளையாட்டுக்கு பார்ட்னர் கிடைக்காம தவிச்சுப் போயிட்டேன். எத்தனையோ பேரை அறிமுகமாகறப்போ எனக்கு செஸ் தெரியும்னாலும் சந்தோஷப்படுவேன். விளையாட அழைப்பேன். ஆரம்பிச்சு ஏழாவது மூவ்ல செக் அண்ட் மேட் கொடுத்துடுவேன். அதிலே த்ரில் என்ன இருக்கு? ஆனா நீதான் எனக்கு சரியான காம்படிடர். நினைவு இருக்கா கதிர்? போன மாசம் ஒரு கேமை மூணு நாள் தொடர்ந்து விளையாடினோம். உங்க வீட்ல எல்லாருமே சோம்பேறித்தனமான [illegible] விளையாட்டுகள் விளையாடறப்போ நீ மட்டும் எப்படி தப்பிப் பொறந்தே?"

"வளர்ந்தது இங்கே இல்லையே. அதான் காரணம். சின்ன வயசிலே பயங்கர சுட்டியாம் நான். அடக்க முடியாம திருச்சிக்குப் பக்கத்தில திருப்பராய்த்துறையில் கொண்டு போய் சேர்த்துட்டாங்க. அப்புறம் ஆறாவதிலிருந்து அமராவதிபுதூர்ல சைனிக் ஸ்கூல், டிகிரியும், பி.ஜி.யும் ஜெயில் காலேஜ்னு பேர்பெற்ற திருச்சி செயிண்ட் ஜோசப்ஸ் காலேஜ் அதனால, தப்பிப் பொறக்கலை. தப்பி வளர்ந்துட்டேன் ஃபாதர்!" என்ற கதிர்-

சற்று உயரக் குறைவாக ஐந்தடி, இரண்டங்குலமே இருந்தான். பூசினாற்போல உடம்பு. நெற்றியில் திருநீறு கீற்றல். டபுள் சின். பவர் 2.5 பவருக்காக கண்ணாடி. வகிடெடுத்து சீவின சுருள் தலை. முறம் போல பெரிய காதுகள். அமுல் கன்னங்கள். குழந்தையாய் இருந்த போது அவற்றைக் கிள்ளாத கைகளே இல்லை.

வாசலில், "எக்ஸ்க்யூஸ் மி" என்று குரல் கேட்க, திரும்பினார்கள்.

கையில் டீட்ரேயோடு உள்ளே வந்தார் விபுநாத். "ஈவினிங் ஃபாதர். இந்தாங்க டீ" என்றார்.



"இதை நீங்க எடுத்துட்டு வரணுமா?"

"தப்பில்லை ஃபாதர்! இப்போ நான் உங்களை சந்திக்க சர்ச்சுக்குப் புறப்பட்டுக்கிட்டு இருந்தேன். நீங்களே வந்துட்டீங்க. எப்ப வெளியூர் போனாலும் உங்ககிட்ட சொல்லாமப் போறதில்லையே. மைசூர் வரைக்கும் காரெடுத்துக்கிட்டு ஒரு முக்கியமான வியாபார வேலையா போறேன். ஆசீர்வதிக்கணும்."

ரொஸாரியோ காற்றில் சிலுவை வரைந்து அவர் தலையைத் தொட்டார். "காட் ப்ளெஸ் யூ. டிரைவரை அழைச்சிட்டுத் தானே போறீங்க?"

"ஆமாம்."

"நல்லபடியா போயிட்டு வாங்க."

"கதிர்! புறப்படறேன். நான் சொன்ன செக்கை நாளைக்கு முதல் காரியமா பேங்கல போட்டுடு. நாளைக்கு ராத்திரி அனேகமாத் திரும்பிடுவேன். தங்க வேண்டியதாயிருந்தா போன் செய்றேன்."

விபுநாத் புறப்பட்டுப் போனதும், ஃபாதர் ரொஸாரியோவும், கதிரும் செஸ் மேஜையில நாற்காலிகளில் அமர்ந்து செஸ் ஆடத் தொடங்கினார்கள்.

## 5

இரவு 9 குருகுளிளிசிர்ச்ச இரவு! 27 கேன் ஜெரேனியம் ஆயில் வேனில் புறப்பட்டது. அதற்கப்புறம் விபுநாத்தின் கார் புறப்பட்டது.

10 மணிக்கு தன் படுக்கையறை போனில் ஜெயராணி கீழ்க்கண்ட இரண்டு வார்த்தைகளைக் கேட்டாள்.

"சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கா?"

## 6.

மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்ஸீ.

மாதவி டைப் செய்து விட்டு விரல்களில் சொடக்கு படக், படக்கிக் கொண்டிருக்க, ரவி அன்றைக்குத் தபாலில் சேர வேண்டிய கவர்களை சிரத்தையாக ஒட்டிக் கொண்டிருந்தான்.

"என்னங்க சிஸ்டர்! நீங்களாச்சும் உதவி பண்ணக்கூடாதா?"

"என்ன ரவி, எதுவும் பணக் கஷ்டமா?"

"இல்லைங்க, கற்பனைக் கஷ்டம்! அறிவுக் கஷ்டம்!"

"புரியலையே."

"அந்தாங்க என் பிரச்சனை. ஜலஜா பாட்டுக்கு இங்கிலீஷ்ல லவ் லெட்டர் எழுதிக் கொடுத்துடறா. நானும் படிச்சவனாட்டம் வேஷம் போட்டுட்டேன். நம்ம மேட்டர் இதில தொல்லை பண்ணிட்டிருந் தாங்க. சார் கண்டிச்சார். அதிலேர்ந்து போடாவது டாங்க. இந்த லெட்டர்ல என்ன எழுதியிருக்கா? காமலல கொடுத்தா. பாருங் களேன்."

ரவி தன் பாக்கெட்டில் இருந்து எடுத்துக் கொடுக்க, மாதவி அவனை ஏற இறங்கப் பார்த்து, "லவ்வா? வயசு என்ன?"

"லவ்வுக்கா, அவளுக்கா?"

"படவா! உனக்கு! இன்னும் மீசைகூட முளைக்கல."

"அது பரம்பரை ராசிங்க. எங்க தாத்தாவுக்கும் மீசை இல்ல. அப்பாவுக்கும் இல்லை. வயசு பதினேழு முடிஞ்சு பதினெட்டு ஆச்சுங்க எனக்கு. வர்ற தேர்தல்ல ஓட்டு போடப் போறேன். லெட்டர்ல என்ன இருக்குன்னு சொல்லுங்க."

மாதவி அந்த நான்கு வரி ஆங்கிலக் கடிதத்தைப் படித்துவிட்டு உடனே சிரித்தாள். அடக்க முடியாமல் சிரித்தாள்.

"அப்போ! சிரிக்கச் சிரிக்க அப்படி என்ன எழுதியிருக்கா?"

"நீ ரொம்ப அழகா இருக்கேன்னு எழுதியிருக்கா. அவ ரசனையை நினைச்சு சிரிப்பு வந்துடுச்சு."

வெடுக்கென்று அந்தக் கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு முறைத்தான் ரவி.

"ரொம்ப சிரிக்காதீங்க. பல்லு சுளுக்கிக்கப் போகுது. நீங்க இந்த ஆபீஸ்ல சேரப்போ எப்படி இருந்தீங்க? அப்புறம் படிப் படியா, படிப்படியா சார் உங்களை எப்படி மாத்தினாருன்னெல் லாம் தெரியாதா?" என்று இவன் சத்தமாகச் சிரிக்கத் தொடங்க,

படீரென்று கதவைத் திறந்து கொண்டு தனியறைக்குள் இருந்து வேகமாக வெளிப்பட்டான் பரத் கோபமாக.

"நான்சென்ஸ்! இது ஆபீஸ்னு நினைச்சீங்களா, எஸ். வி. சேகர் நாடகம் நடத்தற தியேட்டர்னு நினைச்சீங்களா? ரொம்ப இடம் கொடுத்துட்டேன் உங்களுக்கு. ஒரு முக்கியமான போன் பேசிட்டிருக்கேன். மாதி, மாதி என்ன சிரிப்பு அப்படி? ஸில்லி!"

பரத் அதே வேகத்தில் கதவைச் சாத்திக் கொண்டு அறைக்குள் வந்து, சுழல் நாற்காலியில் அமர்ந்து, ஆஷ்ட்ரே பள்ளத்தில் செருகியிருந்த புகையும் சிகரெட்டை எடுத்துக் கொண்டு, தனியாகக் கிடந்த ரிசீவர் எடுத்து, "ஹலோ, இப்ப சொல்லுங்க. என்ன பேர் சொன்னீங்க, விநோபாபாவா?"



"வினிபா. உங்க ரசிகை சார். உங்களை ரொம்பப் பிடிக்கும் சார்! பரத்ங்கிற பேரை ஒரு தடவை உச்சரிச்சாலே காதில் தேன் வந்து பாய்ஞ்ச மாதிரி இருக்கும் சார்."

"அப்பா தமிழ் வாத்தியாரா?"

"கரெக்ட் சார்!"

"நினைச்சேன். எதுக்கும் நீங்க தூங்கறதுக்கு முன்னாடி காதைக் கழுவிடுங்க. நடுராத்திரில எறும்பு வந்து கடிக்கும்."

"உங்ககிட்ட எனக்குப் பிடிச்சது இந்த ஜோக்தான் சார்."

"அப்படியா ஜனிபா? ஸாரி... வினிபா! உங்களுக்கு எலாஸ்டிக் எடுத்து குருவி அடிக்கிற கலை தெரியுமா? இல்லை. வேணாம். முதல்தடவையே வேணாம். முதல்லயே கேக்கவிட்டுப் போயிடுச்சு உங்களுக்கு கல்யாணமாயிடுச்சுங்களா?"

"அதிர்ஷ்டவசமா... இல்லை."

"ஆனா பாருங்க, துரதர்ஷன். ச்சீ. துரதிர்ஷ்டமான ச்சீ. அதென்னங்க அது?"

"துரதிர்ஷ்டவசமா..."

"அதான்! அந்த வசமா நான் ஏற்கனவே எங்கேஜ்டு. ஆனா லும் உங்களை நேரா பார்த்துட்டு அவசியப்பட்டா அழிரப்பர் எடுத்து பழசை அழிச்சிட முடியும். எப்ப வாறீங்க?"

"இப்ப."

"வேணாங்க. சசிலா வர்ற நேரம். சர்வீசுக்குக் கொடுத்திருந்த காரை எடுத்துட்டு வரப் போயிருக்கா. எந்த நேரமும் வரலாம்."

"அந்த சிடுமூஞ்சி பேர்தான் சசிலாவா? நான் நேத்து உங்களைப் பார்க்க உங்க ஆபீஸ் வந்திருந்தேன். நீங்க இல்லை. பனியனும், பேண்ட்டும் போட்டுக்கிட்டு பேரென்ன, சசிலாவா? காரணமில்லாம பார்க்க முடியாதுன்னு சொல்லி என்னை விரட்டிட்டாங்க."

"அப்படியா? என்கிட்டே சொல்லவே இல்லையே. கேக்க றேன். ஆபீஸ் வேணாங்க. நீங்க என்ன செய்றீங்க சாக்கா, குருவி கழிஞ்ச தலையோட காந்தி தாத்தா நிப்பாரே... அங்கே சாயங் காலம் ஆறு மணிக்கு..."

"செருப்பால அடிக்கணும்" என்று சொல்லிக் கொண்டு உள்ளே வந்தாள் சசிலா.

அர்ஜெண்ட்டாய் மவுத் பீஸைப் பொத்திக் கொண்ட பரத், "யாரைச் சொல்றே சசி!" என்றான் கல்யாணராமன் சிரிப்புடன்.

"காரை அவ்வளவு மட்டமா சர்வீஸ் பண்ணிருக்கான். பில் மட்டும் எழுநூத்தி சொச்சத்துக்கு. போன்ல யாரு?"

"இப்பதான் எடுத்தேன். இரு கேக்கறேன். ஹலோ, போன்ல யாருங்க?"

"என்ன பரத்! நல்லாதானே பேசிட்டிருந்தீங்க?" என்றாள் போனில் வினிடா.

"அப்ப வர்றீங்களா? சரி!" என்று பட்க்கென்று வைத்து விட்டான்.

"அது சரி. யாருன்னு கேட்டேனா, கொஞ்சம் மறை கழண்ட ஆசாமி போலிருக்கு. மறந்து போய் போன் செஞ்சிட்டேன். நானே நேர்ல வந்து பேசறேன்'னான். அதான் வர்றீங்களான்னு..."

"யாருக்கு கழண்டு போச்சுன்னு ஒண்ணும் புரியலே" என்று கைப்பையை மேஜை மேல் போட்டுவிட்டுத் தன் நாற்காலியில் அமர்ந்த சுசீலா வெள்ளை பேண்ட்டும், சிவப்பு பனியனும் அதில் கறுப்பு எழுத்துகளுமாக இருந்தாள்.

எழுத்துக்களாவன:

எஃப்.ஓ.ஏ.எம். - பி.யு.ட்டி. - எஃப்.ஐ.ஆர்.எம்!

(எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்கள் மட்டும் இதன் விளக்கத்தைப் பின்னர் காண்க)

"சரி! வரவர இந்த ஆபீஸ்ல எனக்கு ஒரு மரியாதையே இல்லாமல் போச்சு! நேத்து என்னைப் பார்க்க ஒரு அழகான விசிட்டர் வந்திருக்காங்க. நீ அவங்களை விரட்டி அனுப்பிச்சிருக்கே. நியாயமா?"

"யார் சொன்னது? அழகான விசிட்டரா? அவளா? உறைப் போட்ட திண்டு மாதிரி ஒரு உடம்பு! பரதப்ரியான்னு புனை பெயர் வச்சிக்கிட்டு கவிதை எழுதறாளாம். ஒண்ணு சொல்லுன்னேன், தீக்குச்சி சிறியது. ஆனால் தீ பெரியதுன்னா, சிகரெட்டுக் குச்சி சிறியது ஆனால் கல்வி பெரியதுன்னா. கொட்டாங்குச்சி சிறியது, ஆனால் தென்னைமரம் பெரியதுன்னா, மேலே சொல்லவிடாம அந்தக் கவிதைக்காகவே துரத்தியடிச்சேன். பொண்ணா அவ, காட்டுத்தனமா வந்து..."

"அவ எவ்வளவு நாகரிகமா உன்னை சிடுமூஞ்சின்னு மட்டும் தான் சொன்னா, நீயானா...."

"எப்போ... எப்போ சொன்னா? பார்த்தாளா? நான் இல்லை தப்போ வந்தாளா?"

"இல்லை... வந்து... அது... போன்! போன் எடுத்துப் பேசு!"

சுசீலா ஒலித்த போனை எடுத்து, "ஹலோ, தில் ஈஸ் மூன் லைட் டிடெக்டிவ் ஏஜன்சீஸ்."

"கொடைக்கானல்லேர்ந்து பேசறேன். என்ட பேர் சோமன். மிஸ்டர் பரத் இருக்காரா?"

"ஒன் செகண்ட்" என்று ரிசீவரைக் கை மாற்றினாள்.

"ஹலோ பரத் ஸ்பீக்கிங். சொல்லுங்க."

"சார், கொடைக்கானல்ல விபுநாத்ன்னு... கோடீஸ்வரர் பத்து நாளைக்கு முன்னாடி..."



"திடீர்னு மாரடைப்புல இறந்துபோய்... ஆனாலும் கொடைக்கானல் போலீஸ் அது சதியா இல்லை விதியான்னு ஆராய்ச்சி செய்துகிட்டிருக்கிற..."

"அதே. அவரிண்ட மேனேஜர் சோமன் நான். அவரிண்ட மிஸஸ் உங்களை நேர்ல சந்திக்க விரும்பறாங்க."

"இன்னும் ஒரு வாரத்துக்கு வெளியூர் ப்ரோக்ராம் எதுவும் இல்லை. இங்கேதான் இருப்பேன். எனி வொர்க்கிங் டே, வரலாம்."

"அதில்லை. நீங்க இவ்விடே வர முடியாதா?"

"கொடைக்கானலுக்கா? அந்த சாவை ஆராயணுமா?"

"அது போலீஸ் பார்த்துக்கிட்டிருக்காங்க. உங்ககிட்டேர்ந்து வேற வகை உதவி தேவைப்படுது. அதி முக்கியம். அதி அவசரம். விஸ் யூ ப்ளீஸ் கம்?"

பரத் சுசீலாவைப் பார்த்தான். மூடிக் கொண்டு பேசினான். "கொடைக்கானல் கூப்பிடறார் சுசி! சாவு ஆராய்ச்சி இல்லையாம். வேற முக்கியமாம். அவசரமாம்."

"போயிட்டு வந்தாப் போச்சு."

பரத் போனில், "சார், போயிட்டு வந்தாப் போச்சு! ஸாரி, வந்துட்டு வந்தாப் போச்சு. நாளைக்குப் புறப்பட்டாப் போதுமில்லை?"

"இன்னும் பத்து நிமிஷத்தில புறப்பட்டாக்கூட தேவலாம்."

"அதெல்லாம் முடியாது சார். ஆறு மணிக்கு எனக்கு முக்கியமான மீட்டிங் ஒண்ணு இருக்கு. அப்புறம், சுசிலாவும், நானும் வர்றோம். எது சம்மந்தம்மான்னு லேசா ஒரு க்ளு சொல்லுங்களேன்."

"எங்கிட்டே ஒரு கேள்வி இருக்கு. அதுக்கு பதில் வேணும்."

"என்னங்க இது மன்னர் கதை மாதிரி! தண்ணீர் தட்டுப்பாடு சமயத்தில கொடைக்கானல் ஏரித் தண்ணீரை உபயோகிக்கும் போது என்னென்ன வியாதிகள் வரும்னு கேப்பீங்களா?"

"விளையாட்டுக்கு இதிலே இடமில்லை சார். சீரியஸ்! அரை கோடி சமாச்சாரம்! நீங்க ரெண்டு பேரும் ஃப்ளைட்ல மதுரை வாங்க. மதுரை ஏரோட்ராமுக்கு கார் அனுப்பி வைக்கிறேன். டிக்கெட் வாங்கிட்டு ஃப்ளைட் நம்பர் சொன்னா, நான் அனுப்பற கார் நம்பர் சொல்றேன்."

"முதல்ல உங்க போன் நம்பர் சொல்லுங்க" என்றான் பரத்.

## 7

"ஸோ... கொடைக்கானல்! என்றான் பரத் போனை வைத்துவிட்டு.

"இருக்கட்டும். அதென்ன ஆறு மணிக்கு முக்கியமான மீட்டிங்! யாரோட?"

"அது... சும்மா ஒரு கப்ஸா! போன்ல அந்த ஆளு என்ன சொன்னார் தெரியுமா? பத்து நிமிஷத்திலே புறப்பட்டாக் கூட பரவாயில்லையாம். நமக்கு என்ன வேற வேலை இல்லையா? சொன்ன உடனே புறப்பட்டுடணுமா? அதுக்குத்தான் அப்படியே சும்மா நாம பிலிம் காட்ட வேணாமா?" என்று மணி பார்த்தான். மாலை 5.00 மணி.

"அதானே பார்த்தேன்" என்று பெல் அடித்து மாதவியை வரவழைத்து "மாதவி! நம்ம ஏசிபாட்டி டிராவல்சுக்கு போன் செஞ்சு நாளைக்கு இந்தியன் ஏர்லைன்ஸ் மதுரைக்கு எனக்கும், சாருக்கும் ரெண்டு டிக்கெட்ஸ் ஏற்பாடு செய்யச் சொல்லிவிட்டு நீ வீட்டுக்குப் போகலாம்."

"போறப்போ ஜூஸுக்கு வாங்கிட்டுப் போ!" என்றான் பரத். புரியாமல் விழித்துவிட்டு மாதவி வெளியேறினாள்.

"அவளை எதுக்காக ஜூஸுக்கு வாங்கிட்டுப் போகச் சொல்றீங்க?"

"பின்னே, இவ்வளவு டீசண்ட்டான ஆபீஸோட டைப்பிஸ்ட் ஜாக்கெட்ல சேப்டி பின் குத்திக்கிட்டிருக்கிறது நல்லாவா இருக்கு?"

முன் நெற்றியில் செல்லமாக அடித்துக் கொண்டாள். "ஆபீஸ்தான் டீசண்ட்.., பாஸ் ரொம்ப மோசண்ட்! திருத்தவே முடியாது உங்களை."

"நான் என்ன கட்டுரை நோட்டா?" என்று எழுந்த பரத், "அப்போ சுசி! ஆபீஸை நீ மூடிட்டுப் போ. காரை எப்படி சர்வீஸ் பண்ணிருக்கார்ன்னு ஓட்டிப் பார்த்துட்டு அப்படியே நான் வீட்டுக்குப் போறேன். என்ன?"

"விளையாடறீங்களா? இன்னிக்கு ஷாப்பிங் போறதாப் பேசினோம்."

"பேசினமா என்ன? நாளைக்கு வச்சுக்கலாமே."

"நாளைக்குக் கொடைக்கானல்லே இருப்போம்."

"அங்கே வச்சுக்கலாமே."

"பேத்தாதீங்க... என்ன செய்யப் போறீங்க இப்போ?"

"காரை ஓட்டிப் பார்க்கலாமுன்னு."

"நானே வாரேனே... என்ன அவசரம்?"

"நான் போகலை. எங்கேயும் போகலை. சரியா? அர்ஜெண்ட்டா டாய்லெட் ரூம் வரைக்கும் போகணும். தனியாப் போகலாமா நான்?" என்றான் கடுப்பாக. வேகமாக நடந்து சென்று திறந்து கதவைப் படீரென்று சாத்திக் கொள்ள...



போன் அலற... எடுத்தாள். இவள் ஹலோ சொல்வதற்கு முன்பாகவே...

"ஹலோ, பரத்தானே? விஜயாதான் பேசறேன்."

"ம்" என்றாள் கட்டைக்குரலில்.

"ஆறு மணிக்குத்தானே சொன்னீங்க? இதோ புறப்பட்டுட்டேன். உங்களுக்கு எந்தக் கலர் பிடிக்கும்னு கேட்டு அந்த கலர்ல டிரெஸ் பண்ணிக்கலாமேன்னு தான் கூப்பிட்டேன்."

"ஏண்டி அவர் என்ன உன் புருஷனா?" என்றாள் ஒரிஜினல் குரலில்.

"ஹலோ, யாரு பேசறது?"

"அம்மா, தாயே! இந்தாளு ஏற்கனவே கொஞ்சம் சபலக் கேஸ் விட்டுடும்மா! ஏண்டி இப்படி அலையறீங்க? இன்னொரு தடவை பரத்துக்கு போன் செஞ்சே... வேணாம்! இப்போ நான் கெட்ட வார்த்தை பேசறதில்லைன்னு வச்சிருக்கேன்."

படக்கென்று போனை வைத்தாள் சுசீலா.

பாத்ரூம் கதவு திறந்து பரத் வெளியே வந்தான்.

"சுசி! சீக்கிரம் கிளம்பு."

"இல்லை பரத்! ஷாப்பிங் வேணாம். ஒண்ணும் முக்கியமில்லை. நீங்க கார் எடுத்துட்டுப் போங்க. நான் ஆபீஸ் மூடிக்கிறேன்."

"நிஜமாவா? ரைட்" பரத் புறப்பட்டுச் செல்ல, சிரித்துக் கொண்டாள் சுசீலா. கால்கடுக்க, மனம் கடுக்க போய் காத்திருந்து விட்டு வந்தால்தான் புத்திவரும்!

## 8



மதுரை விமான நிலையத்தில் இறங்கியதும் கைப்பையில் இருந்த குளிர் கண்ணாடி எடுத்து அணிந்து கொண்டாள் சுசீலா. பரத் சிகரெட் பற்ற வைத்தான்.

வெளியே குறிப்பிட்ட எண் காரை அணுக.

"குட் மார்னிங். நான் சேமன்" என்று கைகொடுத்தவன் சுசீலாவின் மஞ்சள் பனியனில் இருந்த சிவப்பு வாசகத்தைப் படித்துவிட்டு அர்த்தத்திற்கு யோசித்தான்.

'NOT YET WET'

அப்படியென்றால்?

"அதைப் பிறகு யோசிக்கலாம் மிஸ்டர் சேமன்! புறப்படலாமா? நீங்களே வருவீங்கன்னு நினைக்கலை."

''டிரைவரைக் கூட விலக்கிவிட்டு நானே வண்டியெடுத்து[க்]கிட்டு வந்ததுக்கு ஒரே காரணம்தான். மூணு மணி நேரம் பயண[த்]தில உங்களுக்கு நடந்ததையெல்லாம் சொல்ல முடியும். அதனா[ல]தான் மேடம் என்னையே அனுப்பினாங்க. வாங்க டிப[ன்] சாப்பிடணுமா?''

''பிளேன்ல சாப்டாச்சு. புறப்படலாம்.''

நீல நிற அம்பாஸிடரில் சோமன் ஓட்ட, பரத்-சசிலா பின் சீட்டில் அமர்ந்தார்கள். கார் புறப்பட்டது. பின் சீட்டின் முதுகில் புதைந்திருந்த ஆஷ்ட்ரேயைத் திறந்து தன் சிகரெட் துண்டை உள்ளே போட்டுவிட்டு, ''சொல்லுங்க மிஸ்டர் சோமன்!''

சோமன் நிதானமாக ஆரம்பித்தான். முதலில் விபுநாத்தின் வாழ்க்கை வரலாற்றின் சுருக்கம் சொன்னான். அவரின் சொத்துகள், பலம், குடும்ப உறுப்பினர்கள், குணநலன்கள் எல்லாம் சொன்னான். பிறகு குறிப்பிட்ட ஜெரேனியம் பிரச்சனைக்கு வந்தான்.

''சார்! நீங்க காயாங்கிறதாலே எதையும் மறைக்க வேணாம்னு மேடம் பணிஞ்சாங்க. பச்சே நீங்க ரகசியம் காப்பாத்தணும்.''

''ஷ்யூர். சொல்லுங்க.''

''அன்னைக்கு ராத்திரி லேவில் போன ஆபீஸோட மதிப்பு அரை கோடிக்கு மேல. டிரைவர் தண்டபாணியோட பின்னாடியே சாரும் மைசூருக்குப் புறப்பட்டார். மறுநாள் ராத்திரி பதினொரு மணிக்குத் திரும்பினார். ஒரு பெரிய பெட்டி நிறைய கட்டுக்கட்டா ஐம்பத்தி இரண்டு லட்சம் ரூபா பணத்தோட திரும்பினார். டிரைவரையும் என்னையும் அனுப்பினதும் 'இந்தப் பணம் வீட்ல இருக்கிறது நல்லதில்லை. இதை பத்திரப்படுத்திட்டு வர்றேன்'னு ராத்திரி ஒரு மணிக்குத் தனியா காரை எடுத்துக்கிட்டு எங்கேயோ போய்ட்டுத் திரும்பியிருக்கார். ரொம்ப நல்ல மூடிலேதான் இருந்திருக்கார். காலைல ஏழு மணிக்கு திடீர்னு நெஞ்சுவலி. குடும்ப டாக்டர் விஸ்வேஸ்வரனை வரவழைச்சோம். மாஸிவ் ஹார்ட் அட்டாக்னு சொல்லி உடனே தன் ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணச் சொன்னார். பண்ணினோம். ஆனாலும் ப்ரயோஜனம் இல்லாமல் மரிச்சிப் போயி!''

''ஆக, ஹார்ட் அட்டாக்?'' என்றான் பரத்.

''அதே! பச்சே சுதிர் சார் அழுது ஆர்ப்பாட்டம் செஞ்சார். இதிலே ஏதோ சூது இருக்குன்னு போலீஸ்ல சொல்லி போஸ்ட் மார்ட்டம் செஞ்சே ஆகணும்னு புகார் கொடுத்தார்.''

''அப்படி போஸ்ட் மார்ட்டம் செஞ்சதில என்ன தெரிஞ்சது?''

''ஹார்ட் அட்டாக்தான்னு க்ளியர் சர்டிஃபிகேட் கொடுத்தாங்க.''



''ரைட். இப்ப எங்க பிரச்சனைக்கு வாங்க. நாங்க வந்து என்ன செய்யப் போறோம்?''

''அந்த அம்பத்திரண்டு லட்சம் உள்ள பெட்டி எங்கேன்னு கண்டுபிடிக்கணும்.''

''மைகாட்! அதைத்தான் அவர் பத்திரப்படுத்திட்டதா...''

''ஆமா. அதுதான் சிக்கல்! எங்கே பத்திரப்படுத்தினாரென்று எவரிடமும் சொல்லிலா சாரே. போலீஸ்ல சொல்லித் தேட முடியாது. ஏன்னா அவ்வளவும் கறுப்புப் பணம்! பத்து பைசாகூட கணக்கில் வராது.''

''சரிதான் போங்க. வைஃப் கிட்டேக்கூடச் சொல்லலையா?''

''வைஃப்தானே என்னை யோசனை கேட்டு, நான் உங்களை வரவழைக்கலாம்னு சொன்னேன். காலையிலே சொல்லலாம்னு இருந்திருக்கலாம். அதுக்குள்ளே நெஞ்சு வலி வந்திடுச்சி!''

''அவரோட ஃப்ரெண்ட்ஸ் வீடுங்களிலே எல்லாம் விசாரிச்சாச்சா?''

''எல்லாம் ஆச்சு சார். அதிக பட்ச முயற்சிகள் எல்லாம் செஞ்சு பார்த்து கடைசி கட்டமாத்தான் உங்களைக் கூப்பிட்டிருக்கோம்.''

''வழக்கமா கொலை ஆராய்ச்சிதான் செய்றது. பணப்பெட்டி தேடுறது ஒரு சேஞ்ச் எங்களுக்கு. தேடலாம். என்ன சசி?''

''ஆமாம்'' என்றாள் காதில் இருந்த இசையை எடுத்து விட்டு.

''எழுதியிருக்கிறதுக்கு என்ன சார் அர்த்தம்? ஒன்றும் புரியவில்லையே?''

''மலைப் பாதை ஆரம்பம்னு இருக்கு. இதிலே என்ன புரியலை?''

''நான் ரோட் சைன் கேக்கலை. மேடம் பணிவலை...'' என்று திரும்பினான் சோமன்.

''சசி! கேக்கறார் பாரு. பதில் சொல்லு.''

''மலைப் பாதையில காரோட்டறப்போ திரும்பிப் பார்க்கக் கூடாதுன்னு அர்த்தம்.''

சோமன் டபக்கென்று வாய்மூடி மௌனமாக ஓட்டத் தொடங்கினான்.

எலிவேஷன் ஏற, ஏற சூரியன் தோழனானான். மருந்துக்கு வெயில். மெல்ல, மெல்ல ஜில் தென்றல் மூக்கை முட்டியது. மலைகளின் மடியில் பனி. மடியில் பச்சைக் கிராப்பாக மரங்கள். கார் U வளைவு எடுத்த போது பள்ளத்தாக்குகள் பயமுறுத்திவிட்டு விலகின. வயல் சதுரங்கள் கேரம் போர்டு சைசில். மேய்கிற மாடுகள் பட்டாம்பூச்சிகளாக.

''எனக்குக் குளிருது. உனக்கு?'' என்றான் பரத், சசிலாவின் தொடையில் கையை வைத்து.

"இல்லை. கையை எடுங்க" என்றாள் சுகியா.

"எடுத்துட்டேன்... உன் பார்வையே ரொம்ப சூடாகத்தான் இருக்கு சுகி!"

டம்டம் பாறையில் நிறுத்தி இறங்கி சாப்பிட்டார்கள். புதுமை போல விழுந்து கொண்டிருந்த நூர்த்து அருவியை ரசிக்கட்டும் விலகும்வரை காத்திருந்து கிளிக் செய்தாள் சுகியா.

பண்ணைக் காட்டில் பாத சிகரெட் வாங்கினான். சகியை பனம்ல் வாங்கினான். அதற்குப் பிறகு லயிட்டர் அணிய வேண்டிய கட்டாய மேற்பட்டது.

டிக்கியில் இருந்து பெட்டி திறந்து எடுத்து அணிந்து கொண்டு கைகளைத் தேய்த்து சூடாக்கிக் கொண்டு, நடுங்க, நடுங்க கொடைக்கானல் வந்த போது மதியம் மணி ஒன்று.

"எங்க ஹோட்டலையே உங்களுக்கு ரூம் ஒதுக்கியிருக்கோம். உங்களை அங்கே ட்ராப் பண்றேன். லஞ்ச் சாப்பிடுங்க. ரெஸ்ட் எடுங்க. சகியா நாலு மணிக்கு வந்து உங்களை பிக்கப் பண்ணிட்டு அழைச்சிட்டுப் போறேன்" என்றான் சோமன்.

லேக் அருகில் உயர்ந்தின கட்டை விரல் போல நிமிர்ந்து நின்ற ஹோட்டல் காலைக்கூனில் இரண்டாவது மாடியில் ஒதுக்கப் பட்டிருந்த தனியறையில் இவர்கள் தனித்துவிடப்பட்டதும், பாத் சாப்பாடு ஆர்டர் செய்தான்.

சகியா கிட் அவுட் திறந்து கண்ணங்களைப் பொத்திக் கொண்டு நேரெதிரே தெரிந்த ஏரியைப் பார்த்து, "பாத்! வாங்களேன் இங்கே. அப்பப்பா எவ்வோ அழகா இருக்கு" என்றாள்.

ஏரியில் கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட படகுகள் நகர்ந்து கொண்டிருக்க, ஏரியின் சுற்றுச் சாலையில் குழந்தைகளை ஏந்திக் கொண்டு ஹாரஸ் ரைடிங் நடத்திக் கொண்டிருந்தனர். வெயில் என்பதே காணோம். உதடுகள் சிவீர் என்று உலர்ந்து போய் சிரித்தால் லேசாய் வலித்தன.

சாப்பாடு வந்ததும் சாப்பிட்டார்கள்.

"பாத்! நாலு மணிக்குத்தான் சோமன் வருவார். வாங்களேன் போட்டிங் போயிட்டு வரலாம்."

"அதைவிட சுவாரசியமான காரியங்கள் இருக்கு சுகி."

"சொல்லுங்க. செய்யலாம்."

"அதுக்கு ரூமைவிட்டு வெளியே போக வேண்டியதேயில்லை."

"ஆரம்பிச்சிட்டீங்களா? ரொட்டன் மைண்ட்!"

"என்ன சொல்லிட்டேன் இப்ப. தூங்கலாம்னு சொன்னேன். உடனே திட்டுறதா? வாபஸ் வாங்கு! மன்னிப்பு கேளு. இல்லைன்னா நான் போட்டிங் வரமாட்டேன்."






கொஞ்சி விளையாட குழந்தை இல்லையா?

அதிசயம் ஆனால் உண்மை!

குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு ஏற்படும் ஆண்மை குறைவு, விந்தணுக்கள் குறைவு, சிறிய விதைகள், வளர்ச்சி இல்லாத சிறிய கருப்பை, கருப்பையில் கட்டிகள், கருப்பை குழாய் அடைப்பு, நீர்க்கட்டிகள், மாதவிடாய் தள்ளிப் போகுதல், வெள்ளைப்படுதல், குண்டு உடல் போன்ற எந்தவித பிரச்சனையாக இருந்தாலும் சரி, அவற்றை குறுகிய காலத்தில், சிகிச்சை செய்து குழந்தை பெற்று கொள்ளலாம். நாங்கள் கொடுக்கும் சித்த, யுனானி, ஆயுர்வேத மருந்துகள் சாப்பிடும்போது, பல வருடங்களாக குழந்தை இல்லாத தம்பதிகள் 18 சித்தர்களின் அருளால் 10 நாட்களில் கர்ப்பம் அடைந்து குழந்தை பெற்றவர்கள் நிறைய பேர் உண்டு. நான் தற்போது ராஜ்பிளஸ் டிவியில் தினந்தோறும் காலை 8.30 மணிக்கு "உங்கள் நேரம்" என்ற பகுதியில் தொடர்ந்து ஆலோசனை கூறி வருகிறேன். கேட்டு பயன் அடையுங்கள்.

தொடர்பு கொள்ள:

டாக்டர் ஆர்.ராஜகோபால் B.A.M.S.

ஸ்ரீ சந்தோஷ் சித்த மருந்தகம் (மாடியில்), 44, திருச்சி மெயின்ரோடு, தாதகாப்பட்டி, (பில்லுக்கடை பஸ் ஸ்டாப் அருகில்) சேலம் - 636 006. கிளினிக் போன்: 0427-469267 செல்போன்: 98427 46653

ஆலோசனை நேரம்: காலை 9 - இரவு 8 மணி வரை. ஞாயிறு மட்டும்: காலை 9 - மதியம் 12 மணி வரை

"எப்டி, எப்டி? மன்னிப்பா? நெவர் இன் மை லைஃப். தனியா போய்க் கேட்டா போட் தரமாட்டாங்களா என்ன? நீங்க தூங்குங்க. நான் போயிட்டு வர்றேன்."

சசிலா விருட்டென்று தன் கைப்பையுடன் கோபமாய் புறப்பட்டாள்.

"போச்சுடா! வந்துடுமே தகராறு?" என்று உட்கார்ந்தான் பரத்.

## 9

சசிலா ஹோட்டலைவிட்டு வெளியேறி போட் கிளப் நோக்கி நடந்தாள். கைகளைக் கட்டிக் கொண்டு நடந்தாள். ஏரியின் கரையோர சிமெண்ட் பெஞ்சுகளில் ஜோடி ஜோடியாக அமர்ந்திருந்தார்கள். இவளைக் கடந்த முதியவரின் உதடுகள் முதுமை காரணமாக நடுங்கின. குதிரை மேல் அமர ஒரு குழந்தை பயந்து அலறியது.

பூத்தில் பெடல் போட் கேட்டாள். எத்தனை பேர் என்றார்கள். நான் மட்டும்தான் என்றதும் மிதிக்க சிரமமாய் இருக்கும். ரோயிங் போட் எடுத்துக் கொள்ளுங்கள் என்றான் இளைஞன். முன் பணம் செலுத்தி ரசீது வாங்கிக் கொண்டாள்.

பதினேழாம் நம்பர் போட்டில் ஹெல்ப்பர் உதவியுடன் அமர்ந்து கொண்டு இரண்டு கட்டைத் துடுப்புகளையும் இரும்பு கிளாம்பில் சரியாகப் பொருத்தி தண்ணீருக்குள் முனை செலுத்தித் தள்ள ஆரம்பித்தாள்.

சில நிமிடங்களில் ஏரியின் மையத்தில் இருந்தாள் சசிலா. துடுப்பு போடுவதை நிறுத்திவிட்டு ஒவ்வொரு திசையாக இயற்கையைக் கை தட்டி ரசிக்க ஆரம்பித்தாள். உயர்ந்த யூகலிப்டஸ் மரங்கள் விளையாட்டுக்குச் செருகி வைத்தது போல வீடுகள். இந்தப் பக்கம் டி.வி. டவர், கார்லஸ்யூன் ஹோட்டலின் கான்க்ரீட் முரண்பாடு. மேகம் தொலைந்துவிட்ட நெவர் ரெகவரிங் கோல்ட் பிடித்த வானம். ரோமக்கால்களில் ஊசி செருகும் காற்று. தெறித்து மேலே விழும்போது உடம்பின் பூரா ஏரியாவும் சிலிர்க்க வைக்கும் ஏரித் தண்ணீர். இந்தப் பக்கமும், அந்தப் பக்கமுமாக அலையும் ஏராள வர்ணப் படகுகள்.

சசிலா ஆழ்ந்து சுவாசித்து, ரசித்துக் கொண்டிருந்த போது...

எந்த திசையிலிருந்து என்று புரியாமல் டொங் என்று ஏதோ ஒன்று கல்போல வந்து இவள் படகில் விழுந்தது. என்னவென்று பார்த்தாள்.

காகிதம் சுற்றப்பட்ட கல்!



அந்தக் காகிதத்தைப் பிரிக்க, உள்ளே எழுத்துகள்! கல் நழுவி விழுந்தது.

அதைப் படிப்பதற்கு முன்பாக தன் படகைச் சுற்றிலும் பார்த்தாள் சசிலா. ஏழெட்டு படகுகள் வெவ்வேறு திசைகளில் போய்க் கொண்டு, வந்து கொண்டிருந்தன.

எந்தப் படகில் இருந்து யார் வீசினார்கள்?

வீசப்பட்ட கல்லில் சுற்றின கடிதம் என்னால் எடுக்கப்படுகிறதா, படிக்கப் படுகிறதா என்று யாராவது கவனிக்கிறார்களா?

சசிலா இன்னும் அந்தக் கடிதத்தைப் படிக்காமல் சுற்றிச் சுற்றி எந்தப் படகில் இருந்தாவது யாராவது தன்னைப் பார்க்கிறார்களா என்று பார்த்தாள்.

இரண்டு மூன்று படகுகளில் இவளைப் பார்த்தார்கள். இரண்டில் தம்பதிகள். ஒன்றில் ஒரு தனியாள். ஒரே தடவை விநாடி திரும்பிப் பார்த்துவிட்டு அவன் இவளுக்கு முதுகு காட்டி எதிர் திசையில் துடுப்பு போட்டு விலகிக் கொண்டிருந்தான்.

அவனா? இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம்.

சசிலா அந்தக் கசங்கிய கடிதத்தின் வரிகளைப் படித்தாள்.

'மௌனக்கெட்டு மெட்ராஸில் இருந்து வந்து கொடைக்கானலில் அடையாளம் தெரியாமல் பள்ளத்தாக்குகளில் கழுகுக்கு இரையாக வீசப்பட வேண்டுமென்று வந்திருக்கிறீர்களா? விபரீத விளையாட்டில் தலையிடுவது உங்கள் இருவரின் உயிர்களுக்கும் நல்லதல்ல! முதலும் கடைசியுமான எச்சரிக்கை இது.''

என்று நீல பால் பாயிண்ட் பேனாவால் கிறுக்கலாக எழுதப்பட்டிருந்தது.

சசிலா எச்சில் விழுங்கினாள். படகை, கரை நோக்கிச் செலுத்தத் தொடங்கினாள்.

## 10

பரத் படித்து முடித்துவிட்டு பேட்டரி அடித்து அது என்ன விதமான காகிதம் என்று பார்த்தான். சாதாரண, எங்கும் கிடைக்கும் சன்லிட் பாண்ட் தான்.

"அவன் எப்படி இருந்தான் சசி?"

"யாரு?"

"அவனைத்தான் இருக்கும்னு யாரையோ சொன்னியே..."

"என் படுக்கும் அவன் படுக்கும் நல்ல தூரம் பரத்! முக அடையாளம் பார்க்கிற நாழியில்லை. ஒரே செகண்ட் திரும்பி என்னைப் பார்த்துட்டு முகத்தைத் திருப்பிட்டான். எனக்குத் தெரிஞ்சதெல்லாம் டார்க் நீல ஜெர்கின் முதுகுதான்."

"ஆக ரெண்டு கேஸ்டி இருக்கு. ஒண்ணு நம்மை இன்வைட் பண்ணிருக்கு. இன்னொண்ணு மிரட்டியிருக்கு. மிகவும் விபு நாத்தைப் பார்த்தால் பேசிட்டுத் தீர்மானிக்கலாம்."

"எப்ப புறப்படலாம்னா?"

"எப்படி இறங்கலாமது. இன் வாங்கறதுங்கிறது என் ஆஃபீஸ் ஸ்டேஷனரி விஷயம் மட்டும்தான் சுசி! நம்ம முருகேசனிட்டே விசாரிச்சேன் புறப்படறதுக்கு முன்னாடி.

கொடைக்கானல் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் பதுமநாபனாம். அவர் செட்டாம். போன் செஞ்சு கோவாப்பரேட் பண்ணச் சொல்றேன்னார். அவரோட முதல்ல போனை பேசிடலாமா?"

பதுமநாபன் டெலிபோனில் அவ்வளவு சுலபமாகக் கிடைத்து விடவில்லை.

பரதனும் விடுவதாக இல்லை.

ஒரு வேளை தவறான டெலிபோன் நம்பரோ என்று குழப்பமடைந்தான் பரத்.

எனினும் தொடர்ந்து முயன்றான்.

பரத் நாற்காலியில் அமர்ந்து போன் எடுத்து மடியில் வைத்துக் கொண்டான்.

"ஹலோ, மிஸ்டர் பதுமநாபன் இருக்காரா? யெஸ், இன்ஸ்பெக்டர் பதுமநாபன்தான். நீங்கதானா? குட் ஈவினிங். நான் பரத் ஃப்ரம் மெட்ராஸ். முருகேசன் போன் செஞ்சாரா? யெஸ், அதே பரத். ஆமாம். சுசிலா வந்திருக்கா. இன்றைய மெனுவா? ஓ.யூ.மீன் வேர்ட்ஸ்? ஸாரி சார். ஸ்வெட்டர் போட்டிருக்கா. உங்களுக்கு வயது நாற்பத்தஞ்சுன்னு முருகேசன் சொன்னார். ஆனா மனசுக்கு வயசு இருபத்தஞ்சின்னு அவர் சொல்லலையே. ஓ. யெஸ். கண்டிப்பா சந்திக்க வேண்டியிருக்கு. வர்றோம். ஒரு புகார் கூட கொடுக்க வேண்டியிருக்கு. வந்து கால் வச்சதுமே ஒரு சிட்டன் இன்டிமிடேஷன்! விவரமா நேர்ல சொல்றேனே. எப்போ! வெய்ட்" சுசிலாவைப் பார்த்தான் "சுசி! இன்ஸ்பெக்டரை எப்போ சந்திக்கிறோம்?"

"நாளைக்குக் காலையிலே" என்றாள்.

"நாளைக்குக் காலையிலே" என்றான்.



# 11

முதலவனிடம், மேலோட்டமான மேக்கப்பில் இருந்த ஜெயராணியைப் பார்த்ததும் விபரீதத்தின் மையம் இல்லை மனசு என்று ஒரு விநாடி நிம்மதியானான் பரத்.

மாடியில் இருந்து ஒரு பெண்ணின், ஆணின் கலவையான சிரிப்பொலிகள் படியிறங்கி வந்து கொண்டிருந்தன.

சோமன் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தான்.

"வர்ற வழில கிடைச்சிட்ட எல்லா விவரங்களும் சொல்லிட்டதா சோமன் சொன்னார். முதல்ல..." என்றவள் மாடியைப் பார்த்து, "ஆர்த்தி சத்தமே. முக்கியமாப் பேசிக்கிட்டிருக்கோம். பப்லுவைக் கூட்டிக்கிட்டு வெளில போ" என்றாள் ஜெயராணி.

கைக்குட்டையால் வாய் துடைத்துக் கொண்டு பரத் சுசிலாவிடம், "நாய்க்கு பப்லுன்னு பெயர் நல்லாருக்கிலே" என்று சொல்லிய சமயம் படிகளில் ஆர்த்தியும், பப்லுவும் கைகோர்த்து இறங்கினார்கள் உற்சாகமாய்.

ஆர்த்தி ஒரு செகண்ட் நின்று பரத்தைப் பார்த்தாள்.

"ஹலோ மிஸ்டர்! உங்களை தெலுங்கு படத்தில பார்த்திருக்கேன். விஜய சாந்தியை 'நேனு நின்னு பிரேமிங்கத்தானு' என்று மண்டி போட்டுக் கொஞ்சுனியே..."

"ஆர்த்தி! ஸ்டாப் யுவர் நான்சென்ஸ். அவர் லயர் மெட்ராஸிலேர்ந்து நம்ம கெஸ்ட்டா வந்திருக்கார். முடிஞ்சா ஹலோ சொல்லு. இல்லைன்னா கெட் லாஸ்ட் போயிகிட்டே இரு."

"மம்மி என்னை இன்ஸல்ட் பண்றே! மம்மி ஒழிக! பப்லு வாழ்க!"

"நானு?" என்றான் சோமன்.

"சோமன் ஒழிந்து வாழ்க! பப்லு! நீ வாடி போகலாம்" என்று தலை கலைந்த பப்லு கையை இழுத்துக் கொண்டு வாசலுக்கு ஓடினாள் ஆர்த்தி அதிர அதிர.

"என் டாட்டர்தான். கொஞ்சம்..."

"மெண்டல் சரியில்லையா?"

"நோ, நோ. போதையில பேசிட்டுப் போறா. ரொம்ப செல்லம் கொடுத்ததிலே எப்படியோ இந்த கஞ்சா சனியன்களைப் பழகிட்டா. ஒரு லெவலுக்கு மேலக் கண்டிச்சா, பிளேடு எடுத்து வெட்டிக்கிறா. மொட்டை மாடிலேர்ந்து குதிக்கட்டுமாங்கறா. அவர் இருந்தப்பவும் அதிகம் கண்டிச்சதில்லை. அவர் எதையும் ஈஸியா எடுத்துக்கிறவர். இப்போ வர, வர ஜாட்டி அதிகமா

இருக்கு. பாருங்களேன் அப்பா இறந்த சோகம் ஏதாவது இருக்கா?''

''அந்த சோகத்தை மறக்கத்தான் இப்படி செய்றாங்களோ என்னவோ? உங்க பையன் கதிர் எப்படி?''

''நல்லா சார்! வருவான் இப்ப ஃபேக்டரில இருக்கான். என்னைவிட உங்களைப் பார்க்க ரொம்ப துடிக்கிறான் இப்போ...'' என்று சோமனைப் பார்த்தான். 'நான் பேசிக்கிறேன். நீங்க ஆபீஸ்க்கு போங்க. இவங்களுக்கு பிஸ்கெட்டும், டீயும் சொல்லிட்டுப் போங்க.''

சோமன் சென்றதும் அந்த ஹாலில் இவர்கள் மூவர் மட்டும்.

''சார்! அந்தப் பெட்டியை பத்திரப்படுத்தறேன்னு அந்த ராத்திரில புறப்பட்டுப் போய்த் திரும்பினார். விவரமா காலைல சொல்றேன்னார். காலைல நெஞ்சுவலி வந்துடுச்சு. ஆஸ்பத்திரி எடுத்துட்டுப் போனோம் சார். பின் சீட்ல என் மடியிலதான் படுத்திருந்தார். அப்போ என்கிட்டே அந்தப் பெட்டி பத்தி டைரில விவரம் எழுதிருக்கேன். டைரி... டைரின்னார். அதுக்கும் மேலே பேச முடியாமத் திணறினார். ஆஸ்பத்திரி போய்ச் சேர்றதுக்குள்ளே... அதுக்கப்புறம் அவர் திணறித் திணறி சொல்ல முடிஞ்ச ரெண்டே வார்த்தைகள் பாலித்தீன்!... வாட்டர். அப்புறம் நினைவு தப்பிடுச்சு. அப்புறம் நினைவு திரும்பாமலேயே போய்ச் சேர்ந்துட்டார். அவர் என்கிட்டே பேசின இந்த விவரங்கள் வார்த்தைகள் என்னைத் தவிர வேற யாருக்கும் தெரியாது. சோமனுக்குக் கூடத் தெரியாது. அந்தப் பெட்டியைப் பத்தி மறைமுகமா அவருக்குத் தெரிஞ்சவங்க அத்தனை பேர் கிட்டேயும் கேட்டுட்டேன். நீங்கதான் அதை என்கிட்டே சேர்க்கணும்.''

''பாலித்தீன்! வாட்டர்!'' என்றவள் கவிதா, தன் குறிப்பு நோட்டில் அந்த வார்த்தைகளை எழுதிக் கொண்டாள்.

''சில கேள்விகளுக்கு யோசனை செஞ்சு பதில் சொல்லுங்க மேடம்'' என்றான் பரத்.

''சொல்றேன்.''

''அன்னைக்கு மைசூர்லேர்ந்து திரும்பினதும் பெட்டிக்குள்ளே பணம் இருக்கிறதாச் சொன்னாரா? நீங்க பார்த்தீங்களா?''

''பார்த்தேன். ஐநூறு ரூபாய் கட்டுகளும், நூறு ரூபாய் கட்டுகளும் பழகும், புதுசமா பெட்டி வழிய இருந்திச்சு. திறந்து காமிச்சார். நான் மட்டும்தான் பார்த்தேன். எங்க பெட்ரூமல. அப்புறம்தான் இங்கே இது இருக்கிறது சரியில்லைன்னு கிளம்பி புறப்பட்டுப் போனார்.''

''அப்போ என்ன மணியிருக்கும்?''




மதுவை மறக்க
17 வகையான போதை மருந்து பழக்கம், புகை, மனநோய், வலிப்பு, நரம்புத் தளர்ச்சி ஆகிய நோய்களுக்கு
டாக்டர் G. வெங்கடாசத்திரி
B.A.M.S., D.Ac., D.A.P.,
SECRETARY, PROHIBITION & DRUG ABUSE PREVENTION
ஸ்ரீ டீ-அடிக்ஷன் சென்டர்
நெ. 61, ... ரோடு, E.B. எதிரில், செஞ்சி ...
போன்: 04174-73265






''ராத்திரி ஒரு மணி சார்.''

''எந்தக் காரை எடுத்துக்கிட்டுப் போனார்?''

''காண்டெஸா. அதைத் தவிர வேற எதையும் தொடமாட்டார். அன்னைக்கு அவர் கடைசியா எடுத்ததுதான். அப்படியே ஷெட்டுல நிக்குது. எங்களுக்கு தனித்தனியா கார் இருக்கு.''

''ஜ.வி. எத்தனை மணிக்கு திரும்பி வந்தார்?''

''அவர் திரும்பி வந்து லைட் போட்டப்போ நான் தூக்கக் கலக்கத்தோட புரண்டு வந்துட்டீங்களா, மணி என்ன ஆச்சுன்னேன்? ரெண்டரைன்னார்.''

''ஏன் மேடம்! அவர் சாவைப்பத்தி நீங்க எதுவும் சந்தேகப்படறீங்களா?''

''இல்லை சார்! அதிலே கதிருக்குத்தான் சந்தேகம். அவசரப்பட்டு அவன் போலீஸ்ல சொன்னதாலே 'பிரேத பரிசோதனைங்கிற பேர்ல அவரை வெட்டி, துண்டுதுண்டாத்தான் கொடுத்தாங்க'' என்றாள் ஜெயராணி குரல் அடைக்க.

''நீங்க சொன்ன குழ்நிலை. வார்த்தைகளை வச்சு அந்த டைரியைக் கண்டுபிடிச்சுத் தரணும். இதான் எங்க வேலை, இல்லையா?''

''ஆமாம்.''

''இந்தக் கையெழுத்தை உங்களுக்குத் தெரியுதான்னு பாருங்க!''

பரத், சசிலாவின் பட்டில் எதிர்பார்ப்பட்ட அந்த மிரட்டல் கடிதத்தை எடுத்துக் காட்டி விவரங்களைச் சொன்னான்.

ஜெயராணியின் புருவங்கள் உயர்ந்தன.

''இந்தக் கையெழுத்து எனக்குத் தெரியலையே. யாரு இப்படி செஞ்சது? புரியலையே.''

''நாங்க இங்கே வரப்போறது யார், யாருக்குத் தெரியும்?''

''சோமனுக்கு, கதிருக்கு, எனக்கு. ஃபாதருக்கு!''

''யாரது ஃபாதர்?''

''இங்கே சர்ச்ல ஃபாதர் ரொஸாரியோன்னு இருக்கார், எங்க குடும்ப நண்பர், அவர் எப்ப வெளியூர் போனாலும், எந்த புது தொழில் ஆரம்பிச்சாலும் ஃபாதர்கிட்டே சொல்லி ஆசீர்வாதம் வாங்கிடுவார். வாராவாரம் இங்கே வந்து கதிரோட செஸ் விளையாடுவார். அவர்கிட்டே இதைப்பத்திச் சொன்னேன்.''

''இதைப் பத்தின்னா? பெட்டில இருந்த பணம் பத்தியுமா?''

''ம். அவர்கிட்டே எதையும் நாங்க மறைக்கிறதில்லை.''

பரத் மேலும் கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க, சசிலா குறிப்புகள் அவ்வப்போது எழுதிக் கொண்டாள்.



ஐ சாப்பிட்டுவிட்டு, பங்களாவைச் சுற்றிப் பார்த்து விட்டு, உபயோகத்திற்கு டிரைவர் இல்லாமல் ஒரு அம்பாசிடர் கார் பெற்றுக் கொண்டு, காலையில் வந்து சந்திப்பதாகச் சொல்லிப் புறப்பட்டு ஹோட்டல் அறைக்கு வந்த போது, மடமடவென்று கறுப்பு ஷட்டரை இறக்கி கடையை மூடியிருந்தது வானம்.

## 12

**கை**ப்பையைக் கட்டில் மேல் வீசிவிட்டு கொண்டே சுசிலா, 'ஜெயராணி முகத்தில சோகத்தைத் தவிர இன்னொண்ணு நான் பார்த்தேன்' என்றாள்.

பரத் டி.வி. போட்டுப் பார்த்து உடனே அணைத்து, ''எந்த ட்ரஸ் போட்டாலும் பிரதமர்தான்! ம்? என்ன சொன்னே? நானும் பார்த்தேன். ஆனா அந்தப் பரு இன்னும் அழகு சேர்க்குது.''

''ரப்பிஷ்! நான் சொன்னது ஒரு கள்ளத்தனத்தை! பேச்சில லேசா அலையல் நெடி!''

''கூடவே பீட்டர் ஸ்காட்ச் நெடியும் சுசி!''

''எவிட?''

''மேல் மட்டத்தில சகஜம் சுசி! அம்மா முன்னாடியே பொண்ணு கஞ்சா அடிச்சுட்டு எவனையோ இழுத்துக்கிட்டுப் போறா. அவனும் என்னமோ நடைவண்டி மாதிரி பின்னாடியே இளிச்சுக்கிட்டுப் போறான். மாடில அப்படி சிரிச்சாளே, என்ன செஞ்சிருப்பான் பயலா!''

''பீ சீரியஸ் பரத். பாலிதீன்! வாட்டர்! ஏதாச்சும் யோசிச்சீங்களா?''

''பாலிதீன் திடப்பொருள். வாட்டர் திரவப் பொருள். அவர் சொல்ல வந்தது தன் டைரி இருக்கிற இடத்தை. மேஜை டிராயர்ல இருக்கு. கப்போர்ட்ல இருக்கு. மெத்தைக்கு அடியில இருக்குன்னு சொல்லலாம். பாலிதீன் வாட்டர்னா என்ன புரியுது? ரொம்ப யோசிக்கணும் சுசி! அதுக்கு முன்னாடி மனசுக்கு ஒரு ரிலாக்ஸேஷன் வேணும். இப்ப ஒரு பச்சக் கொடுக்கிறேன்னு வையி. ஸ்ஹோர் டபிள் ஃபிகராகும்.''

''நோ பரத்! பெட்டியைச் சொன்ன டைரியை கண்டுபிடிங்க முதல்ல''

''என் கைல ராங் பண்ணாத சுசி! அப்புறம் எல்லாமே ராங்காப்பூடும்.''

''வர்ற வழியெல்லாம் அந்தப் பாட்டைக் கேட்டுக் கேட்டு ஒரு மாதிரியாயிட்டீங்க நீங்க. பேசாம போசிங்க.''

அறையின் அழைப்பு மணி ஒலித்தது.

பரத் சென்று திறக்க, கதிர் நின்று கொண்டிருந்தான்.

தலையில் தொப்பி. கழுத்தில் ஸ்கார்ஃப். நெற்றியில் குங்குமம்.

"சார்! நான் கதிர். கோயிலுக்குப் போயிட்டு வீட்டுக்கு வர்றதுக்குள்ளே நீங்க வந்துட்டு வந்துட்டீங்க."

பரத் கை குலுக்கி அவனை உள்ளே வரவேற்றான். அமர்ந்ததும் பரத் சிகரெட் எடுத்துக் கொண்டு அவனுக்கு நீட்ட, "ஸாரி, பழக்கமில்லை" என்றான். [illegible] நேராகப் பார்க்கத் தயங்கினான்.

"அம்மா எல்லா விபரங்களும் சொல்லியிருப்பாங்க. அந்தப் பெட்டியைக் கண்டுபிடிக்க நீங்க வந்திருக்கீங்க. ஆனா எனக்கு அதைப் பத்தி அக்கறையில்லை. எனக்கு ஒரு உதவி செய்யணும் நீங்க."

"என்ன செய்யணும்."

"எங்கப்பாவோட சாவில இருக்கிற மர்மத்தைக் கண்டு பிடிக்கணும்."

"உங்கப்பா ஹார்ட் அட்டாக்குல இறந்தார்..."

"அதை நான் நம்பத் தயாரா இல்லை."

"போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை நம்பித்தானே ஆகணும்?"

"போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டைக் கொடுக்கிறது யாரு? ஒரு டாக்டர்! அவரும் மனுஷன்தான். எந்த மனுஷனையும் விலைக்கு வாங்க முடியுமே. சிலருக்கு பெரிய விலை. சிலருக்கு சின்ன விலை."

"அப்படி யாரு விலைக்கு வாங்கினதாச் சொல்றீங்க?"

"அதைத்தான் உங்களைக் கண்டுபிடிக்கச் சொல்றேன்."

"உங்கப்பாவை சதி செஞ்சி யாரோ கொலை செஞ்சுட்டதா நினைக்கிறீங்களா?"

"ஆமாம். ஆமாம். ஆமாம்" என்றான் உணர்ச்சிவசப்பட்டு.

"ரிலாக்ஸ்! உங்கப்பாவைக் கொன்றதாலே, யாருக்கு என்ன லாபம்? ஐ மீன்... என்ன மோடிவ் இருக்க முடியும்?"

"பணம்! அந்தப் பெட்டியே சைத்தானா செயல்பட்டிருக்கலாம்."

"லுக் மிஸ்டர் கதிர்! என்னை நேராப் பார்த்துச் சொல்லுங்க. குறிப்பா யாரையாவது சந்தேகப்படறீங்களா?"

கதிர் அமைதியானான். எச்சில் விழுங்கினான். பரத் கண்களை நேராகப் பார்த்தான். தயங்கினான். தலையை உலுக்கிக் கொண்டான்.





காது கேளாதவர்களைக்
காது கேட்கச் செய்யும்
கோவை டாக்டர்
சாமிகிரி சித்தருக்கு
திருச்சி Dr. S.A. ரஷீத்
அவர்கள் பாராட்டு

16.7.95ஆம் தேதியன்று திருச்சி ஜெஸ்பியா தோட்டத்தில் சாமிகிரி சித்தர் காதொலி சிகிச்சை முகாம் நிறைவு விழாவில் தலைமை ஏற்ற திருச்சி டாக்டர் எஸ்.ஏ. ரஷீத் டி.எம்.ஓ. அவர்கள் பேசியதாவது:

"சித்த மருத்துவமும் ஆங்கில வைத்தியமும் கைகோர்த்து நடக்கக் கூடிய காலம் வருகிறது. நான் ஆங்கில மருத்துவத்தில் பலவற்றைக் கற்றவன்தான். ஆனாலும் சத்தமாகக் காது கேளாதவர்களையும்கூட டாக்டர் சாமிகிரி சித்தர் சில மணித் துளிகளில் காது கேட்கச் செய்வதை நேரில் பார்த்து, சித்தரின் பால் உள்ள மரியாதையையும் சித்த வைத்தியத்தின் பால் உள்ள நம்பிக்கையும் வளர்கிறது. சாமிகிரி சித்தர் போன்ற திறமையாளர்களை மருத்துவத் துறையும், தமிழக அரசும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே என் ஆசை. அவரது அனுபவங்களும் கருத்துக்களும் மருத்துவத் துறைக்கு அரிய பொக்கிஷமாக பிற்காலத்தில் அமையும்." இவ்வாறு டாக்டர் ரஷீத் அவர்கள் பாராட்டிப் பேசினார். காது கேளாதவர்களே வாருங்கள். உங்கள் நலனில் அக்கறை கொண்டோருடன் வாருங்கள். காதில் வலியா? இரைச்சலா? சீழ் வடிகிறதா? சரியாக காது கேட்க வில்லையா? இரண்டு வேளை சிகிச்சை பெற்று சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள். அறுவை சிகிச்சை செய்தும் குணமாகாதவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். காது கருவியை உபயோகித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில்லை.

டாக்டர் சாமிகிரி சித்தர்

காதொலி நிலைய சித்த மருத்துவமனை, 401, கிராஸ் ரோடு, காந்திபுரம், கோயமுத்தூர் 641 012.
போன்: மருத்துவமனை: 234215 வீடு: 473291

தினசரி திங்கட்கிழமையில் இருந்து வெள்ளிக் கிழமை வரை காலை 8.30 மணி முதல் 9 மணிக்குள்ளாக.
ராஜ் பிளஸ் உங்கள் நேரத்தில் 5 நிமிடம் மட்டும் காதொலி சிகிச்சையைப் பற்றி விளக்குகிறார்

''பாமிலா நீங்க ரகசியம் காப்பாத்துவீங்களா பரத்?'' என்று சத்தியம் கேட்கும் தோரணையில் தன் வலக் கையை நீட்டினான். அதைத் தன் வலக் கையால் பொத்தி ''ஷ்யூர்! சொல்லுங்க'' என்றான் பரத்.

''என் குடும்பமே ரொம்ப விசித்திரம் சார்! பணமும், பட்டமும் தான் எங்கப்பாவோட லட்சியங்கள். மத்த எதைப் பத்தியும் கவலை இல்லை. வீடு எப்படிக் கெட்டாலும், கவலை இல்லை. கஞ்சா சிகரெட், வீட்லயே குடிக்கிற தங்கை! சதா புதுப்புது பாய் ஃப்ரெண்ட்ஸ். கேட்டா 'யூ ஆர் நாட் ஃபிட் டு சொஸைட்டி' என்று பதில் சொல்வா. நான் அவளோட சரியாப் பேசி பதினைஞ்சு நாளாச்சு. தன்னைத் தெளிந்து விட்ட கேஸ்! ஃபாக்டரியை அப்பா சரியா கவனிக்காம குறுக்கு வழி திட்டங்கள்ல ஆர்வம் காட்டின தாலே அங்க நிர்வாகத்தில ஏகப்பட்ட ஓட்டைகள். யார் யாரோ சாப்பிட்டாங்க. எனக்கு டிசிப்ளின் முக்கியம் சார். படிக்கறதும் காலேஜும் சொல்லித் தந்தது அது. படிப்பு முடிஞ்சதும் இங்கே வந்து என் குடும்பத்தைப் பார்த்துட்டு வெறுத்துப் போயிட்டேன். ஓடிப் போயிடலாமான்னு கூடப் பார்த்துட்டு. ஆனா அப்பாவோட வேலைக்காரர்களுக்கு விசுவாசம் குறைவுன்னு புரிஞ்சதும் நிர்வாகத்தில அக்கறை காட்ட ஆரம்பிச்சேன். ஃபாக்டரியில ஏழு பேரை டிஸ்மிஸ் செஞ்சேன். லாசி, கேஸ்வியை விட்டுட்டு நான் எங்கேயோப் போயிட்டேன். எங்கப்பா சாவில குறிப்பா யாரை யாச்சும் சந்தேகப்படறீங்களான்னு கேட்டீங்க. யெஸ். நான் ஒருத்தனை சந்தேகப்படறேன். ஆனா வெளியில சொல்ல முடியலை.''

''யாரு?''

மேலும் தயங்கி விட்டு, ''மேனேஜர் சோமன்'' என்றான்.

''இதை ஏன் வெளியில சொல்ல முடியலை?''

''ரெண்டு காரணங்கள். என்கிட்டே சரியான ஆதாரமில்லை. சோமனுக்கு இந்த எஸ்டேட்டோட அத்தனை உள் விவகாரங்களும், விசாரங்களும் தெரியும். குறிப்பா அந்த அம்பத்திரண்டு லட்ச ரூபாய் உயில்! ப்ளீஸ்... நீங்க கண்டுபிடிங்க அந்த ஆதாரத்தை. என்னமோ நடக்குது பங்களால. பின்னணி சோமன்தான்.''

பரத் அந்த மிரட்டல் கடிதத்தை எடுத்துக் காட்டினான். விவரம் சொன்னான்.

''இது யார் கையெழுத்துன்னு தெரியுமா?''

''சோமன் கையெழுத்து மாதிரிதான் தெரியுது. வேறே சொல்லத் தெரியலை.''

''சோமன்தான் எங்களை போன் பண்ணி வரவழைச்சது. அவரே எதுக்காக மிரட்டணும்?''

''சோமனை தானாவா வரவழைச்சார்? அம்மா சொல்லித் தானே?''



''வெல். நாளைக்கு சந்திக்கலாம் சார்! நீங்க சொன்ன சில விஷயங்களை மனசில வச்சிக்கிறேன்'' என்றான் பரத்.

கதிர் எழுந்து கொண்டு, 'இந்த ரூம் வசதியா இருக்கா? தனி கூட் வேணும்னா மாத்தித் தரச் சொல்லட்டுமா?'' என்றான்.

''வேணாம். இது வசதியாவே இருக்கு.''

''பரத்திற்கு மட்டும் குட்நைட் சொல்லிவிட்டு வெளியேறி னான் கதிர்.

அவன் வெளியேறியதும் நாற்காலி அருகில் கிடந்த கர்ச்சீப்பை எடுத்து சுசி. ''பரத், கதிர் தவற விட்டுட்டுப் போயிட்டார். நாளைக் குக் கொடுத்திடணும்'' என்றாள்.

## 13



சந்தடியில்லாத வெளிச்சம் குளிர் காற்றை கிச்சுகிச்சு மூட்டிக் கொண்டிருக்க, பரத், சுசிலா சென்றபோது இன்ஸ்பெக்டர் பத்மநாபன் ஹோட்டலில் இருந்து சுவாரஸ்யமாக வரவழைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவசரமாக முடித்து கை கழுவி எவர்சில்வர் ஜக்கில் இருந்த பூரா தண்ணீரையும் குடித்து முடித்து விட்டு, ''சொல்லுங்க. என்ன செய்யணும் நான்?'' என்றார்.

பரத் கொடைக்கானலுக்கு அவர்கள் வந்த விதம், சந்தித்தவை, பேசியவை அனைத்தும் சொன்னான். அங்கங்கே கண்டமர் ரகசியங்களை சென்சார் செய்து.

''அப்படின்னா கதிர் இன்னும் கன்வின்ஸ் ஆகலையா? விபுநாத் சாவில எந்த மர்மமும் கிடையாதுங்க பரத்! விசாரிச்சது நானேதான். முதல் அட்டாக்கே கடுமையா. ஃபேட்டல் அட்டாக்கா வாறதுண்டு. லேசா வலி ஆரம்பிச்சு, துடிச்சு, ஆஸ்பத்திரிக்கு வந்து தான் இறந்திருக்கார். கதிரும் கூடவேதான் இருந்திருக்கார். போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் பார்க்கறீங்களா?''

பத்மநாபன் அலமாரியை சாவி போட்டுத் திறந்து ஃபைல எடுத்துக்கொண்டு வந்தார். புரட்டி பரத்திடம் காட்டினார்.

பரத் நிதானமாகப் படித்தான்.

டாக்டரின் கையெழுத்தைப் பார்த்தான்.

வில்வேஸ்வரன் என்றிருந்தது.

''இந்த வில்வேஸ்வரன்...''

''ரொம்ப நல்ல டாக்டர். கவர்ன்மெண்ட் ஹாஸ்பிடல்ல சீப் டாக்டர். தனியா கிளினிக் வேற வச்சிருக்கார். விபுநாத்தோட குடும்ப டாக்டரும் இவர்தான். பிரேத பரிசோதனை செஞ்சதும் இவர்தான்.''

"கதிர் என்ன சொல்றாங்க..."

"டோர் வில்வேல்வரன் தன்னை விக்கிற ரகமில்லை. பக்கா ஜெண்டில்மேன். ஒன்பது வருஷம் இங்கே இருக்கார். எனக்கு அவரை பார்த்தாலே தெரியும். அவரைச் சந்தேகப்பட வேண்டியதே இல்லை. விபுநாத் சாவிலே எந்த மர்மமும் இல்லை."

"ஆனா எங்களுக்கு வந்த மிரட்டல் கடிதத்துக்கு என்ன சொல்றீங்க?"

"அது... வேற ஏதோ காரணம். விசாரிக்கலாம்."

இருவரும் விடை பெற்று, காருக்கு வந்தார்கள்.

"எங்கே போறோம் பரத்?"

"டாக்டரைப் பார்க்க."

"பரத் பி.எம். ரிப்போர்ட் தெளிவா இருக்கே. பின்னே ஏன் அதே மேட்டரைக் குடைஞ்சிக்கிட்டு? டைரியைக் கண்டு பிடிக்கிறதுதான நமக்கு வேலை."

"இதுவும் ஒரு அடிஷனல் வேலை சுசி! கதிருக்கு உள்ள அதே ஆதாரமில்லாத ஒரு சந்தேகம் லேசா எனக்கும் இருக்கு."

டாக்டர் வில்வேல்வரன் பூரணம் விஸ்வநாதனின் அண்ணன் போல இருந்தார். காலண்டரில் பங்காரு அடிகளார். மேஜைக் கண்ணாடிக்கு அடியில் சத்யசாயி பாபா. ஹாலில் இருக்கில் ஊதுபத்தி மணம். மேஜை மேல்.

அறிமுகங்கள் முடிந்ததும்... கேட்டதும்

"போன் செஞ்சது ஜெயராணி. காலை மணி அப்போ ஏழு எழரை இருக்கும். நான் பல் தேய்ச்சிட்டு பேப்பர் கையில் எடுத்தேன். போன் உடனே கிடைச்சு தூக்கிட்டு ஓடினேன். விபுநாத் மூச்சு விடத் திணறிக்கிட்டிருந்தார். உடம்பு ஒரே ஸ்வெட்டிங். கையை நெஞ்சில வச்சு முனகினார். புரிஞ்சு போச்சு. உடனே ஊசி போட்டு மசாஜ் பண்ணி, என்னென்னவோ பண்ணிப் பார்த்து... அவருக்கு ஆக்ஸிஜன் தேவைப்பட்டதை உணர்ந்து என் ஹாஸ்பிடலுக்கு கொண்டாந்தேன். ஆனா இங்கே வந்து பதினைஞ்சு நிமிஷத்துக்குள்ளே இதயம் நின்னுடிச்சு. இது ஒரு சடன் கொலாப்ஸ்! சந்தேகமே இல்லை. ஒரு மண்ணுமில்லை. நானேதான் பிரேத பரிசோதனை செய்த சந்தர்ப்பமும் அமைஞ்சது. ஐ வாஸ் நாட் ராங். கார்டியாக் அட்டாக்தேதான்."

"ஏன் டாக்டர் இப்படி அடிச்சுப் பேசறதுக்கு எவ்வளவு வாங்கினீங்க?"

"நான்சென்ஸ்! கெட் அவுட் ஆஃப் திஸ் ப்ளேஸ்" என்று கண்ணைச் சுருக்கிக் கத்தினார் வில்வேல்வரன்.

வெளியே ஓடி வந்து விட்ட பரத், சுசியிடம், "சுசி சந்தேகமே இல்லை. கலப்படமில்லாத அசல் தன்மானம். இவரை விலைக்கு வாங்க சான்ஸே இல்லை" என்றான்.



"வேற சாவு ஆராய்ச்சிக்கு முற்றும் வச்சிடலாமா?"

"இல்லை சுசி! ஒரு கமா போட்டு வை. சேர்மனைப் பார்த்துப் பேசிட்டுச் சொல்றேன்."

பரத் காரை விபுநாத்தின் பங்களாவில் நிறுத்தினபோது பப்லுவும், ஆர்த்தியும் இரண்டு குதிரைகளில் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருக்க... பங்களாவுக்கு அடுத்து இருந்த ஸ்டாஃப் குவாட்டர்ஸின் முதல் வீட்டை நோக்கி நடந்தார்கள் இருவரும்.

வாசல் கதவு திறந்திருந்தது. உள்ளே குளியலறையில் தண்ணீர் சப்தம் கேட்டது.

"சேர்மன்! மிஸ்டர் சேர்மன்!" அழைத்துக் கொண்டே காலை உள்ளே வைத்தான் பரத்.

"யாரானு?" என்று குரல் எழுப்பினான் சேர்மன்.

"நான் ஆனு இவ பொன்னு."

"எந்தா!"

"சார்! பரத் வந்திருக்கேன். மெதுவா குளிச்சிட்டு வாங்க. வெயிட் பண்றோம்."

இரண்டே அறைகள் கொண்ட அந்தச் சிறிய வீட்டில் முன்னறையின் நாற்காலியில் அமரப் போன சுசிலாவை ரகசியமாக அதட்டினான் பரத்.

"மண்டு! எவ்வளவு பெரிய சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. தேடு. அவன் வர்றதுக்குள்ளே அங்கே இங்கே தேடு."

ஓசை எழுப்பாமல் மேஜை டிராயர்களில், அலமாரிகளில், புத்தக வரிசைகளில் அவசரமாக இருவரும் எதை என்று புரியாமல் தேடத் தொடங்கினர்.

ஹேங்கர்களில் உடைகள் மாட்டின கப்போர்டைத் திறந்த பரத், "சுசி இங்கே வா" என்றான். வந்ததும், "இதோ பாரு. நீ ஏரியில பார்த்த நீல ஜெர்கின் இந்தக் கலரா?"

சுசிலா வியந்தாள். "இதே கலர்தான் பரத்! இதே மாதிரி வளவளப்பான மெட்டீரியல்தான். வெளிச்சத்திலே டாலடிச்சது."

அருகே பாத்ரூமில் தண்ணீர் கொட்டிக் கொள்ளும் சப்தம் நின்று விடவே இருவரும் அவசரமாக வந்து நாற்காலிகளில் அமர்ந்து கொண்டார்கள்.

சேர்மன் வினாடிகளில் இடுப்பில் நீளமான டவலுடன் வந்து, "வெயிட் பண்ணுங்க. அஞ்சு நிமிஷத்தில வரும்" என்று அடுத்த அறை சென்று மூன்று நிமிடங்களில் தலை வாரிக்கொண்டே வந்தான். பேண்ட், டி ஷர்ட் அணிந்து "எந்தா ஈ காலையில வந்திருக்கீங்க? கண்டுபிடிச்சோ?"

"இல்லை, சேர்மன்! விபுநாத்துக்கு கொடைக்கானலில் எங்கெங்கே சொத்துகள் இருக்கு, அங்கே எப்படிப் போகணும்னு விலாசங்கள் எழுதி, மேப் மாதிரி வரைஞ்சு கொடுங்க."

''தாரேன். காலைக்குள் தோட்டம் மட்டும் லேக் பக்கம். மத்த எல்லாம் மலை மேலதான். நாயுடுபுரம் கேள்விப்பட்டீரா?''

''பட்டில்லை'' என்றான் பரத்.

''அந்தத் தாண்டனும் நம்ம ப்ளெமல தோட்டத்துக்கு ரெண்டு டஜன் செலவு பண்ணி பிரைவேட் ரோடு போட்டோம். டேமிஞ் காய்த் தோட்டம், ஜூஸ் ஃபேக்டரி எல்லாம் அங்கேதான்.''

''ஒரு பேப்பர்ல எழுதிக் கொடுத்துடுங்க. மறந்துடுவேன். ஞாபக மறதி அதிகம்.''

''ஆமாம் சார்! நீங்களும் நினைச்ச ஒருநாள் புருவத்தை வேஷ்டி பண்ணிட்டார்'' என்றாள் கவியா.

சோமன் சிரித்து, காகிதம் எடுத்து விவரமாய் எழுதிக் கொடுத்தான்.

''இன்னும் ஒரு கேள்வி. விடுறாத இயற்கையா சாகலை. அதிலே ஏதோ சதி இருக்குன்னு வச்சுக்குவோம்.''

''அதெப்படி வசருத்கிறது? நேச்சுரல் டெத் சாரே, போலீஸ் தீர்மானிச்ச.''

''இப்பதான் அதே போலீசைப் பார்த்துட்டு வர்றேன். ரகசியமா விசாரிக்கிறோம். லேசா சந்தேகம் இருக்குன்னார் இன்ஸ்பெக்டர் பத்மநாபன். என் கேள்வி என்னன்னா அப்படி இது சதின்னு வச்சிக்கிட்டா நீங்க யாரை சந்தேகப்படுவீங்க?''

''பண்ணைக் காடு மேகநாதன்தான்.''

''ஓ! பெட்டிஷன் போட்டவர். பெண் கேட்டு தோத்தவர்.''

''அதே. வேற ஒரு பகையும் சாருக்கு இல்லை.''

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே... வெளியில் லேசாய் சாரல் தொடங்க... ஓர் ஆசாமி ஓடி வந்தான்.

''மேனேஜர் சார்! மழைதான் வரப்போகுது. கந்தசாமி பாக்கிப் பணத்தைக் கேட்டதும் கொடுத்துட்டார். இந்தாங்க எண்ணிப் பார்த்துக்கங்க. எழுநூத்தி இருபது.''

இடுப்பு வேட்டி மடிப்பில் இருந்து பணம் எடுத்துக் கொடுக்க, அது சொதசொதவென்று ஈரமாய் இருந்தது.

''அறிவு இருக்காடா உனக்கு? பணத்தை இப்படிதான் நனைச்சிக் கொண்டுவாரதா? ஒரு ப்ளாஸ்டிக் பையில போட்டு கொண்டுவரத் தெரியாதா?'' என்றான் கோபமாக சோமன்.

எங்கோ நினைவில் இருந்த பரத் சட்டென்று உள்ளே ஒரு பொறி பறக்க, ''சோமன்! இவனை கடைசியா என்ன கேட்டீங்க?'' என்றான்.

''ஒரு ப்ளாஸ்டிக் பையில போட்டு கொண்டுவரத் தெரியாதான்னு கேட்டேன்.''




**சிறுநீரக கற்கள், சர்க்கரை நோய், மூட்டு நோய்**

இந்த உலகத்து மக்களை மிக அதிகமாக பாதிக்கக் கூடிய சர்க்கரை நோய், சிறுநீரகக் கற்கள் மற்றும் மூட்டு நோய் ஆகிய வியாதிகளை சித்த மருத்துவ முறையில் குணப்படுத்த தாங்கள் அணுக வேண்டிய ஒரே முகவரி:

சித்த மருத்துவ கல்லூரியில் முறைப்படி ஐந்தரை ஆண்டுகள் படித்த

**டாக்டர் லியோனார்டு**
BSMS., M.D.,
மற்றும்
**டாக்டர் திருமதி அனுராதா விஜய்**
BSMS., M.D.,
ஆகியோரால் நிர்வகிக்கப்படும்

**தமிழன் சித்த மருத்துவ நிலையம்**

3, கிழக்கு சாலை, கே.டி.எஸ். பிளாட்ஸ், நந்தி சிலை அருகில், மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை - 600 035.
தொலைபேசி: 4360217.

''தேங்க் யூ. தேங்க் யூ வெரி மச். கதிர் வா''

சோமன் புரியாமல் பார்க்க, இருவரும் வெளியில் வந்து பங்களாவுக்கு வந்தார்கள்.

''என்ன பரத்?'' என்றாள் கதிராவும் புரியாமல்.

''அந்த டைரியைக் கண்டுபிடிச்சிட்டேன் கதி!''

''எப்படி?''

''அந்த வார்த்தைகள் என்ன பாலிதீன்! வாட்டர்! ரெண்டுக்கும் உள்ள தொடர்பு என்ன? பாலிதீன் ஒரு வாட்டர் புரூஃப்! விபுலாத என்னுடைய யூகம் என்னன்னு தெரியுமா? டைரியை ஒரு பாலிதீன் பையில போட்டு வாட்டரில போட்டிருக்கேன்! ஆனா வாட்டர்ங்கறது மொட்டையா அர்த்தம் எடுத்துக்கக் கூடாது. ஏதோ இணைஞ்ச வார்த்தைகளோட முதல் வார்த்தை வாட்டர். இப்போ நீ சொல்லும்மா வாட்டர்ல ஆரம்பிக்கிற பொருள்களின் பெயர்களை எல்லாம் வரிசையாச் சொல்லு பார்க்கலாம்.''

''வாட்டர் பேக், வாட்டர் கலர், வாட்டர் போலோ, வாட்டர் மீட்டர், வாட்டர் கூலர், வாட்டர் ஜக்...''

''ஜக்... மக்கு! நான் எதிர்பார்த்ததை மட்டும் விட்டுட்டு மத்ததையெல்லாம் கரெக்டா, வரிசையாச் சொல்லிட்டே!''

''என்ன அது?''

''வாட்டர் டேங்க்! என் யூகப்படி அவர் சொல்ல வந்தது என்னா, டைரியை பாலிதீன் பையில போட்டுக் கட்டி வாட்டர் டேங்க் உள்ளே போட்டிருக்கேன். அவ்வளவும் பேச முடியாம பாலிதீன், 'வாட்டர்'ன்னு முனகியிருக்கணும். வா, என் யூகம் கரெக்ட்தானான்னு பார்க்கலாம்.''

இருவரும் பங்களாவுக்கு உள்ளே வந்து, வேலைக்காரனிடம் சொல்லி ஜெயராணியை, கதிரை வரச் சொல்லி, இருவருக்கும் தன் யூகம் சொல்லி, எல்லாருமாக மொட்டை மாடிக்கு வந்தார்கள்.

மொட்டை மாடியின் ஒரு மூலையில் அந்த வாட்டர் டேங்க் இருந்தது. பரத் பரபரத்தான்.

வாட்டர் டேங்கிற்கு இரும்புப் படிகள் இருந்தன. அதில் ஏறின பரத் டேங்க் மேலே போட்டிருந்த தகர மூடியைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்து விட்டு, பிறகு அவர்களைப் பார்த்து கட்டை விரலை உயர்த்தி, ''ஐ வின்'' என்றான்.

குனிந்து பாலிதீன் உறையோடு மிதந்த சிறிய பாக்கெட் டைரியை எடுத்துக் கொண்டு இறங்கி வந்து ஜெயராணியிடம் கொடுத்தான்.

''கிரேட் சார்'' என்றவள் கட்டியிருந்த நூலைப் பிரித்து, உறையிலிருந்து டைரியை எடுத்தாள். உள்ளே ஏராள தேதிகளில் வெறுமை. ஒன்றிரண்டு தேதிகளில் ஒரு சில வரிகள் மட்டும்.



இறந்த முதல் தினத் தேதியைப் புரட்ட, அந்தப் பக்கத்தில் 'பெட்டி இருக்குமிடம்...' என்று போட்டுக் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.




மயக்கம் வராத குறையாக ஜெயராணி, ''என்னங்க இது சின்னக் குழந்தையாட்டம் கிறுக்கி வச்சிருக்காரு?'' என்றாள்.

பரத் பார்த்து, ''போச்சுடா, மறுபடி புதிர்! இது கிறுக்கல் இல்லை மேடம்! ரகசிய வார்த்தைகளால விளக்கியிருக்கார். ஒரு கூட்டல் குறி, ஒரு அம்புக்குறி பிறகு ADD 4 அடுத்து தபால்கார்டு மாதிரி வரைஞ்சிருக்கார். அதன் பிறகு M-17 ங்கும். சத்தியமாக் குழப்புது. பொறுமையா யோசிக்கணும்.''

''வந்த வேலை முடிஞ்சிடுச்சுன்னு நினைச்சேன் நான்'' என்றாள் கதிரா.

## 14

ஹோட்டலுக்குத் திரும்பி அறையின் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழையப் போன பரத் காலை நடராஜர் போல அப்படியே பாதியில் நிறுத்தினான்.

கதவின் கீழ் இடுக்கு வழியாக உள்ளே தள்ளிவிடப்பட்டிருந்த ஒரு காகிதத்தில் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது.

**24 மணி நேரத்தில் ஊரை விட்டு நீங்கள் வெளியேறா விட்டால், உங்களை விட்டு உங்கள் உயிர்கள் வெளியேறுவது உறுதி.**

அதே கிறுக்கல் கையெழுத்து! நீல பால்பாய்ண்ட் பேனா!

''கதி! எங்கோ நம்ம கோணத்தில ஒரு தப்பு செய்றோம்னு நினைக்கிறேன். வயத்தில் 'பிஷ்ஷி'' என்றான் சிந்தனையாக.

ரிசப்ஷனை அழைத்து தங்கள் அறை எண்ணை யாராவது விசாரித்தார்களா என்று கேட்டான். இல்லை என்று பதில் வந்தது. ரூம் பையனை அழைத்து கதவிடுக்கில் காகிதம் எதுவும் உள்ளே செருகிவிட்டாயா என்றான். அவன் வெலவெலத்துப் போய் இல்லை என்றான்.

''கதி! யாரை நம்புறது, யாரை சந்தேகப்படறதுன்னே புரியலை. விடுறாத் சாலை எல்லாருமே இயற்கையானதுங்கறாங்க-கதிரைத்

தவிர, நம்மை க்ளோஸா வாட்ச் பண்றாங்க. சட்டு, சட்டுன்னு ரெண்டு மிரட்டல் வந்துடுச்சு டிசைன் டிசைனா. யாரு? ஏன்? எதும் திருடாத போது நம்மை ஏன் தூரத்துப் பார்க்கறாங்க? நடிப்பு உள்ள வார்த்தைகளுக்கு விளக்கம் என்ன? எல்லாமே கேள்விகள்?''

# 15



போன் ஒலித்தது.

ஜெயராணி எழுந்து வந்து எடுத்தாள். பேசியவன் தனியாகக் கிடத்திவிட்டு மாடி பார்த்துக் கத்தினாள், ''ஆர்த்தி! உனக்கு போன்.'' தனியாக பெவிலியாட்டம் விளையாடிக் கொண்டிருந்த ஆர்த்தி இறங்கி வந்து எடுத்து, ''ஹலோ'' என்றாள்.

''ஹலோ பேபி! ஒரு போனை இந்த உலகத்துக்கு நட்டப் படுத்திட்டியே, நியாயமா?'' என்று கரகரத்த குரல் கேட்டது.

''யாரது?'' என்றாள் முகம் வெளிறி.

''சிநேகோ... ஆவியார் கண்ணு.''

''என்ன உளறல் இது?''

''உளறலா? மதுரைல டாக்டர் சுந்தரி நடேசனைப் பார்த்துக் கேக்கலாமா?''

''நான்சென்ஸ்! யார் நீ?''

''எத்தனையாவது தடவைம்மா கண்ணு இது? உடம்பு என்னத்துக்கு ஆகும்? வீட்டை எல்லாரும் ஒட்டடை அடிப்பாங்க கண்ணா நீ கர்ப்பக் கர்ப்பா கர்ப்பப் பையை ஒட்டடை அடிக்கிறது தர்மமா?''

''தட் இஸ் மை பர்சனல் அஃபேர்! நீ யாரடா கேக்கறதுக்கு? ராஸ்கல்!''

''அப்படியா? இந்த ராஸ்கல் என்ன செய்யப் போறான் தெரியுமா? உங்க மம்மி உனக்குப் பார்த்திருக்காங்களே அமெரிக்கா மாப்பிள்ளை. அவன் அடுத்த வாரம் நிச்சயதார்த்தத்துக்கு வருவானில்லை. அப்போ பார்த்து எதுக்கும் மதுரைல சுந்தரி நடேசனை பார்த்துப் பேசிட்டு போப்பான்னு சொல்லப் போறேன்.''

ஆர்த்திக்கு சட்டென்று வியர்த்தது.

''நோ! ப்ளீஸ் டோண்ட் டூ தட். யார் நீ?''

''அது எதுக்கு? உன் அமெரிக்கா வாழ்க்கையைக் கலைக்கட்டுமா, வேணாமா?''



''வேணாம் ப்ளீஸ். வேணாம். அமெரிக்காவ செட்டில் ஆகறது என் லைஃப் டைம் ஆம்பிஷன். அதைக் கெடுத்துடாதே.''

''சரி. அதுக்காக உன் வருங்காலக் கணவனை ஏமாத்தலாமா?''

''நோ! திஸ் இஸ் வே ஆஃப் லைஃப்! அமெரிக்காவ சகஜம்.''

''ஆனா நீ இந்தியப் பொண்ணு.''

''இப்ப என்ன செய்யணுங்கறே?''

''நான் வாயைத் திறக்காம இருக்க தட்சணை வைக்கணும்.''

''எவ்வளவு?''

''நமக்குப் பேராசை கிடையாது. வெறும் பத்தாயிரம். ராத்திரி பத்து மணிக்கு தனியா கார் எடுத்துக்கிட்டு சில்வர் ஃபால்ஸ் தாண்டி மூணாவது வளைவுக்கு வந்து காரை நிறுத்து. நான் வாங்கிக்குவேன். என்ன?''

''சரி'' என்றாள் உடனே அவசரமாக.

மாலை ஆறு மணி.

ஜெயராணி புடவை கட்டி மேலே ஸ்வெட்டர் அணிந்து அதற்கும் மேல சால்வை போர்த்திக் கொண்டிருந்தாள். பயணப் புறப்பாட்டுத் தயார் நிலையில் இருந்தாள். வாட்டர் பேக், சிறிய சூட்கேஸ் பணியாள் எடுத்துச் சென்று காரில் வைத்தான்.

கதிர் இண்டர்காம் எடுத்து தன் குவார்ட்டர்சில் இருந்த சோமனை அழைத்து, ''சோமன்! மம்மி ரெடியாயிட்டாங்க. சீக்கிரம் வாங்க'' என்றுவிட்டு வைத்தான்.

''அம்மா, கேஸ் சம்பந்தப்பட்ட ஃபைல் எடுத்துக்கிட்டீங்க தானே?''

''எடுத்துக்கிட்டேன்ப்பா?'' என்றாள் ஜெயராணி.

''கோர்ட்ல என்ன கேப்பாங்க? என்ன பதில் சொல்லணும்னு எல்லாம் நம்ம வக்கீல் சொல்வார். அதன்படி சொல்லுங்க. ஃபாக்டரி உங்க பேர்ல இருக்கிறதாலே உங்களை சிரமப்படுத்த வேண்டியிருக்கு.''

''சிரமம் எதுவும் இல்லைடா கதிர்! தள்ளி டைம் வாங்க முடியாதாமா?''

''ரெண்டு தடவை வலியுறுத்தி போன்ல வக்கீலைக் கேட்டேன்ம்மா. கிரிமினல் கேஸ் ஹியரிங்ல டைம் வாங்கறது சிரமம்னு சொல்லிட்டார். எவ்வளவு வருஷம் விசுவாசமா வேலை பார்த்துட்டு நமக்கெதிராவே கேஸ் போட்டிருக்கான் பாருங்க. அந்த சூபர்வைசர் சாத்தப்பன். யாரையுமே நம்ப முடியலைம்மா.''

''எல்லாம் நம்ம பேட் டைம் கதிர்! அப்பா திடீர்னு இப்படி நம்மைத் தவிக்க விட்டுட்டுப் போனது. அரைக் கோடி பணம் எங்கேயோ மாட்டிக்கிட்டிருக்கிறது. நம்ம மேல கேஸ் வர்றது... எல்லாம் விதி! இப்பதான் தைரியமா போராடணும்.''

''சரி மேடம்! கொறைச்சு லேட்டாயிடுச்சு போலாமா?'' என்று வந்தான் சோமன்.

''சோமன்! எதுக்கும் நீங்களும் ஒரு தடவை வக்கீல்கிட்டே கேளுங்க. கேஸை இன்னும் ஒரு மாசம் தள்ள முடியுமான்னு.''

''கேக்கறேன் சாரே.''

''மதுரைல காலேஜ் ஹாஸ்டல்ல ரூம் புக் பண்ணிட்டே தானே?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடியே ரெண்டு சிங்கிள் ரூம்ஸ் புக் பண்ணிட்டேன்.''

''சரி. புறப்படுங்க.''

''எங்கே அவ ஆர்த்தி?'' என்று கேட்ட ஜெயராணி, மேலே மாடிப் பகுதிக்குத் தன் பார்வையை ஓட்டினாள்.

''ஆர்த்தி!'' பெருங்குரலில் கதிர் அழைத்தான். ''தனியறையிலே இருக்கோ, தெரிஞ்சுக்கோ... ஒரு தறுதலை இந்த வீட்ல யாரும் கேக்கறதில்லை அவளுக்கு நான் சொல்லிக்கிறேன். நீங்க புறப்படுங்கம்மா. நேரமாகுது'' என்றான் கதிர்.

விரித்த தலையுடன், வெறித்த பார்வையுடன் வந்தாள் ஆர்த்தி.

''கூப்பிட்டியா மம்மி?''

''நான் மதுரை போறேன். நாளைக்கு அனேகமா வந்திடுவேன். அவசியப்பட்டா தங்குவேன். ஏன் டல்லா இருக்கே நீ? முகம் கழுவலை? ட்ரெஸ் மாத்தலை?''

''நத்திங்! போய்ட்டு வா மம்மி.''

அம்பாஸடா காரை சோமன் ஓட்ட, பின் சீட்டில் அமர்ந்து கொண்டாள் ஜெயராணி.

கார் புறப்பட்டுச் சென்றதும் ஆர்த்தி கேட்டாள், ''ஏன் மேனேஜரே ஓட்டிக்கிட்டுப் போறார்? தண்டபாணி எங்கே?''

''அவனுக்கு ஜுரம். இன்னிக்கு லீவு. படுத்திருக்கான் ஆர்த்தி! நீ எப்பவும் மாதிரியான உற்சாகத்திலே இல்லை. ஏன்?''

''நத்திங்'' என்றவள் தன் அறைக்குச் சென்றாள்.

கதிர் தன் அறைக்குச் செல்ல யத்தனித்த போது போன் ஒலித்தது. எடுத்து, ''ஹலோ, கதிர் பேசறேன்.''

''நான் பரத் பேசறேன் சார்.''

''என்ன? கண்டுபிடிச்சிட்டீங்களா அந்தப் புதிருக்கான விடையை?''

''இல்லை. காலையிலேர்ந்து அதையேதான் மண்டையைப் போட்டு உடைச்சுக்கிட்டு இருக்கோம். உங்க டாடியோட பர்சனல் அறையை, அவர் மேஜையை, டிராயரை, அவர் வச்சிருக்கிற காகிதங்களை எல்லாம் ஏதாச்சும் ஃப்ளாஷாகலாம்.''

''நத்திங் ராங் இன் இட். பாருங்களேன். மம்மி கூட வெளியூர் போயிருக்காங்க. வாங்களேன், பார்க்கலாம்.''




# பிரபல அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிடர்

- பெயர் மாற்றத்தால் பெருஞ்செல்வம் ஆகலாம். பணம், பதவி, புகழ் கிட்டும்.
- அதிர்ஷ்டக் கையெழுத்தால் நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்.
- பெயர் வசிய மந்திரத்தை உச்சாடனம் செய்வதால் சகல காரியங்களிலும் வெற்றி தரும்.
- தொழில் நிறுவனங்களுக்கு அதிர்ஷ்டப் பெயர் வைத்தால் அதிக லாபம் உண்டாகும்.
- இவரிடம் நியூமராலஜி, தொழில் வசிய ஆலோசனை கேட்காத வி.ஐ.பி.களே இல்லை என்று கூறலாம்.

தொழில் முடக்கம், வியாபார மந்தம், உத்தியோகத்தில் இடையூறு, தொழில் அமையாமை, கணவன் - மனைவி ஒற்றுமை இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, திருமணத் தடை, மனக் குழப்பம், புகழ் இல்லாமை, முன்னேற்றத் தடை, குடிப் பழக்கத்திற்கு அடிமை, செய்வினை, வெளிநாட்டுச் செல்லத் தடை போன்றவற்றிற்கு மிக நல்ல முறையில் தீர்வு காண இன்றே, இப்போதே உலகப் புகழ் பெற்ற மந்திர பெயர் எண் கணித ஜோதிட மாமேதையைச் சந்தித்து வாழ்வில் வெற்றி பெறுங்கள்.

நியூமராலஜி, நேமாலஜி, சைன், சிக்னேச்சராலஜி, பெயர் வசியம், கையெழுத்து வசியம், தொழில் வசியம், இராஜவசியம் போன்றவற்றால் சகல காரியத்திலும் வெற்றி பெறச் செய்கிறார். சவால் விட்டு காரியங்களை சாதித்துக் கொடுக்கும் தலைசிறந்த பெயரியல் எண்கணித மந்திர மேதை ஆவார். பிரபல இதழ்களில் வரும் இவரது கட்டுரைகளைப் படித்துப் பயன்பெறுங்கள். டி.வி.யில் இவரது நிகழ்ச்சியைக் காணுங்கள்.

**நியூமராலஜி - நேமாலஜி - சைன் - தொழில்வசியம்**



விடுமுறை : செவ்வாய், வியாழன்

**கே. ஆர். பிரபாகர்ராஜ், M.A.,**

நல்லாந்தோட்டம்,

கணுவக்கரை அஞ்சல் - 638459

பு.புளியம் பட்டி வழி, கோவை மாவட்டம்.

☎ 04254 - 87258

ஒவ்வொரு மாதமும் 2, 3 தேதிகளில் மட்டும்

**குருபிரகாஷ் ஹோட்டல்**

71-A, உஸ்மான் ரோடு,

தி. நகர், சென்னை - 17. ☎ 4321414

''எந்த ஊர் போயிருக்காங்க?''

கதிர் விவரங்களைச் சொன்னான்.

''ரைட்... நாங்க இப்பவே புறப்பட்டு வர்றோம்' என்று...

## 16

சொன்ன பரத் போனை வைத்துவிட்டு பரபரப்பாக உடனே போலீஸ் படை ஒன்றை என்னவோ சுறுசுறுப்பாக்கினான்.

''என்ன பரத்?'' என்ற கவிதாவை ''இரு சொல்கிறேன்'' என்று ஜாடை காட்டிவிட்டு ''ஹலோ, இன்ஸ்பெக்டர் பத்மநாபனா? நான் பரத் பேசறேன் சார். குட் ஈவினிங். ஒரு உதவி செய்யணுமே எனக்கு.''

''என்ன?''

''விபுநாத்தோட மனைவி ஜெயராணியும் மேனேஜர் சோமுவும் காரில் புறப்பட்டு நாளைக்கு கோர்ட்டுல ஒரு வழக்கு விசாரணையில கலந்துக்கறதுக்காக மதுரை போறாங்க. இப்பதான் அந்த நிமிஷம் முன்னாடி அவங்க கார் புறப்பட்டது. நம்பர் சொல்றேன் குறிச்சிக்குங்க.'' சொல்லி குறிக்கப்பட்டதும்.

''என்ன செய்யணும்?'' காரை ஃபாலோ செய்யணுமா?''

''ஆமாம். ரகசியமா. அவங்க எங்கே போறாங்க. எங்கே தங்கறாங்கன்னு அவங்க நடவடிக்கைகள் எல்லாம் கண்காணிச்சு எனக்கு தகவல் தரணும். மதுரைல காவேரி ஹவுஸ்ல அவங்க தங்கறதா சொன்னான்.''

''ரைட். நான் ஏற்பாடு செய்றேன் உடனே. என்ன திடீர்னு இப்படி... என்ன விதமான சந்தேகம்?''

''அதைக் காலையில சொல்றேன்.''

''ஒரு விஷயம் பரத்! பண்ணைக்காடு மேகநாதன்... விபுநாத் நெஞ்சுவலி வந்து இறந்த தினம் எங்கே இருந்தார்ன்னு விசாரிக்கச் சொல்லியிருந்தீங்களே.''

''ஆமாம்.''

''விசாரிச்சாச்சு. ஊட்டில அன்னைக்கு ரேஸ். இவர் ரேஸ் பிரியர். ஊட்டிக்குப் போயிருக்கார். ஊட்டியில அவர் தாசப் பிரகாஷ் ஹோட்டல்ல ரூம் நம்பர் 405ல் தங்கியிருக்கார். ஊட்டி போலீசை தொடர்பு கொண்டு அதை உறுதி செஞ்சுகிட்டேன். விபுநாத் மரணத்தை கதிர்தான் அப்பாங்கிற பாசத்தால சந்தேகப்படறார்னு சொல்லலாம். நீங்க எதை வச்சு சந்தேகப்படறீங்கன்னு புரியலையே.''



''எனக்கே இன்னும் சரியாப் புரியலை. எல்லாம் ஒரே புதிர் மாயமா இருக்கு கொஞ்சம் தெளிவாக்கிட்டுச் சொல்றேனே...''

பரத் போனை வைத்தான்.

''நீங்க மனசில என்ன வச்சிருக்கீங்கன்னே தெரியலை பரத்!'' என்றாள் சுசீலா.

''உன்னைத் தவிர வேற யாருக்கும் அங்கே இடமில்லை சுசி!''

''பின்னே ஏன் எவனோ வினிதாவைக் கட்டிக்கறதுக்கு வரச் சொல்லணும்?''

''சுசி! என்ன சொல்றே...? உனக்கு எப்படி?...''

''தெரியும்? டெலிபதி!''

''என்னது வலைப்பதியா?''

''உங்க மனசைப் படிக்க என்னால முடியும் பரத்!''

''எங்கே படி. இந்த நிமிஷம் உன்னே என்ன ஓடுது?''

''ரத்தம்தான்.''

''ஆத்மாவைவிட பெரிய சுயநாயகியாயிட்டே...''

''வினிதாவை காதலி நிலைக்கிட்டே வரச்சொன்னது. நீங்க போய் காலகட்டுக்க அவளுக்குக் காத்திருந்து ஏமாந்து போனது எல்லாம் தெரியும்.''

''என்ன நீ பக்கத்தில நின்னு பார்த்த மாதிரி சொல்றே எல்லாத்தையும்.''

''பரத்! ஏன்ப்பா எனக்கு இப்படி துரோகம் செய்யத் துடிக்கறே?''

''பெரிய வார்த்தை! பெரிய வார்த்தை! வினிதா புது டிசைன்ல ஒரு மோதிரம் போட்டிருக்கிறதாச் சொன்னா. அதை ரகசியமா உனக்குத் தெரியாமல் பார்த்து. அதே மாதிரி உனக்கு ஒண்ணு செஞ்சு...''

சுசீலா இரண்டு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு அவனை முறைத்தாள்.

''ஏன் இந்த பசப்பல்?''

''பூச்சிப்பல் தான் இருக்கு என்கிட்டே. வேறெந்த நீ சொல்ற பல்லும் கிடையாது.''

''இல்லை. நான் தெரியாமத்தான் கேக்கறேன். என் கிட்டே என்ன குறைச்சல்னு இப்படி மனசை அலைய விடறீங்க பரத்?''

''குறைச்சலா? உன்கிட்டேயா? யார் சொன்னா? அமோக விளைச்சல் தான். ஆனா, அறுவடை செய்ய அனுமதிக்கிற தில்லையே. இப்போ உதாரணத்துக்கு, இப்படி உன்னைக் கையைப் பிடிச்சு, இப்படி இழுத்து, இப்படி அணைச்சு, இப்படி முகத்துக்குப் பக்கமா முகத்தைக் கொண்டு வர்றப்ப...''

சுசிலா சட்டென்று விலகிக் கொண்டாள்.

"இப்படி பேய்க்களை கண்டது மாதிரி விலகிடறே பாரு, அதான் பிரச்சனை."

"பரத்! நம்ம நாடு பண்பாடுக்கு பேர் போன நாடு."

"அதான் பேர் போனதுன்னு நீயே சொல்றியே, பிறகு என்ன?"

"இப்ப என்னய்யா பண்ணனுங்கறே?"

"இப்படி மீன் கூடைக்காரி மாதிரி கேட்டீன்னா ரொமான்ஸ் கலைஞ்சிடுது சுசி!"

"இப்ப என்ன டார்லிங் செய்யணும்?"

"இது அழகு! இது கவர்ச்சி! கனவு சாத்திருக்குதில்லே?"

"பரத்! ஐ ப்ராமிஸ் டு பே கில்லலை. இப்ப இல்லை இந்தப் பதிர்களை விடுவிச்சதும்!"

"சொல்லிட்டியில்லே, இனிமே எனக்கு அனுமார் பலம். சுசிலா, இந்த பனியனைக் கழட்டு!"

"பரத்!"

"கழட்டிட்டு வேற மாட்டிக்கிட்டு வா, உடனே பங்களாவுக்குப் போகலாம்னு வந்தேன்" என்றான் பரத்.

## 17

பங்களாவின் முன் காரை நிறுத்திவிட்டு பரத், சுசிலா இருவரும் உள்ளே வந்தபோது, புல்புல்தாரா இசை இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தது-மாடியில் இருந்து.

"கதிர் சார்!"

இசை நின்றது. மேலேயிருந்து எட்டிப் பார்த்த கதிர், "மேலே வாங்க" என்றான்.

"உங்க அப்பாவோட ரூமைப் பார்க்கலாமா?" என்றான் பரத்.

மூவரும் அந்த அறைக்குள் வந்தனர். விசாலமான அறை! நவீன வசதிகள் யாவும் இருந்தன.

"அம்மாவுக்குத் தனியறை உண்டா?"

"இல்லை சார்! ரெண்டு பேருக்கும் ஒரே ரூம்தான்."

பரத், சுசிலா இருவரும் நிதானமாக அந்த அறையை ஆராய்ந்தார்கள். கப்-போர்டுகளில் உடைகளை விலக்கிப் பார்த்தார்கள். தனி அலமாரிகளில் பத்திரங்கள், ஃபைல்கள் இருந்தன. மேஜை, டிராயர்கள் எங்கும் பார்த்துக் கொண்டிருந்த போது அந்தக் கோசு பரத்தின் கண்ணில் வந்து விழுந்து வி.....



அவசரப்பட்டுக் கண்ணைக் கசக்கி விட்டதில் உள்ளே மாட்டிக் கொண்டு உடனே கண் சிவந்தது. சுசிலா இமை பிரித்து ஊதினாள். பலனில்லை.

"பாத்ரூம் வாஷ்பேசின்ல தண்ணி கை நிறைய எடுத்து கண்ணைத் தண்ணி வச்சு திறந்து, திறந்து பாருங்க சார்!" என்றான் கதிர்.

பரத் சென்று அதன்படி செய்து திரும்பினான்.

"பத்து நிமிஷம் ஒரு சின்ன கோசு படாத பாடு படுத்திடுச்சு!" என்றான். மேலும் தொடர்ந்து ஆராய்ந்து விட்டு, எந்தப் புதிய சிந்தனையும் பிறக்காமல் மூவரும் கதிரின் அறைக்கு வந்தார்கள். அமர்ந்தார்கள். கதிர் சொல்லி வந்த உ அருந்தினார்கள்.

"சோமன் கையெழுத்தை விசாரங்கள் எழுதச் சொல்லி வாங்கினோம் கதிர்! எங்களுக்கு வந்த மிரட்டல் கடிதங்களோட கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்த்தோம். எங்களால் சம்மந்தப் படுத்த முடியலை. ஆனா எந்த புத்திசாலி குற்றவாளியும் தன் சொந்த கையெழுத்தில் மிரட்டல் கடிதம் எழுத மாட்டான்."

"சோமுவை என்னால முழுதுமா சந்தேகிக்க முடியலை. அதே சமயம் முழுதுமா நம்பவும் முடியலை."

"அப்படி இருக்கிறப்போ அவனோட உங்க அம்மாவை அனுப்பி வைக்கலாமா நீங்க?"

"வேற யாரோடவும் அனுப்ப முடியாத நிலைமை சார்! நான் நாளைக்கு ஆபீஸ்ல இருந்தாக வேண்டியிருக்கு. பேக்டரி ஆடிட் மும்முரமா நடக்குது. அதனாலதான் அனுப்பினேன்."

"அட்லீஸ்ட் டிரைவரை கூட அனுப்பியிருக்கலாமே."

"டிரைவர் போறதாத்தான் இருந்திச்சு. இன்னைக்கு ஜுரம்னு சொல்லிட்டு அவன் லீவு! நாலு வண்டி இருக்கு. ஆனா ஒரே டிரைவர்தான்."

"சரி டிரைவர் பேர் என்ன?"

"தண்டபாணி!"

"அவன்தானே உங்கப்பாவோட மைசூர் போயிட்டு வந்தது?"

"ஆமாம்."

"அவன் எப்படி ஆளு! நம்பிக்கையானவனா?"

"ஏழு வருஷமா இருக்கான். நல்ல டைப்தான்."

"திடீர்னு டைப் மாற வாய்ப்பிருக்கு கதிர்! நீங்க ஒதுக்கிக் கொடுத்திருக்கிற குவார்ட்டர்ஸ்லதான தங்கியிருக்கான்?"

"வாங்க, அவனுக்கு நிஜமாவே ஜுரமான்னு பார்த்துட்டு வரலாம்."

மூவருமாக நடந்து கொண்டே, "இன்னொண்ணு கேக்கணும் உங்களை. அன்னைக்கு உங்கப்பா அம்பத்தி ரெண்டு லட்சம்

பணத்தோட வந்தாரில்லையா? அந்தப் பணத்தை உங்களுக்கு காமிச்சாரா திறந்து? நீங்க பார்த்தீங்களா?'' என்றான் பரத்.

''நான் பார்க்கலை. ஆனா பெட்டியை நான்தான் மாடிக்கு அவர் ரூமுக்குத் தூக்கிட்டுப் போனேன். நல்ல வெயிட். ஆனா அம்மாகிட்டே காட்டியிருக்கார். அம்மா பார்த்ததாச் சொன்னாங்க.'' மௌனமாக நடந்தார்கள்.

குவாட்டர்ஸ் வாசலில் வந்து, ''தண்டபாணி!'' என்றான் கதிர்.

''சார்!'' என்று உடனே வெளியே வந்தான். மூவரையும் பார்த்து லேசாகத் தயங்கினான்.

''ஜுரம் எப்படி இருக்கு?''

''இப்ப தேவலாம் சார்.'' என்றவன் வெடவெடவென்று ஒல்லியாய் இருந்தான்.

பரத் படாரென்று சட்டென்று தண்டபாணியின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து, ''படவா! உண்மையைச் சொல்லு! ஜுரமா உனக்கு? பல்லு அத்தனையும் பேத்துடுவேன்'' என்று முஷ்டியை ஓங்கி முதல் குத்தை சரியாய் மூக்கில் இறக்கினான்.

''பரத், என்ன இது?...'' என்று கதிர் பதற.

''சார், அடிக்காதிங்க. எனக்கு ஜுரமில்லை, சார். என்னை மன்னிச்சிடுங்க.''

''பின்னே ஏண்டா அப்படிச் சொன்னே?''

''மேனேஜர் சார்தான் நூறு ரூபா தந்து ஜுரம்னு சொல்லி இன்னைக்கு லீவு எடுத்துக்கன்னு சொன்னாரு.''

''எதுக்காக?''

''அது தெரியலை சார் எனக்கு.''

''நீ காரணம் கேக்கலையா?''

''கேட்டேன். அவர் சொல்லலை. நான் சொல்றபடி செய்டா, இல்லைன்னா வேலையை விட்டு நிறுத்திடுவேன்னு சொன்னாரு.''

''வேற என்ன என்ன காரியங்களுக்கு நீ உடந்தையா இருந்திருக்கே?''

''சாமி சத்தியமா வேற எந்த துரோகமும் நான் செஞ்சதில்லைய்யா.''

''தாங்க உன்னை விசாரிச்சதை சோமன்கிட்டே சொன்னே...'' மீண்டும் கை ஓங்க.

''சொல்லலைங்கய்யா. அடிக்காதிங்க. தாங்க மாட்டேன்.''

மீண்டும் மூவரும் பங்களாவுக்கு வந்தனர்.

''பரத்! எனக்கு எதுவும் புரியலை. என்ன இதெல்லாம்? நான் சந்தேகப்பட்டது எல்லாம் சரியாப் போய்டுச்சா? சோமன் தவஞ்சகன்தானா?''



குடிகாரர்கள் உடனடியாக தேவை



மதுவை மறக்க! மது அடிமையை மீட்க!
வாணியம்பாடிக்கு வாருங்கள்!
டாக்டர் அக்பர் கவுசரின் மது அடிமைகள் மறுவாழ்வு மையம்
170, மதுதி வீதி, நியூ டவுன், வாணியம்பாடி - 635 752,
வேலூர் மாவட்டம்.

தினசரி சாப்பிடுங்கள் டாக்டர் அக்பர் கவுசரின் காசினி கேப்சூல், காசினி பவுடர்
மாதந்தோறும் படியுங்கள் டாக்டர் அக்பர் கவுசரின் தெய்வீக மருத்துவம் மாத இதழ்



"இருங்க, பதறாதீங்க. இப்ப எதுவும் கேக்காதீங்க. சோமன் இப்ப ஊரில இல்லை. அவன் குவார்ட்டர்சை வேற சாவி போட்டு நான் திறந்து பார்க்கட்டுமா?"

"எது வேணாலும் செய்ங்க பரத்! உங்களுக்கு முழு உரிமை தர்றேன்."

பரத், சுசிலா இருவர் மட்டும் மாற்றுச் சாவி போட்டு சோமன் குவார்ட்டர்சைத் திறந்து உள்ளே வந்து முக்கால் மணி நேரம் குடைந்து பார்த்தார்கள்.

"சோமன் கில்லாடி. நமக்கு எதுவும் உபயோகமா வச்சு வைக்கலை" என்றான் பரத்.

"இப்போ என்ன செய்யலாம் பரத்? சோமனோட அம்மாவை அனுப்பி வச்சிருக்கேனே..." பதறினான் சுதிர்.

"பதற வேணாம். ஒண்ணும் ஆகாது. உங்கம்மாவுக்கு ஏற்கனவே நான் மறைமுக போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செஞ்சுட்டேன். காலைல பார்க்கலாம். ஆர்த்தி எங்கே?"

"இன்னைக்குப் பூரா அவ ரூமிலேயே அடைஞ்சி கிடக்கிறா. [illegible]லா இருக்கா. அம்மா திட்டியிருப்பாங்கன்னு நினைக்கிறேன்."

"இந்த வீட்ல ஆளுக்கு ஒரு கோக்டா" என்று சிரித்து, தன் [illegible]ரில் ஏறினான் பரத். சுசிலா ஏறினதும் ஸ்டார்ட் செய்தான்.

கார் போனதும் சுதிர் நேரம் அமைதியாக யோசனையில் இருந்தான். பிறகு போன் எடுத்தான்.

"ஹலோ ஃபாதர்! குட் ஈவினிங். சுதிர் பேசறேன். எனக்கு மனசே சரியில்லை. உங்களோட ஒரு கேம் செஸ் விளையாடினா உற்சாகம் கிடைக்கும். உங்க வீட்டுக்குப் புறப்பட்டு வரலாமா? சரி. வர்றேன்."

ஆர்த்தியிடம் தான் ஃபாதர் வீட்டிற்குச் செல்வதாகவும், வர நேரமாகும் என்றும் சொல்லிவிட்டு சுதிர் புறப்பட்ட போது மணி 8.

## 18

மணி 9

ஆர்த்தி சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

நல்ல வேளையாக அம்மா ஊரில் இல்லை. அண்ணனும் ஃபாதர் வீட்டிற்குச் சென்று விட்டான். அதனால் போனில் மிரட்டியவனைப் பணத்துடன் சந்திக்க நான் புறப்பட்டுச் செல்ல யாரிடமும் அனுமதி வாங்கத் தேவையில்லை.



பகலில் என்றால் கேள்விகளே கிடைக்காது. இரவு 9 மணி வீட்டில் இருந்து வெளியே புறப்பட்டதில்லை. அம்மாவும் அண்ணனும் இருந்தால் சரியான காரணம் சொல்லத் திணறியிருப்பேன்.

ஆர்த்தி அம்மாவின் பீரோவில் இருந்து எடுத்து வந்த பத்தாயிரம் ரூபாயை எடுத்துத் தன் கைப்பைக்குள் வைத்துக் கொண்டாள்.

தனது பிரத்யேக ஃபியட் காரின் சாவியை எடுத்துக் கொண்டாள். அறையைவிட்டுப் புறப்பட்டாள்.

கார் ஷெட் திறந்து தன் காரை வெளியில் எடுத்து, மறுபடி மூடிவிட்டுப் புறப்பட்டு சாலையில் நிதானமாகச் செலுத்தத் தொடங்கினாள்.

போனில் மிரட்டியவன் யார்?

குரல் கொஞ்சம் கரகரப்பாய் இருந்தாலும், வார்த்தைகளை உச்சரித்த தொனி நான் அடிக்கடி கேட்ட பழகின குரல் போலவே ஒரு பிரமையை தோற்றுவித்ததே...

யார் அவன்? பப்லுவுடன் பழகும் பழக்கம் எல்லை மீறிப் போய் என் அஜாக்கிரதை காரணமாக, விபரீதமாக, தோழியின் திருமணம் என்று சாக்கு சொல்லி நான் மதுரையில் அந்த டாக்டரிடம் கலைத்துக் கொண்ட விவரம் மிரட்டினவனுக்கு எப்படித் தெரியும்?

எனக்கு அம்மா அமெரிக்க மாப்பிள்ளை ஒருவரைப் பார்த்துக் கொண்டிருக்கும் செய்தி அவனுக்கு எப்படித் தெரியும்? என் வீட்டு உறுப்பினர்கள் தவிர இதை நான் பப்லுவிடம் மட்டும்தான் சொன்னேன்?

பப்லு கலங்கவில்லை. கலங்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் எங்களுக்குள் காதல் என்கிற பைத்தியக்காரத்தனம் இல்லை. நண்பர்கள். உள்ளம் தொட்டுக் கொண்ட நண்பர்கள். உடலும் தொட்டுக் கொண்ட நண்பர்கள்.

இந்த விஷயம் ஃபாதருக்குத் தெரியும். அவர் யாரிடமாவது சொல்லி விட்டாரா? மாட்டாரே. குடும்ப நண்பராயிற்றே!

யார் அவன்? யாராக இருந்தாலும் சரி. அற்பக் காசு பத்தாயிரத்தை எறிந்து விடவேண்டியதுதான். மறுத்து வீம்பு பிடித்து அமெரிக்காவில் எனக்கு அமைய இருக்கும் ஒரு உல்லாச வாழ்வைக் கெடுத்துக் கொள்ள நான் தயாராய் இல்லை.

ஆர்த்தி குளிருக்காக எல்லாக் கண்ணாடிகளும் ஏற்றி விடப்பட்டிருந்த தன் காரை நிதானமாக மலைப் பாதையில் கையாண்டாள். சாலையின் இருட்டை இரட்டை வெளிச்சங்கள் வளைந்து வளைந்து வெட்டியது.

சில்வர் ஃபால்ஸ் வந்து விட்டாள். அருவியில் தண்ணீர் கொட்டும் சத்தம் கேட்டது. கடந்து, போனில் குறிப்பிட்ட அந்த மூன்றாவது வளைவுக்கு அருகில் காரை நிறுத்தினாள்.

''காரின் வெளிச்சம் தவிர, வேறு வெளிச்சம் எதுமில்லை. லைட்டை அணைக்காமல், எஞ்சினை மட்டும் அணைத்து விட்டு இறங்கினாள்.

''ஹலோ'' என்றாள். பதில் இல்லை. காற்று 'உய்' என்று விசிலடித்தது. சத்தற்ற நிலா வெளிச்சத்தில் மரங்கள் கறுப்பு போர்த்தியிருந்தன. குளிர் காதுகளுக்குள் பாய்ந்து சிலிர்க்க வைத்தது.

''ஹலோ'' என்றாள். இன்னும் வரவில்லை போலிருக்கிறது. வரட்டும். அதுவரை காரில் அமர்ந்து டேப் கேட்கலாம் என்று தீர்மானித்து காரில் ஏறப்போன சமயம்-

அவள் கையை வலுவாகப் பற்றியது ஒரு முரட்டுக்கரம்!

## 19

ஹோட்டல் அறையில் சிந்தனையாக அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான் பரத். சுசிலா இரவு உடையில் இருந்தாள். கட்டிலில் கிடந்த உடைகளை எடுத்து ஹேங்கர்களில் போட்டு மாட்டி விட்டு வந்தாள்.

''பரத்! என்னதான் உங்க யூகம்?''

''எதைப் பத்தி?''

''சோமன் எப்படிப்பட்டவன்? ஏன் டிரைவரை லீவு போடச் சொல்லிட்டு ஜெயராணியோட இவனே காரை ஓட்டிக்கிட்டுப் போறான்?''

''காரணம் கொஞ்சம் செக்ஸியானது. ஆனால் உண்மையானது சுசி! என் யூகம் சரியா இருந்தா, மதுரை ஹோட்டல்ல இந்நேரம் ஜெயராணியும், சோமனும் கஜுராஹோ போஸ்ல இருப்பாங்க!''

''ச்சீ பரத்! என்ன இப்படி மஞ்சள் பத்திரிகை வாசகம் எல்லாம் பேசறீங்க!''

''பின்னே? புருஷன் செத்துப் போய் ரெண்டு வாரமான ஒரு விதவையோட பர்சனல் அறையோட பாத்ரூம்ல அந்தப் பொருள் கிடந்தா வேற எப்படி அர்த்தம் எடுத்துக்குவே சுசி?''

''புரியலை. நீங்க சொல்றது.''

''கண்ல கொசு விழுந்ததைக் கழுவ பாத்ரூமுக்குள்ளே போனேனா, அப்போ அங்கே பார்க்கக் கூடாத இடத்தில பார்க்கக் கூடாததைப் பார்த்தேன் சுசி!''



''புரியலை. நீங்க சொல்றது.''

''கண்ல கொசு விழுந்ததைக் கழுவ பாத்ரூமுக்குள்ளே போனேனா, அப்போ அங்கே பார்க்கக் கூடாத இடத்தில பார்க்கக் கூடாததைப் பார்த்தேன் சுசி!''

''புதிர் என்ன வேண்டிக் கிடக்கு? சொல்லுங்க!''

''அய்யே! அதை எப்படி ஒரு கன்னிப் பெண் கிட்டே சொல்றது? லேடீஸ் ஃப்ளஷ் அவுட்ல ஃப்ளஷ் ஆகாம மிதந்தது ஒரு...''

''சிகரெட் துண்டா?''

''இதைத்தான் கன்னிப் பெண்கிட்டே சொல்ல முடியுமே. வேற ஒண்ணு தற்காப்புச் சாதனம்! கு.க. சாதனம்! இன்னும் எப்படி சொல்றது?''

''மைகாட்! அப்படின்னா ஜெயராணி மோசமான கேரக்டரா? அவளுக்கும் சோமனுக்கும் கள்ளத் தொடர்பா? ரெண்டு பேரும் சேர்ந்து ஏதோ சதி செய்து விபுநாதனைக் கொன்னுட்டாங்களா? இருங்க, மிச்ச யூகமும் நானே சொல்றேன். பணத்தை இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து எங்கயோ பத்திரப்படுத்திட்டு, கதிர், ஆர்த்தியை ஏமாத்தி நம்ப வைக்க, இவங்களாலே டைரில புதிர் மாதிரி எழுதி, இவங்களாலே வாட்டர் டேங்கல போட்டுட்டு, வேணும்னே நம்மை வரவழைச்சி கண்ணாமூச்சி ஆடிக்கிட்டிருக்காங்களா?''

''யெஸ்... இதுதான் என்னோட யூகமும். கதிர் ஒரு அப்பாவி. கோயில், செஸ், புல்புல்தாரான்னு கொஞ்சமும் பணம் பத்தி அக்கறை காட்டாத அசமஞ்சம்! ஆர்த்தியோ கேக்கவே வேணாம். அவளை போதை நிலையிலேயே வச்சிருக்கிறது இவங்களுக்கு சௌகரியம்ங்கிறதாலே கண்டுக்கிறதேயில்லை. சுயநினைவோட இருந்தாதானே அவ கேள்வி கேக்க.''

''அப்படின்னா நம்மை மிரட்டறது யாரு பரத்? இவங்களே வரவழைச்சுட்டு, இவங்களே மிரட்டிப் போகச் சொல்வாங்களா?''

''அந்த ஒரு இடம்தான் எனக்குக் கிளியர் ஆகலை சுசி! ஆனா விபுநாத் சாவில மர்மம் இருக்குன்னு உள்ளுணர்வு சொல்லுது. மணி என்ன ஆச்சு?''

''பதினொண்ணு பரத்! அப்போ டைரில உள்ள புதிர் சும்மா குருட்டாம்போக்கான கிறுக்கல்களா? அந்தப் பத்தி நாம கவனம் செலுத்தவே வேணாமா?''

''அங்கேயும் இடிக்குது சுசி! ஏன்னா டைரில எழுதியிருக்கிறது எங்கப்பாவோட கையெழுத்துதான்னு கதிர் சொன்னாரே. அந்த பாலிதீன், வாட்டர்ங்கிற ரெண்டு வார்த்தைகளைக் கொண்டு நிஜமாவே டைரி கிடைச்சதே. அதை வச்சுப் பார்த்தா, அந்த புதிர்

நிஜம்! அதை சால்வ் பண்ணினா பெட்டி கிடைக்கும்னு இருந்து. ஒரே குழப்பமா இருக்குது.''

''இதை சால்வ் பண்ண முயற்சி செய்வோமே பரத்!''

''கிளிக் ஆகலையே எதுவும். அதை எடு!''

அந்த டைரி எடுத்து குறிப்பிட்ட பக்கம் புரட்டினான். டைசி இருக்குமிடம் :




''சரி, ஒவ்வொண்ணா பார்க்கலாம் முதல்ல கூட்டல் குறி.''

''டாக்டர், ஆஸ்பத்திரின்னு குறிப்பிடற சிம்பலும் இது.''

''நாலு திசைகளையும் கூடக் குறிப்பிடலாம் சசி. கிறிஸ்துவ சிலுவையாவும் சொல்லலாம். இந்தக் குழப்பிக்காம எக்ஸ்னு வச்சுக்கலாம். 'ADD 4' ன்னா என்னா? நான்கைக் கூட்டவும், எதோட? அந்த அம்புக்குறி காட்ற எக்ஸ்ஸோட. அதுக்கப்புறம் தபால்கார்டு ஏன் வரைஞ்சார்? M-17 ன்னா என்ன?''

''மைலா இருக்குமா? தட்ஸ் இட்! சசி! இப்படி பாரு. 17 மைல் தள்ளி உள்ள போஸ்ட் ஆபீஸிலேர்ந்து எட்டடி பக்கத்தில் புதைச்சிருக்கலாம்.''

''இருக்கலாம் பரத்! கொடைக்கானல்லேர்ந்து பதினெட்டு மைல் தூரத்தில ஏதாச்சும் போஸ்ட் ஆபீஸ் இல்லைன்னா போஸ்ட் பாக்ஸ் இருக்கான்னு விசாரிக்கணும்.''

''விசாரிக்கிறதென்ன? காலைல கார் எடுத்திட்டு புறப்பட்டுப் போறோம். பதினெழு மைல்ன்னா எத்தனை கிலோ மீட்டர் சசி?''

''27.2 கிலோ மீட்டர் பரத்!''

''ரைட். காலைல போய் பார்த்திடலாம். கிட்டத்தட்ட கால்வாசி கண்டுபிடிச்சாச்சுன்னு வச்சுக்கலாமா?''

''வச்சுக்கலாம்.?''

''அப்படின்னா ஒப்பந்தப்படி பாதி கிஸ் கொடு!''

''அதென்ன பாதி?''

''மேலுதடு மட்டும் அல்லது கீழுதடு மட்டும் தொட்டா அது பாதிதானே?''

''முழுக்க முழுக்க ஒட்டு மொத்தமாக வாங்கிக்கலாம். குட் நைட்'' என்று எழுந்தாள் சசி.

'இன்டெர்நெட்' டின் கையடக்க வடிவம், தகவல்களின் அரங்கம்

# சூப்பர் நியூஸ்

- ஜெட்வேக விற்பனையில்

'தெகட்டின் வார்த்தைகள்' - சுயமுன்னேற்ற கட்டுரை

தீபாவளி கொண்டாட்டமா? திண்டாட்டமா?

- ஒரு அலசல்

'Z' பாதுகாப்பு - என்றால் என்ன? இன்னும்

செய்திக் கொத்துகள், ஹைக்கூ துணுக்ஸ்...

என ஏராளமான பக்கங்கள்

வீடுதோறும் இருக்க வேண்டிய அறிவுப்பெட்டகம்

தமிழ் திரையுலகை பிரதிபலிக்கும் கண்ணாடி

# சினிமா உலகம்

தீபாவளி சிறப்பிதழ்

★ சின்னத் திரையா? பெரிய திரையா? - ஸ்டார்வார்ஸ்

★ விழியழகி மீனாவின் சிறப்பு பேட்டி

★ 'குஷி' யான டைரக்டரும் - ஜோதிமயமான நடிகையும் ஒரு குஷி மேட்டர்

இன்னும் ஏராளமான வண்ணப்பக்கங்களுடன்

# 20

காலை 7 மணிக்கெல்லாம் பரத், சுசிலா புறப்படத் தயாரானார்கள்.

பரத், ஷூ அணிந்து கழுத்தில் மஃப்ளர் சுற்றிக் கொண்ட போது, போன்!

''ஹலோ, குட்மார்னிங் இன்ஸ்பெக்டர். சொல்லுங்க.''

''நேத்து ஜெயராணி சோமனைக் கண்காணிக்கச் சொன்னீங்க இல்லையா? ஒரு ஏ.எஸ்.ஐ.யை அனுப்பி வச்சிருந்தேன். மதுரையிலேர்ந்து கொஞ்சம் முன்னாடி போன் செஞ்சார். ஒரு அதிர்ச்சியான தகவல் சொன்னார்.''

''சொல்லுங்க சார்.''

''அதிர்ச்சியானது மட்டுமல்ல, அசிங்கமானதும்கூட. ஹோட்டல்ல ரெண்டு ரூம் புக் செய்யப்பட்டிருக்குதாம். ஆனால் ஒரு ரூமை உபயோகிக்கவே இல்லையாம். புரியுதா? போய் பத்து நிமிஷத்திலேயே கதவு சாத்தி லைட் அணைஞ்சிடுச்சாம். பெரிய இடத்து விஷயம்னா இப்படித்தான் போலிருக்கு. அவரைத் தொடர்ந்து கண்காணிக்கச் சொல்லணுமா?''

''வேணாம் சார்.'' திரும்பி ''இல்லை! தொடர்ந்து கண்காணிக்கச் சொல்லுங்க. இங்கே அவங்க வர்ற வரைக்கும். தேங்க்ஸ்.''

சுசிலாவிடம் சொல்ல, ''போலீசுக்கு முன்னாடியேதான் நாம இதைக் கண்டுபிடிச்சுட்டோமே பரத்!'' என்றாள்.

''இருந்தாலும் அது சோமன்தான்னு உறுதியாயிடுச்சே இப்போ. சரி, புறப்படு.''

காரில் புறப்பட்டார்கள். மலையிறங்கத் தொடங்கினார்கள்.

கொடைக்கானல் எல்லையில் வருக, வருக போர்டு இடத்தில் காரில் கிலோ மீட்டர் பார்த்துக் கொண்டான். ''இங்கேயிருந்து சரியா 27.2 கிலோ மீட்டர் போய்ப் பார்க்கலாம் சுசி!'' என்றான். ''சும்மா சில்மிஷம் எதுவும் செய்யாம தோள்ல கை போட்டுக்கறேன் சுசி!''

வந்தார்கள். ஒரு மலைப்பாதையில் ஒரு பகுதி! ஊர் இல்லை. நடுப்பகுதி! ஒரு வளைவுப் பகுதி! போஸ்ட் ஆபீசாவது, போஸ்ட் பாக்ஸாவது!

''சுசி! தப்பு செய்றோம்! அந்த கோட் வார்த்தைகள் வேற ஏதோ சொல்லுது. எனக்கு ஒரு ஐடியா. கடைசியா விபுநாத் பிரயாணம் செஞ்சிட்டு வந்து நிறுத்தின காண்டெஸா காரை



அதுக்குப் பிறகு யாருமே தொடலை. அது அப்படியே ஷெட்ல நிக்குது. இது ஜெயராணி சொன்ன தகவல். அந்தக் காரை நாம முதல்லயே பார்த்திருக்கணும். இப்பதான் ஸ்ட்ரைக் ஆகுது. வா. பார்த்துடலாம்.''

இருவரும் காரைத் திருப்பி மீண்டும் கொடைக்கானலுக்கு வந்தார்கள்.

விபுநாத்தின் பங்களாவிற்குள் இருவரும் வந்த போது கதிர் போனில் சத்தமாக, பதற்றமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

''என்ன, அங்கேயும் வரலையா? சரி, சரி'' என்று வைத்தான். இவர்களைப் பார்த்து, ''வாங்க'' என்றான், கலவரமான முகத்துடன்.

''என்ன கதிர்? என்ன பிரச்னை?''

''நேத்து ராத்திரி நீங்க போனதும் நான் ஃபாதர் ரொஸாரியோ வீட்டுக்கு செஸ் விளையாடப் போனேன். நான் திரும்பி வந்தப்போ ஆர்த்தி அவ காரை எடுத்துகிட்டு ஒன்பதரை மணிக்கு எங்கயோ புறப்பட்டுப் போனதா வேலைக்காரங்க சொன்னாங்க. எங்கேனு சொல்லலையாம். அவதான் திமிர் ரகமாச்சே, வரப்ப வருவான்னு போய்ப் படுத்துட்டேன். காலைல எழுந்து பார்த்தா இன்னும் வரலை. பப்லுவுக்கு போன் செஞ்சிட்டேன். பார்த்து ரெண்டு நாளாச்சுங்கறான். அவ ஃப்ரெண்ட்ஸ் எல்லாரையும் கேட்டுட்டேன். எங்கேயும் போகலை அவ. இது மாதிரி ராத்திரி பூரா வெளில தங்கினதில்லை அவ. கொஞ்சம் சுதந்திர டைப்தான். ஆனா இப்படி சொல்லாமப் போக மாட்டா.''

''வெளியூர் எதாச்சும் போறதாச் சொல்லி, நீங்கதான் மறந்துட்டீங்களோன்னு யோசிக்கறேன்.''

''இல்லை சார்! அவ்வளவு தூரமா மறப்பேன்? அப்படி எதுவும் அவ சொல்லலை சார்.''

''இன்னும் ஒரு மணி நேரம் பார்த்துட்டு போலீஸ்ல சொல்லலாம். அந்த கோட் வார்த்தைகள் சம்மந்தமா உங்கப்பா கடைசியா உபயோகப்படுத்தின காரைப் பார்க்க விரும்பறேன்.''

''இருங்க. டிரைவரை விட்டு ஷெட்டுக்குள்ளேர்ந்து வெளில எடுத்து நிறுத்த சொல்றேன்.''

கொஞ்ச நேரத்தில் டிரைவர் தண்டபாணி பயபக்தியுடன் அந்த வெள்ளை காண்டெஸா காரை போர்ட்டிகோவில் கொண்டு வந்து நிறுத்தினான். இறங்கி நின்றான்.

பரத் அந்தக் காருக்குள் அமர்ந்து டேஷ்போர்டில், சீட்டு மேல, சீட்டில், சீட்டில், சீட்களுக்கு அடியில் என்று ஆராய்ந்தான். ரியர் வ்யூ மிரரில் புலி பொம்மை தொங்கியது. அசைந்தது. சாவிக் கொத்துடன் கிளிஞ்சல் இருந்தது. ஸ்டியரிங்கிற்கு வெல்வெட் உறை இருந்தது. கண்ணாடிகளுக்கு கறுப்பு கூலிங் காகிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

ஓடியுள்ள கிலோ மீட்டர்கள் பார்த்தான். 7437.

''புது வண்டியா இது? கொஞ்சம்தான் ஓடியிருக்கு போலிருக்கு?''

''ரெண்டு மாசம்தான் சார் ஆச்சு. அதிலேயும் லாங் டிஸ்டென்ஸ் அந்த மைசூர் ட்ரிப்தான் முதல் ட்ரிப். அய்யாகூட மைசூர்ல டாங்க் ஃபுல் பண்ணி கிலோ மீட்டர் குறிக்கச் சொன்னாரு - எவ்வளவு கன்சம்ப்ஷன் கொடுக்குதுன்னு பார்க்க'' என்றான் டிரைவர்.

பரத் பிரகாசமாகி, ''அப்படின்னா மைசூர் ட்ரிப் முடிச்சதும் நீ வண்டியை இங்கே நிறுத்தினதும் க்ளோசிங் மீட்டர் குறிச்சியா?'' என்றான்.

''ஆமாம் சார். 7429ல இருந்திச்சு சார்.''

''கதிர்! அதுக்கப்புறம் தனியா கார் எடுத்துட்டுப் போய்த் திரும்பினார். அதுக்கப்புறம் வண்டியை யாரும் தொடலை அப்படித்தானே?''

''ஆமாம் சார்.''

''வாவ்! ஸோ அதுக்கப்புறம் வண்டி எட்டு கிலோ மீட்டர் ஓடியிருக்கு. போக 4 கிலோ மீட்டர்! வர 4 கிலோ மீட்டர்! கதிர்! இங்கேர்ந்து நாலு கிலோ மீட்டர் தூரத்திலே ஓர் இடத்திலேதான் உங்கப்பா பெட்டியை பத்திரப்படுத்தியிருக்கார். 4 கிலோ மீட்டர் தூரத்தில உங்க அப்பா ஃப்ரெண்டு வீடு ஏதாவது இருக்கா?''

கதிர் ஜோக் சொன்னது போலச் சிரித்தான்.

''பரத்! இங்கேர்ந்து நாலு கிலோ மீட்டர் தூரத்திலேதான் எங்க ஜூவல் பேக்டரி இருக்கு. பக்கத்திலே பேரிக்கா தோட்டம், பக்கத்திலே ப்ளம்ஸ் தோட்டம் எல்லாமே பக்கம், பக்கம்! எல்லாத்துக்குமே 4 கிலோ மீட்டர் தூரம் தான்.''

''அப்போ உங்க ஸ்தாபனங்கள்லயே எங்கேயோதான் பத்திரப்படுத்திருக்கார்.''

''ரைட், எங்கே? நாற்பது ஏக்கர் பேரிக்கா தோட்டத்தையும் தோண்டிப் பார்க்க முடியுமா?''



''முடியாது. அதுக்குத்தான் குறிப்பு எழுதியிருக்கார் உங்கப்பா கதிர்! உங்க தோட்டங்கள் எல்லாத்துக்கும் போறோம். ஃபாக்டரிக்குப் போறோம். அங்கே சுத்திப் பார்க்கிறப்போ ஏதாச்சும் ஸ்ட்ரைக் ஆகலாம். வர்றீங்களா?''

''வர்றேன். ஆனா ஆர்த்தி வந்துட்டா நிம்மதியா வருவேன்.''

''பயப்படற மாதிரி எதுவும் இருக்காது. எதுக்கும் போலீஸ்ல சொல்லிடலாம்.''

பரத் அவள் எடுத்துச் சென்ற கார் எண் கேட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் டயல் செய்தான். உதவி இன்ஸ்பெக்டர் பேசினார்.

''பத்மநாபன் இல்லை சார். சில்வர் ஃபால்ஸ் பக்கத்திலே பள்ளத்தாக்கிலே ஒரு கார் விழுந்து நொறுங்கி, ஒரு பெண் செத்துக் கிடக்கிறதா விறகு பொறுக்கப் போன பெண் ஒருத்தி பார்த்துட்டு வந்து சொல்லி... இப்பதான் புறப்பட்டுப் போனார்.''

''அந்த கார் நம்பர் என்னன்னு தெரியுமா?'' என்றான் பரத் பதற்றமாக.

''இருங்க. சொல்றேன்.''

சொல்லப்பட்டதும் ரிசீவரை நழுவவிட இருந்தான். வைத்தான்.

''கதிர்! ஐ ஹாவ் எ பேட் நியூஸ் ஃபார் யூ. வாங்க. சில்வர் ஃபால்ஸ் வரைக்கும் போய்ட்டு வரலாம்'' என்றான்.

## 21

'ஆ' தனியாக, 'ர்' தனியாக, 'த்' தனியாக, 'தி' தனியாகச் சிதறிக் கிடந்த ஆர்த்தியைப் பொறுக்கி அள்ளிக் கட்டி, போஸ்ட் மார்ட்டத்திற்கு உட்படுத்தி....

காரின் உதிரி பாகங்களை தேட, குழு அமைத்து, மதுரைக்கு தகவல் சொல்லி வரவழைத்து—

காரியங்கள் முறையாக நடந்தேறின. விசாரணைகள் சூடு பறந்தன.

போலீஸ் ஸ்டேஷனில் பத்மநாபன் தலையை உலுக்கிக் கொண்டு, ''கோரம்! படு கோரமான விபத்து!'' என்றார்.

''விபத்துன்னு முடிவு செய்துட்டீங்களா?'' என்றான் பரத்.

''வேறென்ன? ஆர்த்தி போதைமருந்து சாப்பிட்டுட்டு மிதப்புல காரை ஓட்டிக்கிட்டு வந்து பாலத்தை தவறி காரோட பள்ளத் தாக்கில் உருண்டுட்டா. அப்படித்தானே கேஸை முடிக்க வேண்டியிருக்குது? வேற சதி வேலை எதுக்கும் தடயம் இல்லையே? எதை வச்சு வேற விதமா சந்தேகப்படறது?''

''இல்லை சார். ராத்திரி ஒன்பது மணிக்கு மேல ஆர்த்தி தன் அண்ணன்கிட்டேயும், யார்கிட்டேயும் சொல்லாம எங்கே புறப்பட்டா?''

''விசாரிச்சாச்சு வேண்டிய அளவுக்கு. அது ரூட் சரியில்லாத பொண்ணு. தினம் ஒரு ஆம்பளையோட சுத்தறவ. கஞ்சா அடிக்கிட்டு எந்த நேரம் எங்கே போவாங்கிறதுக்கு என்ன விளக்கம் சொல்ல முடியும்? மழையில நனைஞ்சிக்கிட்டே குதிரை ஓட்டிக்கிட்டுப் போவாளாம். அன்பிரடிக்டபிள் பொண்ணு. திடீர்னு நடுராத்திரில கில்வா ஃபால்ஸ்ல குளிச்சா என்னன்னுகூட புறப்பட்டு வந்திருக்கலாம். ஒரு நார்மலான பொண்ணுன்னா நாமும் நார்மலா சிந்திக்கலாம். இது அப்நார்மல் கேஸ். நாமும் அப்படித்தான் சிந்திக்கணும். அதனால அனாவசியமா நீங்க கேஸைக் குழப்பாதீங்க. எங்களைப் பொறுத்தவரைக்கும் இதை விபத்தாத்தான் அனுமானிக்க முடியுது.''

ஹோட்டல் அறையில் சுசீலா கேட்டாள்.

''பரத்! நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''சிக்கல் மேல சிக்கல்! சோமனும் கண்ணாபின்னான்னு சிக்கிப் போச்சு. இன்ஸ்பெக்டர் அவர் கோணத்தில் நியாயமாத்தான் சொல்றார். ஆனா ஏதோ சதி தெரியுது எனக்கு இனம் பிரிக்க முடியலை.''

''சோமன் ஒரு வேளை...''

''அப்போ சோமனும் சரி, ஜெயராணியும் சரி, மதுரையில வக்கீல் வீட்ல பேசிக்கிட்டிருந்திருக்காங்க. அவங்களை கண்காணிச்ச அதிகாரியே ஸ்ட்ராங்கா சொல்றாரே.''

''சோமன்னா சோமனே நேரடியா ஈடுபடணும்னு இல்லையே, யாரையாச்சும் ஆளை வச்சு.''

''சான்சஸ் ஆர் தேர். ஆனா எப்படி? ஏன்?''

''விபுநாத்தைத் தீர்த்தாச்சு எப்படியோ. ஆர்த்தியையும் தீர்த்தாச்சு. அடுத்து சதீஷையும் தீர்த்துட்டு ஜெயராணியும், சோமனும் எல்லா சொத்துக்களையும் ஏகபோகமா அனுபவிக்கறதா ஒரு மாஸ்டர் பிளானை நினைச்சுப் பாருங்களேன்.''




குதூகலமான விற்பனையில் - தீபாவளி சிறப்பிதழ்
க்ரைம் சக்ரவர்த்தி - ராஜேஷ்குமாரின்
கைவண்ணத்தில்

# நாவல் லீடர்

இரண்டு மெகா நாவல்கள்
ஸ்பெஷல் ''பாம்'' நாவல்கள்

★ அம்பியின் போனஸ் போட்டிகள் பரிசு ரூ.3000
★ அம்பியும் - பூதமும் - ஸ்பெஷல் நகைச்சுவை பகுதி

விரைந்து வாருங்கள் - பிரதிகள் தீரும் முன்

தீபாவளி சிறப்பிதழ்

# உங்கள் நாவலில்

எழுத்துச் சித்தர் பாலகுமாரனின்

## ''பூசு மஞ்சள்''

மெகா நாவல்

மேலும்

★ பாலகுமாரன் கேள்வி - பதில்
★ பாலகுமாரன் கடிதம்

தவறவிடாதீர்கள்

விருந்து படைக்க வரும் அரிய நாவல்

''சோ ஒரு தாய் தன் மகளைக் கொல்லத் திட்டம் போடுவா
என்னவ... வெய்ட்!'' பரத் சட்டென்று போன் எடுத்து கதி
தொடர்பு கொண்டான்.

''கதிர்! வந்து... ரொம்ப அப்செட் ஆகியிருக்கிற உங்களை
சந்தர்ப்பத்திலே தொந்தரவு செய்றது தப்பு இருந்தாலும் ஒரே
கேள்வி. கொஞ்சம் அபத்தமான கேள்வி. மிஸஸ் ஜெயராணி
அம்மாதானா?''

''என்ன கேக்கறீங்க நீங்க?''

''உங்க சொந்த அம்மாதானா, இல்லை...''

''சொந்த அம்மான்னா... என்னைப் பெத்தவங்க இல்ல
இவங்க எங்கப்பாவுக்கு ரெண்டாவது சம்சாரம். ஆர்த்தி இவ
களுக்குப் பிறந்தவள். நான் எப்பவும் அம்மானுதான் கூப்
வேன். அவங்களும் சொந்த அம்மாவுக்கு மேலே பாசத்
பொழிவாங்க.''

''கதிர்! நீங்க ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். தங்க
கடைசி சமாச்சார வேலைகளை கவனிங்க. நாளைக்கு சந்
திறேன்'' என்று வைத்துவிட்டு, ''சகி! ஜெயராணி கதிரோட அம்
இல்லை சித்தி. ஆர்த்திக்கு அம்மா. குழப்பம் நீங்கலை. ஆனா
யூகம் சரியா இருக்கலாம். ஆனா, எப்படி நிரூபிக்கிறது?''

''அந்த சோமனை போலீஸ் லாக்கப்பில் தள்ளி உதைச்சா...''

''வெளிவராது, கல்லுளிமங்கன்! டிரைவர்கிட்டே பண
கொடுத்து லீவு எடுக்கச் சொல்லி ஏன்டா சொன்னேனு
கேட்டதுக்கு என்ன சொன்னான்? வழில எஸ்டேட் சம்மந்தப்பட்ட
சில முக்கியமான விஷயங்கள் பேச வேண்டியிருந்திச்சுன்
சொன்னானா இல்லையா? ஒரு சின்ன ஆதாரம் கூட இல்லா
எப்படி அவனை விசாரிப்பே?''

''பரத்! ஜெயராணிக்கும், சோமனுக்கும் தகாத உற
இருக்கிறதை போலீசை நிரூபிச்சிடுச்சே.''

''அதை வச்சு அவங்க கொலைகள் செஞ்சாங்கன்னு சொல்ல
முடியாதே. பாரேன் ரெண்டு சாவுகளும் இயற்கையான சாவுகளா
காட்டப்பட்டிருக்கே. ஒண்ணு நெஞ்சுவலி, இன்னொண்ணு விபத்து
யோசிச்சா நமக்கே இதெல்லாம் சதி இல்லையோன்னு தோண
வைக்கிற அளவுக்கு பர்பெக்ட்டா நடந்திருக்குதே.''

''அப்ப என்ன சொல்றீங்க?''



''ஒரு வலுவான ஆதாரம் இல்லாம எதுவும் செய்ய முடியாது
சகி! போலீஸ் ரெண்டு சாவுகளையும் சதி இருக்கிறதா நம்ப, ஏன்
சந்தேகப்படக்கூடத் தயாரா இல்லை.''

''நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''இப்போதைக்கு ஒரு சிகரெட் பற்ற வைக்கப் போறேன்.
அடுத்த ரூவ் எனக்கே புரியலை'' என்றான் பெருமூச்சுடன் பரத்.

# 22

கதவு தட்டலில் உறக்கம் கலைந்தான் பரத். முதலில் கழற்றி
வைத்திருந்த வாட்சைப் பார்த்தான். 12-10. தனிக் கட்டிலில்
தடிமனான கம்பளிக்குள் குருவிக் குஞ்சு போல உறங்கிக்
கொண்டிருந்த சகிலாவைப் பார்த்தான்.

கதவு தட்டல் பொறுமையில்லாமல் தொடரவே, சற்று
அவசரமாக எழுந்து வந்து கதவைத் திறந்ததும் நெஞ்சில் கை
வைத்து உள்ளே தள்ளப்பட்டான். தடுமாறி மல்லாக்க விழுந்தவன்
மார்பில் வந்தவனின் ஷூ அணிந்த கால் அமர்ந்தது. முகமூடி
அணிந்த அவன் கிளவுஸ் கையில் துப்பாக்கி.

''ஊரைவிட்டுப் போகச் சொல்லி ரெண்டு தடவை எச்சரிச்
சேனா இல்லையா? மீறினீங்க விளைவா... முதல்ல உன் கண்
முன்னால உன் சகிலாவை ஷூட் பண்ணப் போறேன்.''

''நோ! நோ!'' என்றான் பரத் பதறலாக.

சகிலாவைக் குறி பார்த்த துப்பாக்கி சூடாக ஈயக் குண்டை
உமிழ...

...சடக் என்று கட்டிலில் எழுந்து அமர்ந்து உறக்கம்
கலைந்தான் பரத். கழற்றி வைத்திருந்த வாட்சைப் பார்த்தான்.
12-10 அருகில் தனிக்கட்டிலில் தடிமனான கம்பளிக்குள் குருவிக்
குஞ்சு போல உறங்கிக் கொண்டிருந்த சகிலாவைப் பார்த்தான்.

தூக்கம் சுத்தமாகக் கலைந்துவிட சிகரெட் எடுத்துக் கொண்டு
அறையின் பால்கனிக்கான கதவைத் திறந்து கொண்டு வந்து
நின்றான். மங்கல் நிலவொளியில் ஏரியின் தண்ணீர் வெள்ளி
ஓடையாய்த் தகதகத்தது.

சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

விநோத் வீட்டு விவகாரங்கள் மனதில் வரிசையாக வலம் வந்தன. உறங்கும் முன்பாக சுசிலாவிடம் விவாதித்த கேள்விகள் மீண்டும் மீண்டும் வட்டமிட்டன. எத்தனை கேள்விகள் ...

1. இரண்டு மரணங்களும் இயற்கையானவையா அல்லது செயற்கையா?
2. செயற்கை என்றால் யார்? எதற்காக?
3. மிரட்டல் கடிதங்கள் சேர்ப்பவன் யார்? எதற்காக?
4. பணப்பெட்டிக்கான இரகசிய வார்த்தைகளுக்கு பதில் என்ன?

பரத் உடனே அந்த இரகசிய வார்த்தைகள் எழுதின டைரியை எடுத்து வந்து பார்த்தான். பலவிதமான அர்த்தங்கள் கொடுத்து யோசித்தான். ஒரு சரியான அர்த்தமுள்ள பதில் கிடைக்கவில்லை. அதை அந்தரத்தில் விட்டு விட்டு மரணப் பிரச்சனையை யோசித்தான்.

விநோத்தின் குடும்ப விஷயங்கள் அனைத்தும் தெரிந்த ஒரு நபர். ஏதோ ஒரு காரணத்திற்காக மிக சாமர்த்தியமாக இவ்வெல்லாம் நடத்துகிறான் என்றால் முதல் வரிசையில் வருபவன் சோமன். ஜெயராணியின் உதவியோடு செயலாக்க வாய்ப்பு அதிகம்.

அப்புறம்... பப்லு... சரியான அசமந்தம்! ஆனாலும் ... விசாரிக்க வேண்டும். பிறகு... அந்த ஃபாதர் ரொஸாரியோ அ... எப்படிப்பட்டவர்? காலையில் சென்று பார்க்க வேண்டும்.

பரத் அந்தக் குறிப்பு நோட்டில் பார்த்துக் கொண்டே ...யிருந்தவனுக்கு திடீர் என்று அந்த இரகசிய வார்த்தைகளின் ஒரு பொருள் புரிவது போல இருந்தது.

பேனா எடுத்து வந்து எழுதினான்

+ என்ற கூட்டல் குறியை ஆங்கிலத்தில் எழுதினால்? PLUS.

பிறகு அம்புக்குறி!

பிறகு ADD 4.

பிறகு தபால். அதை ஆங்கிலத்தில் எழுதினால்? LETTER.

பிறகு M!

மைகாட்! இப்படித் தானா? 'M' என்பதை 'PLUS' என்பதன் 4வது எழுத்தாகச் சேர்க்கவும்!

சேர்த்தால்? PLUS+M (நான்காவதாக) = PLUMS.

ப்ளம்ஸ் என்றால்? பிறகு 17 என்றால்?



விநோத்தின் வீட்டிலிருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் 'ப்ளம்ஸ்' தோட்டம் இருப்பதாக சுதிர் சொன்னான். கார் கிலோ மீட்டர் எண்ணைத்து விநோத் அன்று 4 கிலோ மீட்டர் போய் திரும்பியது உறுதியாகிறது.

அவர் ப்ளம்ஸ் தோட்டத்திற்குச் சென்றிருக்கலாம். 'PLUMS 17' என்றால் '17' என்று எண் போட்ட ப்ளம்ஸ் மரத்தைக் குறிக்கிறதாக இருக்கலாமோ?

என் யூகம் சரியென்றால் ப்ளம்ஸ் தோட்டத்தில் 17 ஆம் நம்பர் மரம் அடியில் அந்தப் பணப்பெட்டி புதைக்கப்பட்டிருக்கலாம். அதற்கான சாத்தியக்கூறு தெரிகிறது. இரகசிய வார்த்தைகளுக்கு இதுதான் பதிலாக இருக்க முடியும்!

பரத் சில தீர்மானங்களுடன் ஒரு தெளிவுக்கு வந்து படுத்தான்.

மறுநாள் காலை 7 மணி.

பரத், சுசிலா காரில் புறப்பட்டார்கள். சுசிலா பனியனில் 'NEARING CLIMAX' என்று எழுதப்பட்டிருக்க, "பரத்! எங்கேப் போறோம்னு சொல்லலை நீங்க?"

"சுசி? அந்த புதிருக்கு கிட்டத்தட்ட பதில் கண்டுபிடிச்சிட்டேன். அது மட்டுமில்லை. இந்த மரணங்களுக்குப் பின்னணியில் குதர்க்கமா நான் ஒரு நபரை யூகம் செய்கிறேன். அது சம்மந்தமா... திருத்து."

திருத்தப்பட்ட இடம் டாக்டர் விஸ்வேஸ்வரின் வீடு. உள்ளே இவர்கள் வர,

"எங்கே வந்தீங்க மறுபடி? என் மேல அபாண்டமா பழி சுமத்தவா?" என்றார் டாக்டர் கடுகடுப்பாய்.

"கோவிச்சுக்காதீங்க டாக்டர்! அதெல்லாம் இல்லை. ஒரு நபருக்கு மயக்கம் தரலாம். மரணமும் தரலாம். செயற்கையா நெஞ்சடைப்பு தர வாய்ப்பு இருக்கா?"

"வீக்கான ஹார்ட்டா இருந்தா, அதிர்ச்சியான விஷயங்களைச் சொன்னாலே நெஞ்சுவலி வந்துவிடும்."

"சரி. ஆரோக்கியமான ஆசாமின்னா?"

"ஒரே ஒரு வழி உண்டு சார்."

"என்ன அது? இன்ஜெக்ட் செய்றப்போ காற்றுக் குமிழ்களோட மருந்து ஏத்தறோம்னு வைங்க. சில சமயம் அந்த ஏர் பபிள் எமனாய்டும். ரத்தக் குழாய்ல அது நகர்ந்து, நகர்ந்து நெஞ்சுக்கு வர்றப்போ அடைப்பு ஏற்படுத்திடுச்சின்னு வைங்க, உடனே

மாரடைப்பு வரும். அந்த ஏர் பபிள், வழியிலேயே
ஆகிட்டா பிரச்சினையில்லை. ஆகலைன்னாதான் டேஞ்சர்.
னாட்டை அடைய சிலருக்கு எடுத்துக்கற நேரம் மாறுபடலாம்.

''படிச்சிருக்கேன். 'இன்னும் தெளிவு படுத்திக்கிட்டேன்.
தேங்க்ஸ் டாக்டர்!''

மீண்டும் காரில் பயணம்.

''பரத்! என்ன கேக்கறீங்க? எதுக்கு? ஒண்ணும் புரியலை.''

''எனக்கு லேசாப் புரிய ஆரம்பிக்குது சுசி! விபுநாத் ரூம்
மேஜை டிராயர்ல பெத்தடின் மருந்தும், டிஸ்போசபிள் சிரிஞ்
களும் பார்த்தோம். நினைவிருக்கா?''

''ஆமாம். இந்த வீட்ல சகல போதை சமாச்சாரங்களு
ஆஜர்ன்னு நான்கூட கமெண்ட் அடிச்சேன். ஆமா, எங்கே கா
போய் நிறுத்தறீங்க?''

''வா. ஃபாதர் ரொஸாரியோவைப் பார்க்கணும்'' இறங்
னார்கள்.

விசாரித்து அவர் வீட்டிற்கு வர, பணியாள்தான் இருந்தா

''ஃபாதர். வத்தலகுண்டு போயிருக்கார் மத்தியானம் தா
வருவார்.''

''ஃபாதர் இந்த சர்ச்சுக்கு எப்போ வந்தார்?''

''ஏழெட்டு வருஷம் ஆச்சு.''

''முந்தா நாள் நீ வேலைக்கு வந்திருந்தியா?''

''நான் இந்த வீட்டோடவேதான் இருக்கேன்.''

''விபுநாத் பையன் சதிர் சார் ராத்திரி செஸ் விளையா
வந்தாரில்லையா?''

''ஆமாம்.''

''எத்தனை மணிக்கு ஃபாதர் அன்னைக்குப் படுக்க
போனார்?''

''சதிர் சார் எட்டு மணிக்கு வந்தார். ஒன்பதரைக்கு அவ
புறப்பட்டுப் போனதும், ஃபாதர் சர்ச் போனார். அங்கே ஒரு ரூ
இருக்கு அமைதியா இருக்கும். அங்கே உக்கார்ந்து எழுதிட்
இருப்பார். ஃபாதர் ஒரு புத்தகம் எழுதறார். அப்புறம் ஒ
மணிக்குத்தான் வந்து படுத்தார்ன்னு நினைக்கிறேன்.''

''சரி... சொன்ன தகவல்களுக்கு ரொம்ப தேங்க்ஸ். ஒரு போன்
பண்ணிக்கிறேன்.''

பரத் டயல் சுழற்றி. ''ஹலோ சதிர்! குட்மார்னிங். அந்த டய
புதிருக்குக் கிட்டத்தட்ட பதில் கண்டுபிடிச்சிட்டேன்னு நினை



ராக்கெட் வேக விற்பனையில்

# சூப்பர் நாவல்

- தீபாவளி ஸ்பெஷல்

சுபா வழங்கும் தீபாவளி போனஸ்

'மரண மயக்கம்'

சரவெடியாய் இதயம் அதிரவைக்கும் நாவல்

★ தீபாவளி - ஜாக்பாட் போட்டிகள் பரிசு ரூ. 3000

★ தீபாவளி - சிறப்பு பகுதிகள்

தீர்ந்து போகும் முன் - தேடிவாங்குங்கள்

பரபரப்பான விற்பனையில் முன்னணி மருத்துவ இதழ்

# ஹெல்த் டுடே

★ மூட்டுவலிக்கு - முற்றும் சொல்லும் வழிமுறைகள்

★ தெர்மாசாய்ஸ் - கர்ப்பப்பை நோய்களுக்கு அறுவையில்லா சிகிச்சை

★ தீக்குள் விரலைவைத்தால்... - லெஸ்பியன் அலசல்

★ வயிறு ஒரு மாயாஜாலப் பெட்டி

வீட்டுக்குள் உலா வரும் மருத்துவ உலகம்

கிறேன். நேர்ல வாறேன். உங்க ப்ளம்ஸ் தோட்டத்தில மரங்கள்ல நம்பர் போட்டு இருப்பீங்களா?''

''ஆமாம். வரிசையா நம்பர்ஸ் பெயிண்ட்ல போட்டு வச்சிருப்போம். ஏன்?''

''நேர்ல சொல்றேன்'' போனை வைத்தான்.

காரில் கேட்டாள் சுசிலா. ''போதனை சம்மந்தப்படுத்தறீங்களா பரத்?'' பரத் சிரித்தான். ''வெயிட்! அடுத்த அத்தியாயம் படி!''

## 23

ஒலித்த போனை கதிர் எடுத்தான்.

''ஹலோ, கதிர் பேசறேன்.''

''வணக்கம் சார். நான் இன்ஸ்பெக்டர் பத்மநாபன் பேசறேன். உங்க தங்கை விபத்துல இறந்ததா அனுமானிச்சோமில்லையா? இப்போ அதிலே ஒரு சதி இருக்கலாமோன்னு நினைக்கிறோம். நினைக்கத் தோதா ஒரு தடயம் கிடைச்சிருக்குது. இது சம்மந்தமா கொஞ்சம் விசாரிச்சதிலே சில திடுக்கிட்ற தகவல்கள் கிடைச்சிருக்கு. உங்களைப் பார்த்துப் பேசணும் நான்.''

''வாங்க இன்ஸ்பெக்டர்!''

''வீட்ல சந்திக்க வேணாம். கொஞ்சம் பாசனைப் பேசணும். கோக்கர்ஸ் வாக் வாறீங்களா? நடந்துகிட்டேப் பேசலாம்.''

''சரி சார்.''

கதிர் குழப்பமாக போனை வைத்தான். ஷூ அணிந்து, கார் எடுத்துக் கொண்டு புறப்படும் முன்பாக பணியாளிடம், ''அம்மா ஜுரம் அடிக்குதுன்னு மாத்திரை கேட்டாங்க வாங்கிக் கொடுத்துடு'' என்றான்.

கோக்கர்ஸ் வாக் கேட் முனையில் பைக்கை நிறுத்தி வைத்து விட்டுக் காத்திருந்த இன்ஸ்பெக்டருக்கு 'ஹலோ' சொல்லி அணுகினான். கோக்கர்ஸ் வாக் பாதையில் சற்று நேரம் மௌனமாக நடந்தபின்-

''என்ன சார்! தங்கச்சி விபத்து பத்திப் பேசணும்னு சொல்லிட்டு...''

''மறைமுகமா சொன்னா புரிஞ்சுப்பீங்களோன்னு பார்த்தேன். விபத்துன்னுதான் நாங்க தீர்மானிச்சோம். நடுவில கிளம்பியுள்ள



சந்தேகங்களை நான் மறந்துடணும்னா அம்பதாயிரம் நீங்க தாராளமாக கொடுக்கலாம்.''

''என்ன சொல்றீங்கன்னு புரியவே இல்லை சார்.''

''கதிர்! குழந்தைத்தனமா பேசாதீங்க. ஆதாரம் இல்லாம பேசமாட்டேன். சில்வர் ஃபால்ஸ் பக்கத்தில கார் பள்ளத்தாக்கில விழுந்த இடத்துக்குப் பக்கத்திலே உங்க கர்ச்சீப் கிடைச்சது. இப்படியா கதிர்னு ஒரு பேரையும் எம்ப்ராய்டரி செஞ்சி வச்சிருப்பாங்க? இது உங்களது இல்லைன்னு மறுக்கப் போறீங்களா?''

இன்ஸ்பெக்டர் பாண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்துக் காட்டின வெள்ளைநிற உயர் ரக கைக்குட்டையைப் பார்த்தும் ஒரு விநாடி அதிர்ந்தான் கதிர்.

''நோ! இது அங்கே கிடந்ததா? அதனால? என் கர்ச்சீப்பை அவ எடுத்துட்டுப் போயிருக்கலாம்.''

''கதிர்! சந்தேகம் எழுந்ததும் மத்த காரியம் எல்லாம் செஞ்சாச்சு. பொறுக்கின காரோட உதிரி பாகங்களை புகைப் பகுதியில அச்சா உங்க கைரேகைகள் கிடைச்சாச்சு. ஃபாதர் சொன்னபோலோட ஒன்பதரை மணி வரைக்கும் செஸ் விளையாடிட்டு புறப்பட்டு வீட்டுக்கு வராம சில்வர் ஃபால்ஸ் வந்திருக்கீங்க. ராவெழுச்ச உங்க தங்கையை நீங்களே சாமர்த்தியமா காரோட தள்ளிவிட்டுட்டு திரும்பிப் போயிட்டீங்க. பார்த்தீங்களா, இப்ப ஏன் அப்படி செஞ்சீங்கன்னு நான் கேக்கலை. உங்கப்பாவை நீங்கதான் கொன்னீங்கன்னு நான் கேக்கலை. நான் கேக்கிறதெல்லாம் கண்டுபிடிச்சதையெல்லாம் மனசுக்குள்ளே புதைச்சிட்டு, ஆர்த்தி மரணம் விபத்துதான்னு ஃபைலை மூடறதுக்கு கூலி! குறைவான கூலி! இதைக் கேக்காட்டா உங்களைக் கைது செஞ்சு! தண்டனை வாங்கிக் கொடுத்தா எனக்குத்தான் இந்த தொகை நஷ்டம்! அதனால...''

அமைதியாக, நடந்த கதிர் திரும்பி அவரைப் பார்த்தான்.

''அம்பதாயிரம் கொடுத்தா கேள்விகள் கேக்க மாட்டீங்க.''

''யெஸ்!''

''விபத்துன்னு கேஸை முடிச்சிடுவீங்க!''

''யெஸ்!''

''எப்போ தரட்டும்?'' என்றான் உறுதியான குரலில்.

"இன்னும் ஒரு மணி நேரத்திலே. என் வீட்ல வெயிட் பண்ணட்டுமா?"

"வெயிட் பண்ணுங்க."

இருவரும் திரும்பி தங்கள் வாகனங்களுக்கு நடந்தார்கள்.

கதிர் கண்கள் சிவந்து, காரை படுவேகமாகச் செலுத்தி பங்களாவிற்கு வந்தான். வேகமாக படிகள் ஏறினான். அம்மாவின் அறைக்கு வந்தான்.

படுக்கையில் போர்த்திக் கொண்டு படுத்திருந்தாள் ஜெயராணி. ஓசை கேட்டு விழித்தாள்.

"இப்ப எப்படிம்மா இருக்கு ஜுரம்? மாத்திரை சாப்பிட்டீங்களா?"

"சாப்பிட்டேன்ப்பா. குறையலை."

"இப்ப சரியாயிடும்மா" என்று தலையைச் சாத்தினான் கதிர்.

## 24

இன்ஸ்பெக்டர் பத்மநாபன் பைக்கைத் தன் வீட்டின் வாசலில் நிறுத்தி உள்ளே வர உள்ளே எஸ்.பி. உதவி இன்ஸ்பெக்டர்கள், பரத், சுசிலா அனைவரும் ஆர்வத்தோடு காத்திருந்தார்கள்.

"என்ன சொன்னான்?" என்றான் எஸ்.பி.

"பரத் யூகம் செஞ்சது ரொம்ப சரி. ஆர்த்தியை அவன் தான் கொன்னுருக்கான். நான் நிஜமாவே லஞ்சம் கேக்கறேன்னு நம்பிட்டான். இன்னும் ஒரு மணி நேரத்தில பணத்தோட இங்கே வருவான்" என்று தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்து சிறிய கைஸ் டேப் ரெக்கார்டரை எடுத்து மேஜையில் வைத்தார். "பேச்சு பூரா பதிவு செஞ்சுட்டேன்."

"என்ன காரணமாம்?"

"அதைக் கேக்கலை."

"வரப்போறானே... கைது செஞ்சி முறையா விசாரிச்சா சொல்லிட்டுப் போறான். விபூதாத்தை நீங்க சொன்ன மாதிரி ஊசிபோட்டு நெஞ்சு வலி வரவழைச்சுக் கொன்னிருப்பானில்லையா பரத்?"



"அப்படிங்கறது என் யூகம். பாக்கலாம். நாம எல்லாம் பக்கத்து ரூம்ல இருக்கிறது பெட்டர். அவன் வந்துடுவான்" என்றான் பரத்.

அரை மணி நேரத்தில் காரில் வந்தான் கதிர்.

இன்ஸ்பெக்டர் பத்மநாபன மட்டும் ஹாலில் அமர்ந்து கொண்டு, "வாங்க கதிர்! உக்காருங்க. பணம் கொண்டாந்தீங்களா?" என்றார்.

"இல்லை சார்."

"பின்னே எதுக்கு வந்தீங்க?"

"செஞ்ச மூணு கொலைகளையும் ஒப்புக்கிட்டு சரணடையலாம்னு வந்திருக்கேன்."

"என்னது?"

கேட்டுக் கொண்டிருந்த அனைவருமே பக்கத்தறையிலிருந்து வெளிப்பட்டார்கள், ஆச்சரியத்துடன்.

"ஆமாம் என்னைக் கைது செய்யலாம். பரத் ரூமிலே நான் மறைவிட்ட கார்பெட் பயன்படுத்தி என்கிட்டேர்ந்து உண்மையை வரவழைக்க நீங்க இறங்கினதுக்கப்புறம், தப்பிக்க வழி இல்லை. அதனால மிச்சமிருந்த ஒரு கொலையையும் இப்பதான் முடிச்சிட்டு வந்திருக்கேன். விலங்கு போடறீங்களா? எங்கேயாவது கையெழுத்து போடணுமா?"

"என்ன சொல்றீங்க? மிச்சமிருந்த கொலையா?"

"ஆமாம்! ஜெயராணிங்கிற ஒரு நாய்கெட்டவளை இப்பத்தான் கழுத்தை நெறிச்சி, மூச்சு நின்னுடுச்சான்னு பார்த்துட்டு வர்றேன். நீங்க அரெஸ்ட் பண்ணிட்டா அப்புறம் சந்தர்ப்பம் கிடைக்காதே!"

"கதிர்! என்ன ஆச்சு உங்களுக்கு?" ஏன் இந்தக் கொலையை?" என்ற எஸ்.பி. கைஜாடை காட்ட இரண்டு உதவி இன்ஸ்பெக்டர்கள் அவசரமாகப் புறப்பட்டார்கள் பங்களாவிற்கு.

"உயிர் இல்லை. மெதுவாப் போங்க. ஒரிஜினலா கொஞ்சநாள் கழிச்சுத்தான் இந்தக் கொலையைச் செய்ய நினைச்சிருந்தேன். எல்லாம் சொல்றேன். நான் ஆரம்பப் படிப்புலேர்ந்து மாஸ்டர் டிகிரி படிப்பு வரைக்கும் படிச்ச நிறுவனங்கள் எனக்குக் கத்துக் கொடுத்ததெல்லாம் ஒழுக்கம்! ஒழுக்கம்! ஒழுக்கம்! அந்த

விஷயத்தில நான் ரொம்ப கண்டிப்பு. காலேஜ்ல ஒரு தடவை டூர் போனப்போ ஒரு பொண்ணுகிட்டே என் ஃபிரண்டு தப்பா நடந்தான். பெரிசா எதுவும் இல்லை. விசிலடிச்சி ஆபாசமா ஒரு கமெண்ட் சொன்னான். அதுக்காக நான் அவனை அடிக்கலை. ஆனா யாருக்கும் தெரியாம அவனோட ஏழு நல்ல சட்டைகளை பிளேடு வச்சி கிழிச்சு வச்சேன். மறுநாள் எதுவும் தெரியாதவனாட்டம் இருந்துட்டேன். என்னால நேரடியா மோத முடியாது. ஆனா அவனை அப்படி தண்டிச்சதில எனக்கு ஒரு திருப்தி.

என குடும்பத்தின் மேல எனக்கு ஆரம்பத்திலேர்ந்தே ஒட்டுதல் இல்லை. ஹாஸ்டல்களிலேயே வளர்ந்தேன். எப்பவாவது வந்து பார்ப்பாங்க. என்னைப் பெத்த ஆறு மாசத்தில உடம்பு சரியில்லாமப் போய் எங்கம்மா இறந்துட்டாங்க. கைக்குழந்தையான என்னை வளர்க்கிறதுக்காக இரண்டாம் கல்யாணம் செய்துகிட்டார் அப்பா. இதான் எனக்கு சொல்லப்பட்ட தகவல். சரி, உலகம் நம்புற தகவல். நான் படிப்பு முடிச்சுட்டு இங்கே வந்தப்போ அப்பா, அம்மா, தங்கை அடிக்கிற கூத்துக்களைப் பார்த்து அதிர்ச்சியாச்சு. அப்பா பெத்தடின் அடிக்ட்டா இருக்கார். அம்மா பீட்டர் ஸ்காட்ச் குடிக்காம தூங்கினதில்லை. தங்கச்சி கஞ்சா அடிச்சுட்டு பாய் ஃபிரண்ட்சோட சுத்தறா. எவ்வளவு ஒழுக்கமா வளர்ந்தவன் நான்? என் வீட்லயே சாக்கடை! ஓடிடலாமான்னு கூட நினைச்சேன். முடியலை. திருத்த முடியுமான்னு பார்த்தேன். முடியலை. எனக்கு அவங்க பழக்கவழக்கங்கள் வெறுப்பைத் தந்துடிச்சு, கொலை வெறியைத் தரலை.

அதைத் தந்தது மூணு சம்பவங்கள். ஒரு நாள் சித்தியும், அப்பாவும் முழு போதையில பேசிட்டிருந்தப்போ யதேச்சையா ரூமைக் கடந்த நான் 'கல்பனா'ன்னு எங்கம்மா பேர் காதில் விழுந்ததாலே நின்னு கவனிச்சேன். 'என்மேல உங்களுக்கு வரவர ஆசை குறையுது'ன்னு சித்தி சொன்னதுக்கு அப்பா சொன்ன பதில், 'உன் மேல உள்ள ஆசையில கல்பனாவுக்கு ஏராளமா தூக்க மாத்திரை போட்டு ஒரேயடியா தூங்க வச்சவன் நான். என்னைப் பார்த்துக் கேக்கறியா'ன்னாரு. இடி விழுந்த மாதிரி ஆச்சு எனக்கு. பாவி! சித்தியைக் கல்யாணம் செய்துக்கிறதுக்காக எங்கம்மாவை கொலையே செஞ்சிருக்கிற பாவி அவன்! இரண்டாவது சம்பவம்- அப்படி ஆசை கொட்டற அந்த ஜெயராணி அப்பா ஊர்ல இல்லாத சமயம் மேனேஜர் சோமனோட சந்தோஷமா இருக்கிற கண்றாவிக் காட்சியையும் யதேச்சையாய்ப் பார்த்துத் தொலைச்சுட்டேன். இன்னொரு அதிர்ச்சிக் கத்தி நெஞ்சில குத்தப்பட்டது தங்கச்சி



விரைவில் - எதிர்பாருங்கள்
"உங்கள் ஜூனியரில்
சுபா வின் அசத்தும் நாவல்
"ரத்த வீழ்ச்சி"
ரத்தத்தைச் சூடேற்றும் திகில் பக்கங்களுடன்...
'அப்பு-பப்பு' வின்
அட்டகாசமான லூட்டிகள்
தினம் ஒரு தங்கப்பதக்கம் -
தினம் ஒரு வெள்ளிப்பதக்கம்
இன்றே - முன் பதிவு செய்யுங்கள்

ரசிகர்களின் ஆவலை பூர்த்தி செய்யும்
அன்பு
விஜயகாந்த்
தீபாவளி ஸ்பெஷல் இதழ்
★ கண்ணுபட போகுதய்யா -
அரிய புகைப்படங்களுடன் தகவல்கள்
★ விஜயகாந்தின் - மின்மினித் தொடர்
★ விஜயகாந்தின் - ஸ்பெஷல் பேட்டி

ஆர்த்தி மனைவியா நம் வயத்தில எவனோ கொடுத்த கருவை கலைச்சுக்கிட்டே செய்தி அந்த ஆல்பத்தில் நான் மூலமா தெரிஞ்சது. ரொம்ப வெறுத்துப் போயிட்டேன். ஒழுக்கக் கேடான ஒரு குடும்பத்திலே நான் மட்டும் தனித் தீவு! என்னால சகிச்சுக்க முடியலை. மூணு பேரையும் தீர்த்துக்கட்டறதுதான் பெரிய தண்டனையா பட்டது. தீர்மானிச்சேன்.

முதல்ல அப்பா. அன்னைக்கு மைசூர் போய் திரும்பினதினம் ராத்திரி அவர் ரூமுக்குள்ளே ரகசியமா போய் ஏர் பபிளோட வைட்டமின் ஊசி ஒன்னு போட்டுட்டு வந்துட்டேன். அவர் பத்திரப்படுத்தின பணப் பெட்டி பத்தி எனக்கு அக்கறை இல்லை. என்னைக்குமே நான் பணத்தை மதிக்காதவன். ஆனா சித்தி அதைக் கண்டுபிடிக்க பரத்தை வரவழைச்சாங்க. சோமனோட போல நீல ஜெர்கின் போட்டுக்கிட்டு படகில போய் முதல மிரட்டல் கடிதம் சேர்த்தேன். என் மேல சந்தேகம் வரக்கூடாதுன்னு அப்பா சாவில சந்தேகம்னு நானே முந்திக்கிட்டு ஆர்ப்பாட்டம் செஞ்சேன். ஏன்னா, போஸ்ட் மார்ட்டத்தில கண்டுபிடிக்கவே முடியாதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்.

அடுத்தது ஆர்த்தி. நானே போன் செய்து குரல் மாத்தி மிரட்டி பணம் எடுத்துக்கிட்டு பத்து மணிக்கு சில்வர் பாம்ஸ் பக்கத்திலே வரச் சொன்னேன். ஃபாதரோட செஸ் விளையாடிட்டு ஒன்பதரைக்குப் புறப்பட்டு நான் அங்கே போனேன். அவளை மயக்கப்படுத்தி காரில உக்கார வச்சி, காரைத் தள்ளிவிட்டேன் சரிவுல. மூணாவது கொலைதான் கடக்கட இப்ப செஞ்சது. நிச்சயமா எனக்குத் தூக்குதண்டனைதான் கிடைக்கும். இப்போ திரண்ட சொத்துகள் எல்லாமே என்னதுதான். அவ்வளவையும் அனாதை இல்லங்களுக்கு நான் எழுதி வைக்க விரும்புகிறேன். ஏற்பாடு செய்வீங்களா?" - என்ற சதீஷை அனைவரும் கண்கலங்கப் பார்த்தனர்.

"பரத்! அந்தப் பணப் பெட்டியை ஒரு வேளை நீங்க கண்டுபிடிச்சீங்களா...?"

"கண்டுபிடிச்சாச்சு மிஸ்டர் கதிர்! பாம்ஸ் தோட்டத்தில 17 ஆம் நம்பர் மரத்துக்கு அடியில் அந்தப் பெட்டியைப் புதைச்சி வச்சிருக்கார். தோண்டிப் பார்த்து எடுத்துட்டு வந்தாச்சு. எங்க கார் டிக்கில இருக்கு. எடுத்தது போலீசுக்குக் கூடத் தெரியாது. அது தனிசேஸ். முறையா அதை உங்கம்மாகிட்டே ஒப்படைக்கணும்னு இருந்தேன்."



"அதுக்குள்ளே அம்மா அவசரமா மேல போயிட்டாங்க. அந்தப் பணத்தை அரசாங்கம் ஏழைகளுக்கான ஏதாவது ஒரு திட்டத்துக்கு பயன்படுத்தட்டும். ஒப்படைச்சிடுங்க முறையா" என்றான் கதிர்.

## 25



போலீஸ் ஏற்பாடு செய்து வழியனுப்பி வைத்த கார் பார்வையிலிருந்து மறைந்தது. "சதீஷை எப்படி சந்தேகப்பட்டீங்க பரத்?" என்றாள் சுசிலா.

"ஜெயராணி சொந்த அம்மா இல்லை. ஆர்த்தி சொந்த தங்கை இல்லைங்கறதும் ஒரு புதுக்கோணம் தோணிச்சு. காரணம் நினைக்க முடியலை. ஆனா இவனா இருக்கலாமோன்னு இவனை வச்சு சூழ்ச்சிகளை யோசிச்சேன். டாக்டர்கிட்டே பேசி சாத்தியம்னு தெரிஞ்சதும். ரோஸாரியோ வீட்ல இவன் புறப்பட்ட டயம் தெரிஞ்சதும் குருட்டாம் போக்குல ஒரு அதிரடி நடத்தலாமான்னு நினைச்சுத்தான் இன்ஸ்பெக்டர்கிட்டே கேட்டேன். உதவியா அவன் தவறவிட்ட கார்ச் இருந்தது. ஆனா அவன் கில்லாடி! இருக்கட்டும் அவசரமா கடைசி கொலையை செஞ்சதுல தான் நாம ஏமாந்துட்டோம். ஆனா அதுக்காக நாம பேசின ஒப்பந்தப்படி இரண்டு முத்தம் நீ கொடுத்துத்தான் ஆகணும் சுசி! டிரைவர் முடிக்க மாட்டார். கமான்"

"முடியாது! கடைசி கொலை நடக்க விட்டதால முடியாது!" என்றாள் சுசி.

"நீங்களே சொல்லுங்க. சுசிலா சொல்றதிலே ஏதாச்சும் நியாயம் இருக்குதா?"

❀❀❀❀❀

கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை, கட்டுரைகளை திருத்தி அமைக்கவும், சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. உரிமையாளரும், அச்சிட்டு வெளியிடுபவரும் எஸ்.பி. ராமு. ஸ்ரீ பரமேஸ்வரி பிரிண்டர்ஸ் அண்ட் பைண்டர்ஸ், 9, சாமிச்சாரி தெரு, புதுப்பாக்கம், சென்னை-14 ல் அச்சிடப்பட்டு, 286/ திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5லிருந்து வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்: எஸ்.பி. ராமு

துணையாசிரியர்: சுசிலா  இணை ஆசிரியர்: பரத்